**தலைப்பு 111 – சுகாதாரஅமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 111 – சுகாதார அமைச்சின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சுகாதார அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 04 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சுகாதார அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.1(அ) முதல் (கி) வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்கள் தொடர்பாக முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் போது நிதியல்லாச் சொத்துக்களின் கிரயம் ரூபா 46,940.73 மில்லியனால் குறைவாகக் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 7,102.99 மில்லியன் தொகை 2019 ஆம் ஆண்டின் போது புதிதாக காணி கைப்பற்றலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | பரிந்துரையுடன் இணங்குவதுடன் காணப்படுகின்ற பிரச்சனைகள் அரச கணக்குகள் திணைக்களத்துடன் கலந்துரையாடி தீர்த்து வைப்பதற்காக 61 சுகாதார நிறுவனங்களுடன் மாதாந்த கணக்கு பொழிப்புக்கள் களஞ்சிய மெய்மையாய்வுப் பிரிவுக்கு மாதாந்தம் பெற்று சொத்துக் கணக்கில் வைப்பதை பரீட்சிப்பதுடன் 2024.05.13 ஆந் திகதி நடைபெற்ற அரசாங்கக் கணக்குக் குழுவின் கட்டளைகளின் பிரகாரம் 06 | இந்த தவறை சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மாதங்களுக்குள் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டின் போது மூலதன சொத்துக்கள் கைப்பற்றல் ரூபா 14,793.13 மில்லியனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டமையால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூலதன சொத்துக்கள் அதற்கு சமமான பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | திறைசேரி கணக்குக் கூற்றின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் போது வைப்பற்றப்பட்ட கட்டிடம் மற்றும் நிர்மாணக் கிரயம் ரூபா 6,501.94 மில்லியன் நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் போது கைப்பற்றப்பட்ட சொத்துக்களின் கிரயம் ரூபா 2,967.27 மில்லியன் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியல்லாச் சொத்துக்கள் அப்பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | திறைசேரியினால் பேணிச் செல்லப்படுகின்ற எஸ்ஏ 80 நிதியல்லாச் சொத்துக்களின் கணக்குகள் மாதாந்தப் பொழிப்பு மற்றும் எஸ்ஏ 82 திரண்ட நிதியல்லாத சொத்து கணக்கு அறிக்கையின் பிரகாரம் | -மேற்படி- | வேறுபாடுகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியல்லாச் சொத்துக்களின் கிரயத்தில் காணப்பட்ட ரூபா 19,789.44 மில்லியன் வேறுபாட்டுக்கான காரணத்தைக் கண்டறிந்து தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. வேறுபாடுகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |
| (உ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிநிலைமைக் கூற்றின் பிரகாரம் 2021 சனவரி 01 இல் உள்ளவாறு ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் கிரயம் ரூபா 192,229.15 மில்லியன் ஆக இருந்த போதிலும் திறைசேரியினால் பேணிச்செல்லப்பட்ட நிதியல்லாச் சொத்துக் கணக்கின் மாதாந்த பொழிப்பு (SA 80) மற்றும் திரண்ட நிதியல்லாச் சொத்துக் கணக்கு அறிக்கை (SA 82) இன் பிரகாரம் அப்பெறுமதிகள் முறையே ரூபா 172,439.71 மில்லியன் மற்றும் ரூபா 184,327.77 மில்லியன் ஆனமையால் காணப்பட்ட முறையே ரூபா 19,789.44 மில்லியன் மற்றும் ரூபா 7,901.38 மில்லியன் வேறுபாடுகளுக்கான காரணம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2021 ஆம் ஆண்டின் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் செலவினக்கூற்று (ACA 2(i) படிவம்) மற்றும் திறைசேரியால் பேணிச்செல்லப்படுகின்ற மாதாந்த செலவினப் பொழிப்பு (SA 10) இன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது மூலதன சொத்துக்கள் கைப்பற்றல் மற்றும் திறைசேரியினால் பேணிச்செல்லப்படுகின்ற திரண்ட நிதியல்லாச் சொத்துக் கணக்கு அறிக்கை (SA 82) இன் பிரகாரம் அப்பெறுமதிகளுக்கிடையிலான ரூபா 16,877.89 மில்லியன் வேறுபாட்டிற்கான காரணம் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (எ) | 2020 ஆம் ஆண்டின் போது பல்வேறு உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்கள், அமைப்புக்கள் மற்றும் நபர்களினால் அமைச்சிற்கும் மற்றும் அதன் கீழ் காணப்படுகின்ற வைத்தியசாலை நிறுவனங்களுக்கும் பல்வேறு பிரிவுகளுக்கும் நிதியல்லா உதவி அல்லது நன்கொடையாக பெறுமதி ரூபா 1,339.25 மில்லியன் ஆன பொருள் உபகரணங்கள், மருத்துவ வழங்கல்களின் பெறுமதி அறியாத பொருட்கள் மற்றும் உபகரணங்களில் 2,444 அலகுகள் வழங்கப்பட்டிருந்தவைகள் உறுதிப்படுத்தப்பட்ட போதிலும் அவற்றின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | -மேற்படி- | கணக்கீடு செய்யப்படாத சகல சொத்துக்களும் இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | 2010 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அமைச்சினால் அமுல்படுத்தப்பட்ட 54 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 7,603.09 மில்லியன் செலவினத்தில் உள்ளடக்கப்பட்ட நிதியல்லாச் சொத்துக்கள் கைப்பற்றல் மற்றும் அபிவிருத்திக்காக செலவிடப்பட்ட செலவினங்கள் நிதியல்லாச் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | செயற்திட்டத்தின் கீழ் கைப்பற்றப்பட்ட சகல சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட்டமை உறுதிப்படுத்துகின்ற எழுத்து மூல சான்றுகள் விரைவாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஐ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிநிலைமைக் கூற்றுத் தொடர்பான கூற்றின் பிரகாரம் மற்றும் திறைசேரி திரண்ட நிதியல்லாச் சொத்துக்கணக்கு அறிக்கையின் பிரகாரம் (SA 82) அத்திகதியில் நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி 2022 ஆம் ஆண்டில் திறைசேரி திரண்ட நிதியல்லாச் சொத்துக்களின் கணக்கு அறிக்கை (SA 82) இன் பிரகாரம் 2022 சனவரி 01 இல் உள்ளவாறு அப்பெறுமதிகளுக்கு இடையே ரூபா 5,244.56 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் இந்த வேறுபாட்டுக்கான காரணம் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்க வில்லை. | -மேற்படி- | வேறுபாடுகளுக்குரிய காரணங்களைக் கண்டறிந்து தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | 2022 ஆம் ஆண்டின் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் செலவினக்கூற்று (ACA 2(i) படிவம்) திறைசேரி அச்சிடல் குறிப்பு SA 10 இன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின் போது மூலதன சொத்துக்களைக் கைப்பற்றல் மற்றும் திறைசேரியின் திரண்ட நிதியல்லாச் சொத்துக் கணக்கின் அறிக்கை (SA 82) இன் பிரகாரம் அறவிடப்பட்ட பிரகாரம் அந்த பெறுமதிகளுக்கிடையே ரூபா 11,423.16 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஓ) | கொவிட் 19 அவசர சிகிச்சை மற்றும் சுகாதார முறைமை தயார் செய்யும் செயற்திட்டத்தினால் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,326.05 மில்லியன் நிதியல்லாச் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இந்த சொத்துக்களின் கிரயம் அமைச்சின் நிதியல்லா சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | செயற்திட்டத்தின் கீழ் கைப்பற்றப்பட்ட சகல சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட்டமையை உறுதிப்படுத்துகின்ற எழுத்து மூல சான்றுகள் விரைவாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஔ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட சுகாதார அமைச்சினதும் அதற்குரிய 59 நிறுவனங்களுக்கும் உரிய 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான தகவல்களை காண்பிக்கின்ற கணனி மென்பொருள் பிரதியின் பிரகாரம் வைத்தியசாலை/ 25 நிறுவனங்களின் | -மேற்படி- | விரைவாக இந்த சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணிகளைப் போன்று வைத்தியசாலைகள்/ 05 நிறுவனங்களின் கட்டடங்களும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (க) | இலங்கை பொலிஸ் திணைக்களம் மற்றும் சுற்றுலா மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சுக்கு அதிகாரம் கையளிக்கப்பட்ட இரண்டு வாகனங்களின் கிரயம் ரூபா 11,550,000 தொகை 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சுகாதார அமைச்சின் நிதியறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | இந்த தவறையும் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கா) | கணக்காய்வினால் கோரப்பட்ட தகவல்கள் சில நிறுவனங்களினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. அமைச்சின் கீழ் காணப்படுகின்ற வைத்தியசாலைகள், ஏனைய சுகாதார நிறுவனங்கள் பயிற்ச்சி நிறுவனங்கள் மற்றும் 11 பிரிவுகளில் 2017, 2018, 2019 என்ற ஆண்டுகளில் உள்ளடக்கிய கூட்டுமொத்தமாக ரூபா 2.66 மில்லியன் கிரயமான பொருட்கள் மற்றும் பதுளை மாகாண பொது வைத்தியசாலைக்குரிய கிரயம் குறிப்பிடப்படாத பொருட்கள் புத்தகங்களிலிருந்து பதிவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த அகற்றப்பட்ட பொருட்களின் கிரயம் அமைச்சின் | -மேற்படி- | கணக்காய்வினால் கோரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் நிறுவனத்தால் வழங்க வேண்டியிருந்ததுடன் விற்றுத்தீர்க்கப்பட்ட சொத்துக்களுக்குரிய சரியான சீராக்கம் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளல் வேண்டும். அவ்வாறே மெய்மையாய்வு சபை அறிக்கைகள் கிடைத்த பின்னர் முரண்பாடுகள் மற்றும் பற்றாக்குறைகள் மற்றும் தொலைந்துபோன போன்ற எதுவும் இருக்குமாயின் நிதிப்பிரமாணம் 757(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களில் நிதியல்லாச் சொத்துக்களிலிருந்து அகற்றப்பட்டிருந்ததா என கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை. அவ்வாறே சில வைத்தியசாலைகளில் அகற்றல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்த சந்தர்ப்பமும் நியமிக்கப்பட்ட விற்றுத்தீர்த்தல் சபையினால் உரிய விற்றுத்தீர்த்தல்கள் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்படாதிருந்த சந்தர்ப்பங்களும் வருடாந்த பொருள் மெய்மையாய்வுக்குரிய பற்றாக்குறை தொடர்பாக உரிய நிதியப்பிரமாணம் 757(2) இன் பிரகாரம் காணப்படாத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. | | |
| (கி) | நிறுவனம் / வைத்தியசாலை மற்றும் 31 பிரிவுகளுக்கு 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 2,588.30 மில்லியன் பெறுமதியான பொருட்கள் மற்றும் நிறுவனம்/ வைத்தியசாலைகள் மற்றும் 30 பிரிவுகளுக்கு கிடைக்கப்பெற்ற பெறுமதி தொடர்பாக உள்ளடக்கப்படாத தகவல்கள் உள்ளடக்கப்படாத 2057 சந்தர்ப்பங்களுக்கு உரிய பொருட்கள் முறையான பிரகாரம் பதிவேடுகளுக்கு கொண்டுவந்து அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | -மேற்படி- | சகல நன்கொடைகளும் குறித்துரைத்த பிரகாரம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (கீ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதிநிலைமைக் கூற்றின் பிரகாரம் 2023 சனவரி 01 இல் உள்ளவாறு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 195,221.42 மில்லியன் ஆகும். எனினும் திறைசேரி அச்சிடல் குறிப்பு, நிதியல்லாச் சொத்துக் கணக்கின் மாதாந்த பொழிப்பு (SA 80) இல் 2023 சனவரி 01 இல் உள்ளவாறு ஆரம்ப மீதி ரூபா 200,118.27 மில்லியன் ஆகும். | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் இந்த தவறை சரிசெய்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேறுபாடுகளுக்குரிய காரணங்களை கண்டறிந்து தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கு) | 2022 ஆம் ஆண்டின் திரண்ட நிதியல்லாச் சொத்துக் கணக்கு அறிக்கையில் (SA 82) இன் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 200,118.27 மில்லியன் ஆக இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட அந்த அறிக்கையின் 2023 சனவரி 01 இல் உள்ளவாறு அப்பெறுமதி ரூபா 195,221.42 மில்லியன் ஆகும். இதன் பிரகாரம் ரூபா 4,896.85 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் இந்த வேறுபாட்டுக்கான காரணம் விளக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் SA 82 தயாரித்தல் அரச கணக்குகள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படுவதுடன் கடந்த ஆண்டு இறுதியில் மீதி இந்த ஆண்டின் ஆரம்ப மீதியாக கொண்டுவராமைக்குரிய காரணம் அரச கணக்குகள் திணைக்களத்தின் மூலம் உறுதிப்படுத்தி சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (கூ) | 2023 ஆம் ஆண்டின் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் செலவினக்கூற்று (ACA 2(i) படிவம்) மற்றும் திறைசேரி அச்சிடல் குறிப்பு SA 10 இன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் போது மூலதன சொத்துக்கள் கைப்பற்றல் செலவினம் ரூபா 11,605.50 மில்லியன் ஆக இருந்த போதிலும் திறைசேரியின் திரண்ட நிதியல்லாச் சொத்துக்கணக்கு அறிக்கையின் பிரகாரம் (SA 82) மீளாய்வாண்டின் சொத்துக் கொள்வனவு ரூபா 3,698.37 மில்லியன் ஆனமையால் சொத்துக்களின் கிரயம் ரூபா 7,907.13 மில்லியன் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் ஆரம்ப மீதி (காணி மற்றும் கட்டிடம்) சரிசெய்யப்பட்டுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டில் சகல கொள்வனவுகளும் மூலதனமாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் 2024.07.31 ஆந் திகதி வரையில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (கெ) | அமைச்சின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 204,292.96 மில்லியன் ஆக இருந்த போதிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட சுகாதார அமைச்சினதும் அதற்குரிய 63 நிறுவனங்களினதும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான தகவல்களைக் காண்பிக்கின்ற கணனி மென்பொருள் பிரதியின் பிரகாரம் அந்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 215,870.86 மில்லியன் ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 11,577.90 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் இந்த வேறுபாடுகளுக்குரிய காரணங்களைக் கண்டறிந்து தேவையான சீராக்கங்களை மேற்கொண்டு சரியான தகவல்கள் சமர்ப்பிக்கப்படும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (கே) | 2024 மார்ச் 25 இல் உள்ளவாறு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்ட 05 செயற்திட்டங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுமொத்தமாக ரூபா 6,620.90 மில்லியன் நிதியல்லாச் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் இந்த சொத்துக்களின் கிரயம் ரூபா 3,385.32 மில்லியன் சொத்துக்கள் மாத்திரம் நிதியல்லாச் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் அதன் பிரகாரம் உரிய வேறுபாட்டுக்கான காரணங்களைக் கண்டறிந்து தேவையான சீராக்கங்களை மேற்கொண்டு சரியான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்க்ப்படும். | சரியான பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கை) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சுகாதார அமைச்சு மற்றும் அதற்குரிய வைத்தியசாலைகள்/ 63 நிறுவனங்களில் காணப்பட்ட நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான தகவல்களில் காண்பிக்கப்படுகின்ற கணனி மென்பொருள் பிரதியின் பிரகாரம் வைத்தியசாலைகள்/ 27 நிறுவனங்களின் காணிகள், வைத்தியசாலைகள்/ 04 நிறுவனங்களில் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் 2024.04.30 ஆம் திகதி வரையும் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் சுகாதார அமைச்சுக்குரிய நிறுவனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் சொத்துக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | விரைவாக இந்த சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (கொ) 2018 ஆம் ஆண்டின் பின்னர் பேராதனை வைத்தியசாலை வளவில் சிறுநீரக சிகிச்சை அலகு மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தின் நிதியேற்பாட்டின் கீழ் 03 மாடிகளை உடைய சத்திர சிகிச்சை வாட் தொகுதியொன்று நிர்மாணிக்கப்பட்ட போதிலும் இந்த கட்டிடத்தின் பெறுமதி இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அந்த கட்டிடங்களின் பெறுமதியை கணக்குகளில் உள்ளடக்கி கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்காய்வு சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மொத்தக் கிரயம் 204,292.96 மில்லியன் ஆன நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான விரிவான பட்டோலை, பொருள் மெய்மையாய் அறிக்கை மற்றும் CIGAS நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் காண்பிக்கப்படுகின்ற சொத்துக்கள் தொடர்பான தகவல்கள், கடந்த ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட சொத்துக்களின் மீதிக்கு சீராக்கப்பட்டிருந்த ரூபா 20,775.78 மில்லியனுக்குரிய மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,698.37 மில்லியன் சொத்துக் கொள்வனவுகளுக்கு உரிய ரூபா 6,944.27 மில்லியன் சொத்துக்கள் விற்றுத்தீர்ப்பதற்குரிய விரிவான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாதிருந்தமையால் அப்பெறுமதிகளை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | இந்த தகவல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்க வேண்டியுள்ளதுடன் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 42(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | துணை மருத்துவ சேவைக்குரிய 08 பதவிகளுக்குரிய 238 உத்தியோகத்தர்கள், துணை மருத்துவ சேவைக்குரிய 03 பதவிகளுக்குரிய 111 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபட்டிருந்தனரா எனவும் சேவையில் இருக்கின்ற எந்வகையான சேவை நிலையங்களில் அவர்கள் சேவையாற்றுகின்றார்கள் என்பது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | இடம்மாற்றலாகிச் சென்ற, வேலை நீக்கத்திற்கு உட்பட்ட, வேலையை விட்டுச் சென்ற மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற 69 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 14,301,604 தொகைக்குரிய ஆதனங்கள், வாகனக் கடன் கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | அமைச்சிக்கு சொந்தமான வாகனங்களின் பயன்பாடு தொடர்பான செயலாற்றலை மதிப்பிடுவதற்காக தேவையான 2021, 2022 மற்றும் 2023 என்ற மூன்று ஆண்டுகளுக்கும் உரிய தகவல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அதற்கு மேலதிகமாக பல்வேறு விடயங்கள் தொடர்பான தகவல்களைக் கோரும் 34 கடிதங்களில் பெறப்பட்ட கணக்காய்வுக்குத் | -மேற்படி- | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| தேவையான தகவல்கள் 2024 ஏப்ரல் 09 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்படாமை அல்லது முழுமையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை அல்லது அதற்கான காரணங்கள் துறைசார்ந்த ரீதியில் உரியவாறு கணக்காய்வு செய்ய முடியாதிருந்தது. | | |

### 1.6.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளவேண்டிய உறுதிப்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையான பிரகாரம் குறித்துரைத்த கால எல்லையில் சகல கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளிக்க வேண்டியிருந்தமை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் 2024 ஏப்ரல் 04 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்படாத மொத்த கணக்காய்வு ஐயவினாக்களின் எண்ணிக்கை 70 ஆக இருந்ததுடன் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் பதலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்களின் எண்ணிக்கை 06 ஆகும். | ஒரு வருடத்திற்கு மேற்பட்ட 06 கணக்காய்வு ஐய வினாக்களுக்காக விரைவாக பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ஏனைய கணக்காய்வு ஐயவினாக்களுக்காகவும் இந்த அமைச்சு மற்றும் அதற்குரியதாக காணப்படுகின்ற வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களைத் தொடர்புபடுத்தி விரைவாக பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சகல கணக்காய்வு ஐயவினாக்களுக்காகவும் குறித்துரைத்த காலத்தில் பதிலளிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுகாதார அமைச்சினால் செலவினத் தலைப்பு இலக்கம் 111 கீழ் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் குறிப்புக்கள் (iii) படிவத்தின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட கடப்பாடுகளின் மீதி | | |

| | | |
|---|---|---|
| ரூபா 5,519.64 மில்லியன் ஆக இருந்ததுடன் பொறுப்புக்களின் மீதி ரூபா 607.95 மில்லியன் ஆகும். அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (அ) நிதிப்பிரமாணம் 94(i) இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக நடவடிக்கைகள் எடுத்தமையினால் அமைச்சுக்குரிய நிறுவனங்களால் செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 17 செலவின விடயங்களுக்கு வழங்கப்பட்ட நிதியேற்பாட்டில் சேமிப்பை விஞ்சி ரூபா 1,395.07 மில்லியன் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 05 செலவின விடயங்களுக்கு வழங்கப்பட்டிருந்த நிதழயேற்பாட்டில் சேமிப்பை விஞ்சி ரூபா 81.71 மில்லியன் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 1,476.78 மில்லியன் நிதியேற்பாட்டை விஞ்சி பொறுப்புக்களுக்கு உடன்பட்டிருந்தது. | இணங்குவதுடன் இதன் எதிர்காலத்தில் நிதியேற்பாட்டை விஞ்சி பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் ஏற்படுத்தாதிருக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் உள்ளடக்குதல் அல்லது புதிதாக ஏற்படுத்தப்பட்ட செலவின விடயங்கள் அல்லது அல்லாத செயற்பாட்டு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 15 செலவின விடயங்களுக்காக ரூபா 79.18 மில்லியன் ஆன பொறுப்புக்களை உடன்பட்டமைக்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | இணங்குவதுடன் சுகாதார அமைச்சுக்கு சொந்தமான வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களில் கணிசமான பொறுப்புக்களின் அளவு உள்ளடக்கும் போது ஏற்பட்ட தவறினால் சில செலவின விடயங்கள் பிழையாக குறிப்பிடப்பட்டுள்ளது. | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மருத்துவ வழங்கல் பிரிவிற்குரிய அந்த பிரிவின் பிரதான கணக்காளரால் சமர்ப்பிக்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றின் பிரகாரம் பொறுப்புக்களின் மீதி ரூபா 79,784.95 மில்லியன் ஆக இருந்த போதிலும் அமைச்சின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அந்த மீதி ரூபா 1,274.91 மில்லியன் ஆனமையால் ரூபா 78,510.04 மில்லியன் ஆன பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இணங்குவதுடன் இது தொடரபாக மருத்துவ வழங்கல் பிரிவில் விசாரணை செய்யப்பட்டுள்ளதுடன் அதற்கான பதில் கிடைத்தவுடன் உங்களுக்கு சமர்ப்பிக்கப்படும். எனினும் காணப்படுகின்ற நிதியேற்பாடுகளின் கீழ் கடப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளுமாறு சகல நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் மருத்துவ வழங்கல் பிரிவில் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றின் பிரகாரம் அரச மருந்தக கூட்டுத்தாபனம் மற்றும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மற்றும் அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனம் என்ற இரண்டு நிறுவனங்களுக்கும் செலுத்த வேண்டிய தொகை மற்றும் அந்த இரண்டு நிறுவனங்களினதும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மருத்துவ வழங்கல் பிரிவில் இருந்து அறவிடப்பட்டுள்ள தொகைக்கு இடையே ரூபா 26,685.72 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது. | ரூபா 67,908.15 மில்லியன் பெறுமதியொன்று தாமத வழுவின் காரணமாக பொறுப்பாக குறிப்பிடப்பட்டதுடன் SPC மற்றும் SPMC என்ற நிறுவனங்களுக்கு உரிய செலவின விடயத்துக்காக பொதுத்திறைசேரியிலிருந்து செலுத்தப்பட்ட கட்டுநிதிகளின் பிரகாரம் தீர்த்து வைக்கப்பட்ட பெறுமதி ஆகும். | இந்த மீதிகளை இணக்கம் செய்து நிறுவனங்களுக்கிடையே இணக்கப்பாட்டிற்கு வருதல் வேண்டும். |

## 2.2 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்த்தல்

### 2.2.1 செயல் நிமித்த உபகட்டுநிதி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2015 யூலை 14 ஆந் திகதிய இலக்கம் 03/2015 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு பத்து நாட்களுக்குள் பெறப்பட்ட செயல் நிமித்த உபகட்டுநிதி தீர்த்து வைக்கப்படவேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் 67 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 3.12 மில்லியன் ஆக செயல்நிமித்த உபகட்டுநிதி உரிய பணிகள் முடிவடைந்து 01 இற்கும் 02 மாதங்களுக்கும் இடையிலான காலம் கடந்திருந்த போதிலும் தாமதமாகி தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. | அந்தந்த பிரிவுகளில் காணப்படுகின்ற மனிதவளங்களின் பற்றாக்குறை, தொடர்ச்சியான நிகழ்ச்சித் திட்டங்கள் பேணிச் செல்லல், கொழும்பிலிருந்து தூர உள்ள பிரதேசங்களின் நிகழ்ச்சித்திட்டங்களை பேணிச்செல்லல், பதவிநிலை உத்தியோகத்தர்களின் அலுவலகத்திலிருந்து வெளியே சென்று கடமைகளுக்காக பங்குபற்றுதல் போன்ற விடங்களின் காரணமாக தாமதம் ஏற்பட்டிருந்ததுடன் எனினும் இந்த பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டு ஏற்பாட்டு முறைகள் மேலும் முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயல்நிமித்த உபகட்டுநிதி பணிகள் நிறைவுபெற்றவுடன் தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 2023 திசெம்பர் 31 ஆந் திகியில் முடிவடைந்த ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஏனைய முற்பணம் (7000-0-0-111-0-002) இன் கீழ் மருவ வழங்கல் பிரிவிற்கு பல வருட காலங்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட ரூபா 1,222,599,026 முற்பணம் மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை | முற்பணக் கணக்குகளை தீர்த்து வைப்பதற்கு தேவையான பரிந்துரை பெற்றுக்கொள்ளுமாறு அரச கணக்குகள் திணைக்களத்தின் ஆலோசனையின் பிரகாரம் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்தக் குழு தற்போது கூடப்பட்டு 2024 ஆம் ஆண்டில் பெயரளவில் நிதியேற்பாடு பெற்று | தீர்க்கப்படாத முற்பணங்களைத் தீர்க்கும் போது கணக்கீடு செய்ய வேண்டியிருந்ததுடன் இந்த முற்பணங்களை விரைவாக தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த செயலிழந்த முற்பண மீதியை தீர்த்து வைத்தல் பொருத்தமானது என பரிந்துரை செய்திருந்தது. | |
| (இ) இலங்கை பல் வைத்தியசாலை மற்றும் அநுராதபுர போதனா வைத்தியசாலைகளில் 2002 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது ஏற்பட்ட நிதி கொள்ளையடித்தலுக்காக உரிய நட்டத்தை தீர்த்து வைப்பதற்காக பொதுத்திறைசேரியால் வழங்கப்பட்ட தொகையில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத முறையை ரூபா 2,288,037 மற்றும் ரூபா 6,321,785 முற்பணம், நிதிக்கூற்றுக்களில் (ஏசீஏ- 5) நானாவித முற்பணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்காதிருப்பதுடன் இந்தப் பெறுமதி 2023 திறைசேரி அச்சிடல் பொறுப்புக்களில் 111 செலவினத் தலைப்பின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது. | பொதுத்திறைசேரியுடன் கலந்துரையாடி தேவையான சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 2.2.2 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு வழங்குதல் மற்றும் தீர்த்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணம் "பீ" கணக்கின் இணக்கக்கூற்று தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது. | | |
| (அ) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேவையில் இருந்த 264 உத்தியோகத்தர்களுக்குரிய 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட கடன் மீதி 2023 ஆம் | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

ஆண்டின் போது அறவிடப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இணக்கக்கூற்றின் இணைப்பு 3 இன் பிரகாரம் ஏனைய அரசாங்க அமைச்சுக்கள்/ திணைக்களங்களுக்கு இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களை மதிப்பீடில் காணப்பட்ட கடன்பட்டோர் மீதி ரூபா 59.91 மில்லியன் ஆகும். 2004 ஒக்தோபர் 11 ஆம் திகதிய இலக்கம் 118 என்ற பாதீட்டு சுற்றறிக்கை மற்றும் தாபன விதிக்கோவையின் XXIV அத்தியாயத்தின் 1:6 மற்றும் 1:7 என்ற பிரிவுகளில் காண்பிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த கடன்பட்டோர் மீதிகளுக்கிடையே ரூபா 42.23 மில்லியன் ஆன கடன்பட்டோர் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் பழைய கடன் மீதியாக இருந்ததுடன் அந்த மொத்த கடன்பட்டோர் மீதியில் 70 சதவீதமாகும். மிகுதி கடன்பட்டோர் மீதியில் ரூபா 14.45 மில்லியன் ஆன கடன்பட்டோர் மீதி 03 மாதங்களை விஞ்சிய கடன்பட்டோர் மீதியாகும். | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு இடமாற்றிச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதி 03 மாதங்களுக்குள் தீர்த்து வைக்கப்படுவதுடன் 2020 ஆம் ஆண்டு முதல் உள்ளக நிலைய இடமாற்றல் மற்றும் வருகை உத்தியோகத்தர்களின் கடன் மீதியில் பிரதான அலுவலகத்திற்கு செலுத்தப்படும் வரை அந்த ஆண்டின் போது தீர்த்து வைக்கப்படுவதுடன் பழைய கடன் மீதி தொடர்பான தகவல்களை கண்டறிந்து தீர்த்து வைக்கப்படுவதாகவும் மாகாண சபைகளிலிருந்து அரச அமைச்சுக்கு வருகை தருகின்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதியை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதியை தீர்த்து வைக்குமாறு உரிய மாகாண நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாபனவிதிக் கோவையின் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோகத்தர் இடமாற்றலாகிச் சென்று 03 மாதங்களுக்குள் கடன் மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பட்டோலை இலக்கம் 3.3 காண்பிக்கப்படுகின்ற கூட்டுமொத்தம் ரூபா 2.45 மில்லியன் ஆன 40 கடன்பட்டோர் மீதிகள் பட்டோலை இலக்கம் 3.2.2 உள்ளடக்கப்பட்ட 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிக் காணப்பட்ட ரூபா 12.34 மில்லியன் கடன்பட்டோர் மீதி மற்றும் இணக்கக்கூற்றின் பட்டோலை இலக்கம் 3.9.2 இல் உள்ளடக்கப்பட்ட கூட்டுத்தொகையான ரூபா 234,840 ஆன கடன் கொடுத்தோர் மீதியில் சுகாதார அமைச்சுக்குரிய வைத்தியசாலை மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்கள் இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் மீதிகள் ஆகும். 2019, 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையின் மூலம் இந்த நிலமை உங்களின் கவனத்திற்கு அனுப்பப்படுவதுடன் ஒரே செலவின விடயத்தில் காணப்படுகின்ற நிறுவனங்களுக்கிடையே கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதி காணமுடியாதிருந்தமையால் இந்த மீதி தொடரபாக பரீட்சித்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரை செய்யப்பட்ட போதும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் இந்த மீதிகளை இணங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் இந்த கடன் மீதியை சரியான கட்டளையில் 2023 ஆம் ஆண்டில் இறுதியில் அரசாங்க உத்தியோகத்தர்கள் முற்பணம் ''பீ'' கணக்கில் ஒப்பீடு செய்யும் போது உள்ளடக்கப்படுவதாக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | இந்த நிலைமையின் காரணமாக விடயங்களை இனங்கண்டு உரிய சீராக்கங்களை விரைவாக மேற்கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வேலை நீக்கத்திற்கு உட்பட்ட 271 உத்தியோகத்தர்களிடமிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய கடன்மீதி 11.22 மில்லியனாக இருந்ததுடன் ரூபா 7.48 மில்லியன் அதாவது 67 சதவீத கடன் மீதி 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய கடன்மீதியாக இருந்ததுடன் ரூபா 9.49 மில்லியன் அதாவது 85 சதவீத கடன் மீதி ஒரு வருடத்திற்கு மேற்பட்ட பழைய கடன்மீதி ஆகும். | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தரின் கடன்மீதியை தீர்த்து வைப்பதற்காக தேர்தல்கள் ஆணையாளரிடமிருந்து உத்தியோகத்தர்களின் தற்போதைய முகவரியைப் பெற்றுக்கொண்ட பின்னர் கடன்மீதிகளை தீர்த்து வைக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவித்தல், கிராம உத்தியோர் ஊடாக அறிவித்தல், பிரதேசங்களுக்குரிய பொலிஸ் இற்கு அறிவித்தல், பிணையாளர்களுக்கு அறிவித்தல் போன்ற நடவடிக்கைகளை எடுத்தல் மூலம் கடன்மீதி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கடன்மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | சேவையை விட்டுச்சென்ற 1121 உத்தியாகத்தரிடமிருந்து கூட்டுமொத்தமாக ரூபா 34.90 மில்லியன் கடன் மீதி அறவிடவேண்டியிருந்தது. அதில் ரூபா 11.76 மில்லியன் அதாவது 34 சதவீத கடன்மீதி 05 வருடங்களை விட பழைய கடன்மீதியாக இருந்ததுடன் ரூபா 22.40 மில்லியன் அதாவது 64 சதவீத கடன்மீதி ஒரு ஆண்டினை விட பழைய கடன்மீதியாகும். இந்த மீதிகளை ஒவ்வொரு வருடமும் தொடர்ச்சியாக அதிகரிப்பதுடன் கடனை | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் சேவையை விட்டுச்சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதியை தீர்த்து வைப்பதற்காக தேர்தல்கள் ஆணையாளரிடமிருந்து உத்தியோகத்தர்களின் தற்போதைய முகவரி கோரப்பட்டதன் பின்னர் கடன் மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாபவிதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கடன்மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடல் தொடர்பாக போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | ஓய்வு பெற்றுச் சென்ற 423 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் தொகை ரூபா 19.99 மில்லியனாக இருந்ததுடன் ரூபா 7.85 மில்லியன் அதாவது 39 சதவீத கடன் மீதி ஒரு ஆண்டினை விட பழைய கடன் மீதி ஆகும். | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் நீண்டகாலமாக அறவிடப்படாத கடன் மீதியை குறைப்பதற்காக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அறிவித்து கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | மரணமடைந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடவேண்டிய கடன் மீதி தொடர்பாக தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் பிரிவு 4.4 முதல் 4.6 வரையான ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய கடன் தொகை ரூபா 7.03 மில்லியன் ஆகும். ஆதில் 33 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கூட்டுமொத்தமான ரூபா 1.61 மில்லியன் அதாவது 23 சதவீத கடன் மீதி 05 ஆண்டுகளை விட பழைய கடன் மீதி ஆகும். அவ்வாறே இந்தக் கடன்பட்டோர் மீதியை ரூபா 4.83 மில்லியன் அதாவது 69 சதவீதம் ஒரு ஆண்டினை விட பழைய கடன் மீதி ஆகும். | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாதாந்த கணக்குப் பொழிப்பு மற்றும் சுகாதார அமைச்சின் தனிப்பட்ட கணக்கு பொழிப்பு பதிவேடுகளுக்கு இடையே ரூபா 16,485,076 தேறிய வேறுபாடு காணப்பட்டது. | மேற்கூறப்பட்ட வேறுபாடுகளுக்கான காரணமாக 2016 ஆம் ஆண்டில் பழைய பொது வைப்புக் கணக்கின் மீதி அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைக்கும் போது பழைய மீதியை புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றும் போது ஏற்பட்டிருந்த பிரச்சனையுடனான நிலைமையினால் ஏற்பட்டிருந்ததுடன் வேறுபாட்டுக்கான தீர்மானிக்கப்படக்கூடிய, எனினும் சகல பொது வைப்பு நிதிகளும் மீண்டும் மீளாய்வு செய்து வேறுபாடுகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த வேறுபாட்டிற்கான காரணங்களைக் கண்டறிந்து விரைவாக தீர்த்து வைத்தல் வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் | இணங்காமைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| i. நிதிப் பிரமாணம் 138 | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை செலுத்துவதற்கு முன்னர் அதிகாரத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரால் செலவினம் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் களுத்துறை போதனா வைத்தியசாலை 2023 மே மற்றும் யூன் மாதங்களில் | உத்தியோகத்தர்களின் கடன் செலுத்துவதற்கும், பட்டியல்களை தீர்த்து வைப்பதற்கும் உரிய செலவினங்களை உறுதிப்படுத்துதல் கணக்காளரினால் நிராகரிக்கப்பட்டமையால் வைத்தியசாலை பணிப்பாளரால் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொடுப்பனவு 06 உறுதிச்சீட்டுக்களுக்குரிய கூட்டுமொத்தமாக ரூபா 4.34 மில்லியன் கொடுப்பனவு, செலவினங்கள் உறுதிப்படுத்தப்படாமல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | செலவினங்களை உறுதிப்படுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | |
| ii. | நிதிப்பிரமாணம் 138, 139(1) 257, 141(3) (அ) மற்றும் (ஈ) | களுத்துறை போதனா வைத்தியசாலையின் 2023 மே மாதம் 02 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுக்குரிய 58 உப உறுதிச்சீட்டுக்களுக்கு செலுத்துதல் கூட்டுமொத்தமாக ரூபா 14.51 மில்லியன் பெறுமதியான கொடுப்பனவுகளை அங்கீகரித்தல் செலவினங்களை உறுதிப்படுத்துதல் மற்றும் கொடுப்பனவு செய்தல் போன்ற சகல நடவடிக்கைகளும் வைத்தியசாலைப் பணிப்பாளரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஆ) | 1989 மார்ச் 23 ஆந் திகதிய இலக்கம் 19/89 என்ற அரச நிருவாக சுற்றறிக்கையின் 03(3) ஆம் பந்தி | அலுவலக பதவியணியினருக்காக முற்பகல் 8.30 மணிக்கு முன்னர் மேலதிக நேர வேலை அங்கீகரிக்க முடியாதிருந்தமை காண்பிக்கப்பட்ட போது சுகாதார அமைச்சின் அலுவலக உத்தியோகத்தர்களுக்காக முற்பகல் 8.30 இற்கு முன்னர் மேலதிக நேர வேலை அங்கீகரித்து அதற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பொதுவான கடமை நேரத்தின் போது சகல கடமை நடவடிக்கைகளையும் நிறைவேற்றுவதற்கு முடியாமல் இருந்தமையால் முற்பண மேலதிக நேரப்படியின் அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்த வேண்டி ஏற்பட்டிருந்தமை. | சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் அதற்கு இணங்காத வகையில் நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிற்றுண்டிச் சாலை வாடகை வருமானம் மற்றும் ஏனைய சேவைகள் வாடகை வருமானம் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்க வேண்டிய போதிலும் கராப்பிட்டி போதனா வைத்தியசாலையால் கூட்டுமொத்தமாக ரூபா 2.56 மில்லியன் ஆன அரசாங்கத்தின் வருமானம் கணக்காய்வுத் திகதியான 2023 யூன் 02 ஆந் திகதி வரையிலும் அரச வருமானத்தில் செலவு வைக்கப்படாமல் நலன்புரிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டமை மற்றும் வழங்குனரிடமிருந்து சேகரிக்காமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் சிற்றுண்டிச் சாலை வாடகை மற்றும் ஏனைய வாடகை வருமானங்கள் அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இது தொடர்பாக முழுமையான பரிசோதனை மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கண்டி தேசிய வைத்தியசாலை அவசர விபத்துப் பிரிவில் விசேட நிபுணத்துவ வைத்தியர் ஒருவர் 2022 ஆகஸ்ட் 06 ஆந் திகதி முதல் 2022 திசெம்பர் 06 ஆந் திகதி வரையான காலத்தில் தினக்குறிப்பு நாளது வரையாக்கப்படாதிருந்ததுடன் 2022 ஆகஸ்ட் 06 ஆந் திகதியின் பின்னர் விடுமுறைப் பதிவேட்டிலும் விசேட விடுமுறை பெற்று நாட்டிலிருந்து வெளிச்செல்லும் போது குறிப்பிட வேண்டிய பதிவேடுகளிலும் எந்தவொரு குறிப்பும் | அவதானிப்புடன் இணங்குகின்றோம். இந்த உத்தியோகத்தரிடமிருந்து மேலும் அறவிடுவதற்குள்ள தொகையான ரூபா 161,209 தொகையை கண்டி தேசிய வைத்தியசாலையின் காசுப்பிரிவிற்கு செலுத்திப பற்றுச்சீட்டு சமர்ப்பிக்குமாறு அறிவித்து அனுப்பப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு இலத்திரணியல் தபால் மூலமும் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இதுவரை | இது தொடர்பாக முழுமையான விசாரணை மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இடப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் உள்ளபடியாக இந்த வைத்தியர் அந்தக் காலத்தில் கடமையில் ஈடுபட்டிருந்தாரா என்பது தொடர்பாக உறுதிப்படுத்தப்படாமல் ஆகஸ்ட் மற்றும் செப்தெம்பர் மாதத்துக்காக சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. | எந்தவொரு பதிலும் தெரிவிக்கப்படாமையினால் இதனை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (இ) | மாத்தறை பொது வைத்தியசாலையில் விசேட நிபுணத்துவ நரம்பியல் சத்திரசிகிச்சை வைத்தியர் இருவர் சேவையில் ஈடுபட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2023 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் காத்திருத்தல் பட்டியலில் இடப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை 227 ஆகும். இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| i. | மாத்தறை பொது வைத்தியசாலையில் 2023 நவம்பர் 21 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட TKR (Total Knee Replacement) சத்திரசிகிச்சை முறைமைக்காக வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைக் களஞ்சியத்தில் காணப்பட்ட TKR Implant பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் நோயாளர்களின் தனிப்பட்ட நிதியினைப் பயன்படுத்தி கொள்வனவு செய்து வைத்தியசாலைக்கு கையளிக்கப்பட்ட TKR Implant நோயாளர்களின் சத்திரசிகிச்சைக்கு பயன்படுத்தப்படுவதாக | நோயாளி ஒருவருக்கு தமது விருப்பத்தில் தமது சத்திரசிகிச்சைக்காக அல்லது நோய்களுக்காக பயன்படுத்துவதற்காக அல்லது நன்கொடையாக அல்லது குறைபாடுகளுடன் பொருட்கள் வழங்கப்படுமாயின் அது தொடர்பாக முறையான பிரகாரம் அந்த நோயாளிகளுக்கு நோய் நிலமையின் சிகிச்சை செய்வதற்கு ஈடுபடுத்துதல் அல்லது பொதுப் பயன்பாட்டிற்கு விநியோகிக்கப்படுகின்ற TKR Implant மருத்துவ வழங்கல் பிரிவின் மூலம் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | காண்பித்து ரூபா 550,000 தனியார் தொகை தனியார் வழங்குனருக்கு செலுத்தியதற்காக உரிய விசேட வைத்திய நிபுணர் மற்றும் வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளரின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உரிய TKR Implant வைத்தியசாலை களஞ்சியத்தில் காணப்பட்ட போது தனியார் வழங்குனருக்கு ரூபா 550,000 செலுத்துவதற்கு நோயாளர்கள் இணங்கியதன் மூலம் முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் உருவாகியிருந்தது. | வைத்தியசாலைக்கு வழங்க வேண்டியிருந்ததுடன் காணப்படுகின்ற ஏதாவது நிலைமையின் அடிப்படையில் அவ்வாறு நிலுவையான சந்தர்ப்பத்தின் போது சில நோயாளர்கள் தமது செலவினத்தில் இந்த உபகரணங்களை கொள்வனவு செய்து தமது சத்திரசிகிச்சைக்கு வழங்கியிருந்ததுடன் அது நேரடியாக மீண்டும் பொருத்தப்பட்டிருந்த போதும் அதனிடையே நன்கொடையாக இருக்கின்றமையினால் அதற்குரிய சத்திரசிகிச்சையை மேற்கொள்கின்ற பிரிவினால் ஆவணங்களில் இடப்பட்டு மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனினும் வைத்தியசாலைக்கு சொந்தமான ஏதாவது துணைப்பாகங்கள் அந்த சந்தர்ப்பத்தில் காணப்படுமாயின் அந்த துணைப்பாகங்களைப் பயன்படுத்தி சத்திரசிகிச்சை மேற்கொள்ளல் அத்தியாவசிய விடயமாக இருந்தமையால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |
| ii. | கணக்காய்வு பரிசோதனை இரண்டு தினங்களுக்கு பின்னர் அதாவது சத்திரசிகிச்சையில் 02 நாட்களுக்கு பின்னர் வழங்குனரால் TKR Implant இற்கு பதிலாக ரூபா 566,000 பெறுமதியான ஏனைய நரம்பியல் | ஏனைய நரம்பியல் சத்திர சிகிச்சை பொருட்கள் உரிய நிறுவனத்தால் வழங்கப்பட்டதாக குறிப்பிட்ட போதிலும் வைத்தியசாலையில் காணப்படுகின்ற அறிக்கையின் பிரகாரம் இந்த வைத்தியசாலைக்கு | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | சத்திரசிகிச்சை விடயங்கள் 22 வழங்கும் பட்டியல் நோயாளருக்கு விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அதனை அடிப்படையாகக் கொண்டு கூட்டுமொத்தமாக ரூபா 216,000 பெறுமதியான TKR Implant அல்லாத ஏனைய நரம்பியல் சத்திர சிகிச்சை பிரிவுகள் 12 வைத்திய நிபுணரின் நரம்பியல் சத்திரசிகிச்சை வைத்தியரினால் கையேற்கப்பட்டு களஞ்சியத்தில் வைப்புச் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டமையால் தனியார் வழங்குனரால் நோயாளர்களின் பெயர்களுக்கு விநியோகிக்கப்பட்ட பட்டியலின் அடிப்படையில் சத்திரசிகிச்சைப் பொருட்கள் விசேட வைத்திய நிபுணர் நரம்பியல் சத்திரசிகிச்சை வைத்தியருக்கு வைத்தியசாலைக்கு கையேற்பதற்கு தாக்கமளித்த நியாயமான காரணங்கள் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் அது வைத்தியசாலையில் அமுல்படுத்தப்பட்ட ஒட்டுமொத்த நிருவாக முறைமை மற்றும் உள்ளகக்கட்டுபாட்டு முறைமையில் உள்ளடங்காத முறைமையொன்று மேலும் அவதானிக்கப்பட்டது. | கிடைக்கப்பெறாதிருந்தமை நரம்பியல் விசேட நிபுணத்துவ வைத்தியரின் கூற்றில், பிரதான மருந்தியலாளர் மற்றும் சத்திரசிகிச்சைக்கூடம் A கையளித்த தாதியரின் கூற்றின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டது. | |
| iii. | வைத்தியசாலைக்கு கிடைக்கின்ற உதவிகள் மற்றும் நன்கொடைகள் வைத்தியசாலை பணிப்பாளரின் முன் | இலங்கையில் சுகாதார முறைமையில் தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்காக உள்நாட்டினைப் போன்று | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| அங்கீகாரத்தின் அடிப்படையில் மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்கள் களஞ்சிய உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் பதிவேடுகளுக்கு கொண்டு வந்த பின்னர் முறையான பிரகாரம் கையேற்கப்படவேண்டியிருந்த போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெளிநாட்டிலிருந்தும் நன்கொடைகள், நிதியுதவிகள் , உபகரணங்கள் தொடர்ச்சியாகக் கிடைக்கின்றமை பொதுவான நிலைமைக்குட்பட்டிருந்ததுடன் தற்போது காணப்படுகின்ற பொருளாதார நெருக்கடியுடன் சுகாதார சேவைகளை நடாத்திச் செல்வது கஸ்டமானதாக இருந்ததுடன் உங்களால் குறிப்பிடப்பட்டுள்ள உரிய நிறுவனங்களால் வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்ட எலும்பியல் சத்திரசிகிச்சை பொருட்கள் வைத்தியசாலை சத்திரசிகிச்சை களஞ்சியத்திற்கு கிடைக்காதிருந்ததாக பிரதான சத்திரசிகிச்சை மருந்தாளரினால் குறிப்பிடப்பட்டுள்ளது. | |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

**3.1.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தேசிய சுகாதார உபாய வழி கூட்டிணைந்த திட்டம் 2016-2025 இல் சுகாதார நிர்வாக மற்றும் சுகாதார மனிதவளம் தொடர்பான தலைப்பில் அடிப்படையாக 02 பிரிவுகள் இனங்காணப்பட்டு சுகாதார மனிதவள பிரச்சனைகளாக ஆகக்குறைந்த ஊழியர்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளல் நியதிகளின் (Norms) | ஏற்றுக்கொள்வதுடன் உலக சுகாதார அமைப்பின் இலங்கை பிரதிநிதித்துவப்படுத்தும் அலுவலகம் மூலம் இந்த திட்டம் தயாரிக்கப்பட்டதுடன் அதன் இறுதி வரைவு இறுதி சந்தர்ப்பத்தில் காணப்படுவதுடன் அந்த அலுவலகத்தால் நியமிக்கப்பட்ட நிபுணத்துவக் குழுவின் | இந்த செயற்பாடுகளை திட்டமிட்ட பிரகாரம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் திருத்த வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. இந்த பிரச்சனைகளுக்காக உத்தேசிக்கப்பட்ட உபாய வழியாக சுகாதார மனிதவள கொள்கையை அபிவிருத்தி செய்தல் (திட்டமிடல்/ ஆட்சேர்ப்பு/ பயிற்சி/ ஈடுபடுத்துதல்/ தொழில்சார் அபிவிருத்தி) காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மனிதவள கூட்டிணைந்த திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு 2023 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட போதிலும் மூன்றாவது வரைவு அறிக்கை தயாரித்து நிபுணர்களின் கருத்துரைகளைப் பெற்றுக்கொள்வதற்காக உரிய தரப்பினருக்கும் மற்றும் உலக சுகாதார அமைப்பிலிருந்து கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்கும் அனுப்பப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதிவரையிலும் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மூலம் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்கான தேவையான நிதியேற்பாடு அவர்களால் வழங்கப்பட்டிருந்தது. இந்த விடயங்களுக்கிடையே இலங்கை முகம் கொடுத்த சமூக பொருளாதார சிக்கல்கள் மற்றும் அதன் காரணமாக மனிதவள முகாமைத்துவத்தை உள்ளடக்கிய புதிய முன்னுரிமைகளைக் கவனத்தில் கொண்டு இந்த வரைவினை நாளதுவரையாக்குதல் மற்றும் அதன் அடிப்படையாகக் கொண்டு புதிய மனித வளத்திட்டத்தைத் தயாரித்தல் (Human Resource for health Master Plan 2025-2035) தயாரிப்பதற்கும் தற்போது ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமையால் அதனால் உரிய திட்டம் இரண்டும் இந்த ஆண்டில் தயாரித்து பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | புகையிலை மற்றும் மதுபாணம் தொடர்பான தேசிய அதிகார சபை அபிவிருத்தி செய்யப்பட்ட புகையிலை வரி சூத்திரமுறைமையினை அமுல்படுத்துவதற்கு தேவையான வழிமுறைகளை எடுத்தல் மற்றும் அட்கோல் வரியிடும் சூத்திரம் ஒன்றை தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 2023 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் அது | அபிவிருத்தி வரி சூத்திரம் தொடர்பாக மேலும் கலந்துரையாடி அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அவ்வாறே 2023 இன் இறுதி அரைப்பகுதியில் மதுபாணத்திற்காக வரியிடல் சூத்திரம் ஒன்றை தயாரிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | -மேற்படி- |

பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.1.2 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Out come) பெற்றுக்ககொள்ளப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பேராதனை போதனா வைத்தியசாலையில் மகப்பேற்றுக்கூடத்தில் 2018 ஆம் ஆண்டில் புதிய சத்திரசிகிச்சை அறையொன்று நிர்மாணிக்கப்பட்டதுடன் அதற்கு தேவையான வளங்கலான சத்திரசிகிச்சைக் கட்டில், மயக்கப்படுத்தும் இயந்திரம், மொனிட்டர் இயந்திரம் போன்ற உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2023 ஒக்தோபர் 22 ஆம் திகதி வரையிலும் புதிய சத்திரசிகிச்சைக்கூடத்தில் சத்திரசிகிச்சைகள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் இந்த வைத்தியசாலை மகப்பேற்றுக்கூடத்தை நிர்மாணித்து தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த புதிய சத்திரசிகிச்சைக் கூடத்தை நடாத்திச் செல்வதற்கு அத்தியவசியமான பதவியணியினரின் பற்றாக்குறையின் அடிப்படையில் பழைய சத்திரசிகிச்சைக் கூடத்திலேயே சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | செயற்திட்டத்தை திட்டமிடும் போது அந்த செயற்திட்டத்தை பயன்பாட்டுக்கு எடுப்பதற்கு தேவையான மனிதவளங்களைப் பூர்த்தி செய்யும் இயலுமையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும். |
| (ஆ) | மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தால் ரூபா 45.28 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டின் மூலம் அந்தப் பணிகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதில் ஆராய்ச்சி நடவடிக்கைளுக்கு ரூபா 5 மில்லியன் மாத்திரம் ஒதுக்கப்பட்டிருந்தது. பூர்த்தி செய்யப்பட்ட ஆராய்ச்சிப் பணிகளுக்காக மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி செயற்பாடுகளுக்காக ரூபா 2.46 மில்லியன் மாத்திரம் | திட்டத்தின் பிரகாரம் பொதுத் திறைசேரியினால் தேவையான பணம் ஒதுக்கப்படாதிருந்தமையால் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ஆராய்ச்சி செய்றபாடுகளுக்காக ஈடுபடுத்துமாறு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. | ஆராய்ச்சிகளுக்காக போதியளவான கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

இந்தப் பணத்தில் செலவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் ஆராய்ச்சிக்காக முன்னுரிமை காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கைத் தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப முகவராண்மையின் வழிகாட்டலின் அடிப்படையில் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவினை வலயமைப்புபடுத்தும் தொழில்நுட்ப செயற்திட்டம் அநுராதபுர மாவட்டத்தில் அமுல்படுத்துவதற்காக 2012 ஆம் ஆண்டின் போது விலச்சிய மற்றும் எலயாப்பத்துவ பிரதேச வைத்தியசாலைகளுக்கு கூட்டுப்பெறுமதி ரூபா 5,574,780 ஆன கணனிகள் மற்றும் துணைப்பாகங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டின் போது கெப்பிட்டிக்கொல்லாவ, பதவிய மற்றும் ஹிக்கிராவ தளவைத்தியசாலைகளுக்காக வழங்கப்பட்டிருந்த கூட்டுப்பெறுமதி ரூபா 3,107,897 ஆன கணனிகள் துணைப்பாகங்கள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பயனற்றுக் காணப்பட்டதன் காரணமாக செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | சரியான தரப் பகுப்பாய்வினை மேற்கொள்ளாமல் 2012 இல் தெயட்டகிருள நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக செயற்திட்டம் தோல்வியடைந்திருந்ததுடன் எனினும் செயற்திறனின்மையை குறைத்தல் ஆக்கபூர்வமானதாக கட்டியெழுப்புவதைக் கவனத்தில் கொண்டு உரிய கணனிகள் மற்றும் ஏனைய அலுவலக உபகரணங்கள் ஏனைய சில வைத்தியசாலைகளிற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமையும் எவ்வாறாயினும் 2018 ஆம் ஆண்டில் டிஜிட்டல் (Digital) மயப்படுத்தும் செயற்திட்ட தாமதமாகி ஆரம்பிக்கப்பட்ட போதும் தற்போது வலயமைப்பு செயற்திட்டம் அலுவலகத்தில் அமுல்படுத்தப்படுகின்றது. | இது தொடர்பாக விசாரணை செய்து பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.1.3 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தேசிய ECMO நிலையத்தை நிர்மாணிக்கும் நிலையப்பிரிவை நிர்மாணிப்பதற்காக கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையினால் தனியார் கம்பனி ஒன்றுடன் ரூபா 21 மில்லியன் பெறுமதியில் 2021 திசெம்பர் 27 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. வைத்தியசாலையில் இருதய மற்றும் தோள்பட்டை சத்திரசிகிச்சை அதிக அவசர பிரிவுக்கு அருகில் நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்டதுடன் இடை நடுவில் வேலைகள் நிறுத்தப்பட்டு இந்த நிர்மாணத்திற்காக கணக்காய்வுத் திகதி வரையிலும் ஒப்பந்தகாரருக்கு கூட்டுமொத்தமாக ரூபா 7.32 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இந்தப் பணிகள் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) முல்லேரியாவ தள வைத்தியசாலையில் தேசிய சிகிச்சை நிலையம் ஒன்று (National Stroke Treatment Centre) நிர்மாணிப்பதற்காக ரூபா 60 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரருடன் கூறுவிலைகளுடன் இணங்காமையின் காரணமாக அந்த | பதிலளிக்கப்படவில்லை. | இது தொடர்பாக பரீட்சித்து செலவிடப்பட்ட தொகையை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணங்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதுடன் 2022 ஆம் ஆண்டின் போது கிடைத்த பட்டியல்களைத் தீர்ப்பதற்கு ரூபா 26.41 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | | |
| (இ) | ரூபா 61 மில்லியன் செலவில் களுத்துறை போதனா வைத்தியசாலை மருத்துவ வாட்டு கட்டிடத் தொகுதியை நிர்மாணித்தல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதுடன் ரூபா 25 மில்லியன் செலவிடப்பட்ட சிலாபம் பொது வைத்தியசாலையில் 06 மாடிகளை உடைய மருத்து வாட்டுத் தொகுதி நிர்மாணமும் நிறுத்தப்பட்டிருந்தது. | களுத்துறை போதனா வைத்தியசாலை மருத்துவ வாட்டு தொகுதியின் நிர்மாணங்கள் மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்துடன் கலந்துரையாடி மீண்டும் வேலைகளை ஆரம்பிப்பதற்கான இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் சிலாபம் பொது வைத்தியசாலையின் 06 மாடிகளின் மருத்துவ வாட்டுத் தொகுதி பேராசிரியர் பிரிவு ஒன்றாக ஸ்தாபிப்பதற்கு தனியார் முதலீட்டாளருடன் கலந்துரையாடப்பட்டுள்ளமையும் அதற்காக 2024 ஆம் ஆண்டிற்காக ரூபா 200 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

### 3.1.4 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் இரத்தக்கசிவு வடிகட்டும் அலகு பிரிவு மற்றும் சிறுநீரக இரத்த மாற்றல் பிரிவு ஸ்தாபிப்பதற்காக ரூபா 790.8 மில்லியன் பெறுமதியான மதிப்பீட்டின் அடிப்படையில் | அவதானிப்புக்களுடன் இணங்காதிருப்பதுடன் இந்த ஒப்பந்த நிர்வாகம் சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது . | ஒவ்வொரு நிறுவனத்தினாலும் அனுப்பப்படுகின்ற பதில் அந்தந் முறையில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க முடியாதிருந்ததுடன் இந்த செயற்திட்டத்தின் |

08 மாடிகளை உடைய கட்டிடம் ஒன்று நிர்மாணிப்பதற்காக 2014 ஆகஸ்ட் 13 ஆந் திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2023 யூன் 02 கணக்காய்வுத் திகதி வரையில் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டு 08 வருடங்களை விஞ்சியிருந்த போதிலும் மதிப்பீட்டின் பிரகாரம் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ரூபா 83.57 மில்லியன் ஆன 20 தொகுதிகளுக்குரிய சத்திரசிகிச்சை மற்றும் மருத்துவ உபகரணங்களில் 114 விடயங்கள் 2023 யூன் 02 கணக்காய்வுத் திகதி வரையிலும் பயனற்றுக் காணப்பட்டது. கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்வதற்கு முன் இரத்தக்கசிவு வடிகட்டும் பிரிவு மற்றும் சிறுசீரக இரத்த மாற்றல் பிரிவிற்கு தேவையான கூட்டுமொத்தமான ரூபா 198.86 மில்லியன் ஆன சத்திரசிகிச்சை மற்றும் மருத்துவ உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2023 யூன் 02 கணக்காய்வுத் திகதி வரையிலும் அது கட்டிடத்தில் ஆங்காங்கே குவித்து விளைவற்றுக் காணப்பட்டது. கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்ட மத்திய மயப்படுத்தப்பட்ட வளிப்பதனாக்கி முறைமையில் நீர் கட்டிடத்தின் உள்ளக இடங்களுக்கு கசிந்து காணப்பட்டமையும் அதற்காக ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்ட ரூபா 73.45 மில்லியன் பயனற்ற

வேலைப் பகுதிகளை பூர்த்தி செய்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | செலவனத்திற்கு உட்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | கராப்பிட்டி போதனா வைத்தியசாலையில் பல்வேறு செயற்திட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 4,133.5 மில்லியன் ஆன 05 கட்டிடங்களுக்காக கணக்காய்வுத் திகதி வரையிலும் ஒப்பந்தகாரருக்கு 03 செயற்திட்டங்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 1,361.7 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் 02 செயற்திட்டங்களுக்காக ஒப்பந்தகாரர் இருவருக்கு செலுத்தப்பட்ட பணம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. கூட்டுமொத்தமாக ரூபா 4,133.5 மில்லியன் ஆன 05 செயற்திட்டங்களுக்காக ஒப்பந்தகாரருக்கு ரூபா 1,361.7 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும் வேலை பூர்த்தி செய்யப்படாததுடன் தாமத காலம் 06 மாதங்களுக்கும் 34 மாதங்களுக்கும் இடையில் இருந்தது. ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 681.4 மில்லியன் ஆன வேலை ஆரம்பிப்பு முற்பணங்களில் ரூபா 334.2 மில்லியன் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வு திகதி வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்படவேண்டிய கூட்டுமொத்தமான ரூபா 3,274.6 மில்லியன் ஆன 03 நிர்மாணங்களின் பௌதீக | சிறுவர் வாட்டு கட்டிடத் தொகுதியின் நிர்மாணம் மற்றும் பல் வாட்டு கட்டிடத் தொகுதியின் நிர்மாண செயற்திட்டங்களின் நிர்மாண நடவடிக்கைகள் பாரிய அளவிலான செயற்திட்டமொன்று மீண்டும் திட்டமிடல் மற்றும் அதிகாரத்துடன் உத்தியோகத்தர் குழு (RAMP) இனால் கைவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. சிறுவர் வாட்டு தொகுதி தவிர ஏனைய வாட்டு கட்டிடத் தொகுதிகளை பயன்பாட்டு எடுக்கக்கூடிய வகையில் கட்டிட நிர்மாணங்களை பூர்த்தி செய்தல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உரிய முற்பண தொகையில் பல் வாட்டு கட்டிடத் தொகுதி நிர்மாணத்தின் முற்பணத் தொகைக்கு சமமான வகையில் வேலை பகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் சிறுநீரகப் பிரிவில் பட்டியல்கள் மூலம் முற்பணத் தொகை அறவிடப்பட்டுள்ளது. சிறுவர் வாட்டுத் தொகுதிக்காக அறவிடுவதற்கு தீர்மாணிக்கப்பட்ட தொகைக்கு சமமான வேலைப்பகுதியை நிறைவேற்றுவதற்கு CESL நிறுவனத்துடன் கலந்துரையாடப்படுகின்ற | இந்த செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட தொகையை பயனுள்ளதாக்கி கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் மேலும் அறவிட வேண்டிய முற்பணத் தொகுதி மீண்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயல்முன்னேற்றம் 50 சதத்ததை விட குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. | து. | |
| (இ) | ஆய்வு கூட சேவைப்பிரிவின் கீழ் தெரிவு போக்குவரத்துக்குரிய வழிகாட்டிகளைத் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்ட போதும் அது பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | இந்த நடவடிக்கைகள் திட்டமிடப்பட்ட பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஈ) | இலங்கையில் யானைக்கால் நோய் தொடர்பாக தேசிய கொள்கையை அபிவிருத்தி செய்வதற்காக 2023 ஆம் ஆண்டின் இறுதியில் கொள்கை ஆவணங்களை தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போது அது எதிர்வரும் 02 வருடங்களின் போது மேற்கொள்வதற்கு காலம் தாழ்த்தப்பட்டிருந்தது. | அது தயாரிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட சில பிரச்சனைகளின் காரணமாக உரிய பணிகளை காலந்தாழ்த்த வேண்டி ஏற்பட்டிருந்தது. உரிய கொள்கைகளை தயாரிக்கும் போது இனங்காணப்பட்ட மாவட்டங்கள் மற்றும் தற்போது யானைக்கால் நோய் காணப்படுகின்ற மற்றும் காணப்படாத மாவட்டங்களை அதற்குரிய சேவைகள் பேணிச்செல்வதற்கு மனித வளம் மற்றும் ஏனைய பௌதீக வளங்களில் பிரச்சனையான நிலைமை தோன்றியிருந்தமை. | -மேற்படி- |
| (உ) | இலங்கையில் நீரெதிர்ப்பு நோய்கள் தொடர்பாக வரைவு கொள்கையொன்றை மீளாய்வு செய்வதற்கு 2023 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டு அது கைவிடப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | முல்லேரியாவ கிழக்கு கொழும்பு தள வைத்தியசாலையில் ரூபா 813 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினத்துடன் ஆகக்கூடிய முன்னுரிமை நிர்மாணம் மற்றும் 07 மறுசீரமைப்பு செயற்திட்டங்கள் 2023 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் ரூபா 904 மில்லியன் மதிப்பீட்டு செலவினம் ஒன்றுடன் நிர்மாணம் மற்றும் 16 மறுசீரமைப்பு செயற்திட்டங்களில் 13 செயற்திட்டங்கள் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை . | இதன் போது சுகாதார அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்காக இந்த வைத்தியசாலையில் எந்தவொரு பங்குபற்றலும் இடம்பெறாதிருந்தவுடன் சுகாதார அமைச்சின் கோரிக்கையின் அடிப்படையில் தேசிய திட்டமிடல் முறைமைக்கு இந்தப் பிரிவை உள்ளடக்குவதற்காக நிலம் மாத்திரம் இந்த வைத்தியசாலையின் மூலம் வழங்கப்பட்டிருந்தது. | ஒவ்வொரு நிறுவனத்தினாலும் அனுப்பப்படுகின்ற பதில் அந்த முறையிலேயே கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க முடியாதிருந்ததுடன் சுகாதார அமைச்சு செயலாளரின் கருத்துரை தெரிவிக்க வேண்டியிருந்ததுடன் இந்த நடவடிக்கைகள் திட்டமிடப்பட்ட பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (எ) | பதுளை மாகாண பொது வைத்தியசாலையில் 10 மாடிகளை உடைய சிறுநீரக அவசர பிரிவிற்காக செலவிடப்பட்ட செலவினம் ரூபா 61 மில்லியன் ஆக இருந்ததுடன் அதன் நிர்மாணங்கள் நிறுத்தப்பட்டிருந்தது. | சிறுநீரக சிகிச்சைப் பிரிவு ஊவா வெல்லச பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அலகொன்றாக அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இந்த செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட பணம் ஆக்கபூர்வமாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | ரூபா 339 மில்லியன் செலவு இலங்கை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலையில் 20 மாடிகளை உடைய தாதியர் பீடத்தின் நிர்மாணங்களின் நலிவான செயல்முன்னேற்றம் ஏற்பட்டிருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்தது. | இந்த நிர்மாண நடவடிக்கைகள் (RAMP) குழுவின் மூலம் தற்காலிகமாக 2022 ஆம் ஆண்டின் போது கைவிடப்பட்டிருந்தது. | -மேற்படி- |

### 3.2 செயற்பாட்டு நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) சுகாதார அமைச்சின் கீழ் காணப்படுகின்ற வைத்தியசாலைகளுக்கு வருகை தருகின்ற நோயாளிகள் தாதியர் சிகிச்சைகளுக்காக ஸ்ரீ ஜெயவர்த்தன புர பொது வைத்தியசாலைக்கு அனுப்புதல் இந்த நோயாளர்களுக்கு அந்த வைத்தியசாலையினால் மேற்கொள்ளப்படுகின்ற இருதய சத்திரசிகிச்சை மற்றும் சிகிச்சைகளுக்கான கட்டணம், அந்த வைத்தியசாலைக்கு சுகாதார அமைச்சினால் விநியோகிக்கப்படுகின்ற மருந்துகள் மற்றும் ஏனைய மருத்துவ வழங்கல்களின் பெறுமதிகளை ஈடுசெய்யும் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக சரியான உரிய வெளிப்படையுடன் முறையான திட்டமொன்றைத் தயாரித்து அதற்காக முறையான அங்கீகாரத்தைப் பெற்று அந்த முறைமையை இந்த செயற்பாடுகளுடன் தொடர்புபடுகின்ற சகல தரப்பினருக்கும் சுற்றறிக்கை ஒன்றாக அல்லது ஏனைய எழுத்து மூலக் கட்டளையாக விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இருதரப்பினருக்கிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று (MOU) தயாரிப்பதற்கு தீர்மாணம் எடுக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை | அமைச்சிற்கு வருகை தருகின்ற இருதய நோயாளர்களின் தேவையின் அடிப்படையில் இருதய சத்திரசிகிச்சைக்காக ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலைக்கு அனுப்பும் போது அந்த நோயளர்களுக்கு அந்த வைத்தியசாலையினால் மேற்கொள்ளப்படுகின்ற இருதய சத்திரசிகிச்சை மற்றும் சிகிச்சைகளுக்கான கட்டணங்களைத் தீர்ப்பதற்காக இலக்கம் அமப/23/071/610/020 மற்றும் 2023 மே 16 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டு முதல் செலவின விடயம் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதியேற்பாடுகளில் இந்த ஆண்டிலிருந்து பட்டியல்கள் தீர்க்கப்படுகின்றது. | வெளிப்படையாக உடைய முறைமையொன்றைத் தயாரித்து முறையான பிரகாரம் அங்கீகரிக்க வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையை சுற்றறிக்கையாக வெளியிடுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மருத்து வழங்கல் பிரிவினால் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலைக்கு 207 சந்தர்ப்பங்களுக்குரியதாக விநியோகிக்கப்பட்ட பட்டியல்களின் மருந்துகளை உள்ளடக்கிய மருத்துவ வழங்கல்களின் பெறுமதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே அறவிடப்படாமல் மருத்துவ வழங்கல்கள் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலைக்கு விநியோகிப்பதற்காக கிடைக்கப்பெற்ற முறையான அங்கீகாரம் ஒன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (ஆ) | கணக்காய்வுத் திகதியான 2023 மே 12 ஆம் திகதி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் மருத்துவ உத்தியோகத்தர்களின் நாட்குறிப்பு பேணிச்செல்லல் தொடர்பான பரிசோதனையின் போது சுகாதார அமைச்சு செயலாளரின் 2016 மார்ச் 30 ஆந் திகதிய பொது சுற்றறிக்கை இலக்கம் 01-12/2016 இன் பிரகாரம் சகல மருத்துவ உத்தியோகத்தர்களும் தினக்குறிப்பேடு பேணிச்செல்ல வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத விசேட வைத்திய நிபுணர்கள் 37 பேர்களும் 131 மருத்துவ உத்தியோகத்தர்களினாலும் கணக்காய்வுத் திகதியான | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் விசேட வைத்தியர்கள் 37 பேர்கள் மற்றும் மருத்துவ உத்தியோகத்தர்கள் 131 பேர்களும் முழுமையாக்கப்பட்ட நாளேடுகள் கணக்காய்வுத் திகதியின் பின்னர் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் நாளேடுகளில் விசேட மருத்துவ உத்தியோகத்தர்களின் பரிந்துரைகளின் பிரகாரம் சேவைகளில் ஈடுபட்டிருந்தமை உறுதிப்படுத்தப்படுகின்றமையால் அவர்களுக்கு அந்த கால எல்லைக்காக சம்பளம் மற்றும் படிகள் செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை மேலும் அந்த காலத்தில் | இது தொடர்பாக முறையான திட்டமொன்றை தயாரிக்க வேண்டியிருந்ததுடன் சரியான பின்தொடர் நடவடிக்கை பொறிமுறையொன்று அமுல்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2023 மே 12 ஆம் திகதி வரையிலும் ஏப்ரல் மாதத்திற்காக எழுதப்பட்ட நாளேடு வைத்தியசாலை பணிப்பாளரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படவில்லை.<br>2023 மே மாதத்தில் 79 வைத்தியர்களிடமிருந்து நாளேடுகளில் கடமை திகதி, கடமை அறிக்கையிடப்படுகின்ற நேரம், கடமையிலிருந்து வெளிச்செல்கின்ற நேரம் அழைப்பு கடமைகள் போன்ற தகவல்கள் தொடர்பான சான்றுகள் கணக்காய்வு பௌதீக பரிசோதனையின் போது பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | நோயர்களின் சிகிச்சை சேவைகளில் வீழ்ச்சியடைந்திருந்தமை அறிக்கையிடப்படவில்லை. | |
| (இ) | 1980 இன் 26 ஆம் இலக்க உணவு சட்டத்தின் 32(1) பிரிவின் பிரகாரம் அமைச்சரால் வழங்கப்படுகின்ற ஒவ்வொரு கட்டளையும் 32(2) பிரிவின் பிரகாரம் அரசாங்கத்தின் வர்த்தமாணியில் பிரசுரிக்க வேண்டியிருந்ததுடன் சட்டத்தின் 32(3) பிரிவின் பிரகாரம் அமைச்சரால் வழங்கப்படுகின்ற ஒவ்வொரு கட்டளை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பின்னர் கூடிய விரைவில் அங்கீகாரத்திற்காக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் இந்த முறையில் சட்டத்தின் 32(1) பிரிவின் கீழ் வழங்கப்பட்ட 50 கட்டளைகள் காணப்பட்ட போதும் இதில் எந்தவொரு கட்டளையும் | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் 1980 இல் 26 ஆம் இலக்க சட்டத்தின் 32 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சரால் வழங்கப்பட்ட கட்டளைகள் அங்கீகாரத்திற்காக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் அந்த காலப்பகுதியில் சேவையாற்றிய உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட போதும் அது தொடர்பான எழுத்துமூல தகவல்களை கண்டறிதல் கஷ்டமாக இருந்தது. | தேவையான அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஈ) 2011 இன் 29 ஆம் இலக்க உணவு (திருத்த) சட்டதினால் திருத்தப்பட்ட 1980 இன் 26 ஆம் இலக்க உணவு சட்டத்தின் 8(1) பிரிவின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்ட 25 பேர்களை உள்ளடக்கிய உணவு ஆலோசனைக் குழு 2022 ஆம் ஆண்டின் போது 09 சந்தர்ப்பங்களின் போது கூடியிருந்தது. இந்த ஆலோசனைக் குழுவிற்காக குழு அங்கத்தவர்களின் வருகை நலிவான மட்டத்தில் காணப்பட்டது. | 2022 ஆம் ஆண்டின் பின்னர் கொவிட் காலப் பகுதியாக இருந்ததுடன் அந்தக்காலத்தில் குழுக்கூட்டங்கள் 09 நடாத்தப்பட்டிருந்தது. | குழு அங்கத்தவர்களின் வருகையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அனாயாச்சித்த செயற்திட்ட முன்மொழிவின் பிரகாரம் சீன கம்பனி மற்றும் மலேசிய கம்பகளுக்கிடையே 2019 ஒக்தோபர் 02 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் இலத்திரணியல் பட பாதுகாப்பு, தொலைத்தொடர்பு ஒளிக்கதிர் தகவல் முறைமை (PACS/RIS) 20 வைத்தியசாலைகள் ஸ்தாபிக்கும் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் தொடர்பாக அமைச்சு மட்டத்தில் எந்தவொரு சாத்தியவள ஆய்வையும் மேற்கொள்வதற்கும் செயற்திட்டத்திற்குரிய கிரய மதிப்பீடு ஒன்றை தயாரித்தல் அல்லது கிரய நலன்களை பகுப்பாய்வு செய்தல் அல்லது மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. உத்தேசிக்கப்பட்ட 20 வைத்தியசாலைகளை செயற்திட்டத்தை | பதிலளிக்கப்படவில்லை . | இந்த செயற்திட்டத்தை ஆரம்பத்தது முதல் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களின் நடவடிக்கை எடுத்த முறை தொடர்பாக முழுமையாகவும் முறையாகவும் பரிசோதனைகள் மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த உத்தியோத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் நாட்டில் காணப்படுகின்ற பொருளாதார நிலைமையின் பிரகாரம் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை எதிர்காலத்தில் அமுல்படுத்துதல் தொடர்பாக தீர்மானம் எடுத்து |

அமுல்படுத்துவதற்கான கிரயம் ஐக்கிய அமெரிக்க டொலர் 33.25 மில்லியன் ஆக இருந்ததுடன் அந்த தொகையில் வட்டி ஐக்கிய அமெரிக்க டொலர் 1.31 மில்லியனுடன் 11 வருடங்களில் செலுத்துதல் வேண்டும். இந்த செயற்திட்டத்தின் முதலாவது கட்டமாக 05 வைத்தியசாலைகளில் முறைமைகளை ஸ்தாபித்தல் 03 மாதங்களுக்குள் பூர்த்தி செய்வதற்கும் எஞ்சியிருந்த 15 வைத்தியசாலைகளில் முறைமைகளை ஸ்தாபித்தல் 02 வருடங்களிலும் பூர்த்தி செய்வதற்கும் இணங்கியிருந்த போதிலும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் எந்தவொரு முறையிலும் குறித்துரைத்த கால அட்டவணையில் அமுல்படுத்துவதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2022 யூலை மாதம் 05 நபர்களை உடைய குழு ஒன்றின் மூலம் 05 வைத்தியசாலைகளுக்குரிய இந்த செயற்திட்டத்தின் முதலாவது தவணைப் பணம் செலுத்துவதற்கு முன்னர் செயற்திட்டத்தின் செயற்படு தன்மை தொடர்பாக மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் 4 குறிகாட்டிகள் திருப்திகரமாக இல்லாத (Not Satisfactory) ஆக இருந்தமையும், 38 குறிகாட்டிகள் முழுமையாக திருப்திகரமற்றதாக இருந்தமையும் (Partially Satisfactory) காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒட்டுமொத்தமாக இந்த செயற்திட்டம் 05 வைத்தியசாலைகள் அமுல்படுத்துதல் திருப்பதிகரமான மட்டத்தில் காணப்படாதிருந்தமை இந்த மதிப்பீட்டின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது. 2023 மார்ச் 20 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்ட 05 வைத்தியசாலைக்குமுரிய பங்குகளைச் செலுத்துவதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அமைச்சு நியமித்த 05 பேர்களை உடைய குழுவின் பரிந்துரை, அமைச்சரவை அங்கீகாரம் அல்லது தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்

உடன்படிக்கையை திருத்துவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

சமர்ப்பித்த விடயங்களைக் காண்பித்து கவனத்தில் கொள்ளாமல் 20 வைத்தியசாலைகளிலும் செயற்திட்டத்ததை வெற்றிகரமாக அமுல்படுத்திய பின்னர் அடுத்து வரும் ஆண்டின் போது செலுத்த வேண்டிய தவணைப் பணமான ஐ.அ.டொலர் 3.02 மில்லியன் முழுமையாக தவணைப் பணமாக செலுத்தப்பட்டிருந்தது.

### 3.4 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 ஒக்தோபர் 01 ஆந் திகதி முதல் 2022 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சுத்திகரிப்பு சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக கம்பனி ஒன்றுடன் உடன்படிக்கைக் செய்யப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கைக் காலம் முடிவடையும் வரை அடுத்துவரும் ஆண்டிற்காக புதிய வழங்குனரை தெரிவு செய்வதற்கு உரிய பெறுகைக் குழுவின் நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு சுகாதார அமைச்சின் பெறுகைக்குழு உடன்பட்டிருக்கவில்லை. தெரிவு செய்யப்பட்ட வழங்குனரால் வழங்குவதற்கு உடன்படிக்கை செய்யப்பட்ட வியாபார பெயருடன் சுத்திகரிக்கும் இரசாயண பொருட்கள் விநியோகிக்கும் போது இரசாயண பொருட்கள் கடந்தாண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கையின் பிரகாரம் வழங்கப்படாத சுத்திகரிக்கும் இரசாயணப் பொருட்களுக்காக 2021 ஒக்தோபர் 01 முதல் 2022 செப்தெம்பர் 31 வரை ரூபா 2,402,550 மற்றும் 2022 | இரசாயண பொருட்களை கையேற்றல் மற்றும் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் வைத்தியசாலை பணிப்பாளரின் இலக்கம் THKA/S/4/1/04 மற்றும் 2023.02.15 ஆம் திகதிய கடிதம் மூலம் நிருவாக பிரிவிற்கு கையளிக்கப்பட்டுள்ளது. நாளாந்த சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற இந்த உபகரணங்கள் வைத்தியசாலை உத்தியோகத்தர்களின் பொறுப்பில் வைத்து விநியோகித்தல், கையேற்றல் மேற்கொள்ளல் நடைமுறையில் முடியாதிருந்தமையினால் அந்த சுத்திகரிக்கும் உபகரணங்கள் அதன் மேற்பார்வை உத்தியோகத்தரின் பொறுப்பிலேயே காணப்படுகின்றது. சுத்திகரிக்கும் உபகரணங்களைக் கையேற்றல் மற்றும் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் | கணக்காய்வு பந்திக்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்ததுடன் இது தொடர்பாகவும் முழுமையாகவும் முறையான பரிசோதனை மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒக்தோபர் 01 முதல் 2022 திசெம்பர் 31 வரை ரூபா 599,640 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 3,002,190 வழங்குனருக்கு செலுத்துவதற்கும் 2023 சனவரி முதல் மே வரை கூட்டுமொத்தமாக ரூபா 7,722,000 வழங்குனருக்கு செலுத்துவதற்காகவும் உறுதிச்சீட்டு தயாரிக்கப்பட்டிருந்தது. கேள்வி ஆவணங்களில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் வருடாந்தம் வழங்க வேண்டிய கூட்டுமொத்தமான ரூபா 1,063,104 பெறுதியான உபகரணங்கள் பதிவேட்டின் பிரகாரம் பட்டியலின் பிரகாரம் வழங்குவதற்கு இணங்கியிருந்த உபகரண அலகுகள் 229 வழங்கப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கையின் பிரகாரம் சுத்திகரிக்கும் சேவைக்காக மாதாந்தம் / வருடாந்தம் வழங்க வேண்டிய உபகரணங்களின் பட்டியல் உபகரணங்களின் நிரலின் பிரகாரம் வழங்க வேண்டிய உபகரணங்கள் குறித்துரைத்த நியமம் மற்றும் வகையின் கீழ் வழங்கப்படாதிருக்கும் போது அதற்காக ஒப்பந்தகாரருக்கு ரூபா 2,050,800 செலுத்தப்பட்டிருந்தது. | சுத்திகரிக்கும் பிரிவிற்கு கையளிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இரசாயண பொருட்கள் மற்றும் உபகரணங்களை கையேற்றல் தொடர்பாக வியாபார பேருடன் சகல தகவல்களும் சுத்தகரித்தல் நிருவாக பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும் இரசாயண பொருட்கள் மற்றும் உபகரணங்களை கையேற்கும் போது அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்காதிருந்தமை கணக்காய்வில் அவதானிப்புடன் இணங்குகின்றோம். | |
| (ஆ) | கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 2022 ஆம் ஆண்டில் வருடாந்த 05 பச்சை உணவுத் தொகுதிகளின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் தேசிய போட்டியாளர் கேள்வி கோரும் முறையின் கீழ் தனித்தனியாக கேள்வி கோரப்பட்டிருந்த போதிலும் அதன் போது சமர்ப்பிக்கப்பட்ட ஆகக் குறைந்த கேள்விப் பெறுமதியை விட ரூபா 51 மில்லியனால் அதிகரித்த | இணங்குவதுடன் இது தொடர்பாக விரிவான ஆலோசனைக் கோவையை இயலுமான வரை விரைவாக ஒப்பந்தகாரருக்கு எழுத்து மூலம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் அந்தக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட விலை | இது தொடர்பாக முழுமையாக சுயாதீன விசாரணை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

கேள்வி பெறுமதிக்கு மேற்கூறப்பட்ட ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்திருந்த கேள்வி தாரரால் திருப்திகரமான சேவை ஒன்றை பெற்றுக்கொள்ளாமை மற்றும் அந்த நிறுவனத்தின் நிதி ஸ்திரத்தன்மை தொடர்பாக ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தமை போன்ற விடயங்கள் அமைச்சின் பெறுகை B குழுவினால் காண்பிக்கப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்த காலம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த ஒப்பந்த காலம் 2023 மார்ச் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பான கணக்காய்வின் போது 2022 ஆம் ஆண்டில் வைத்தியசாலையின் உள்ளபடியான சமைக்காத உணவுப் பொருட்கள் பயன்பாடு அதன் மதிப்பீட்டில் 32 சதவீதமாக இருந்தமையால் அந்த மதிப்பீடு 68 சதவீதத்தினால் அதாவது ரூபா 250 மில்லியனால் மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 1.2 மில்லியன் ஆன 12 விடயங்கள் எந்தவொரு சந்தர்ப்பத்தின் போது கொள்வனவு செய்யப்படாதிருந்தமையும் சமைக்காத உணவுப் பொருட்களில் ஐந்து (05) விடயங்கள் மிகை மதிப்பீட்டின் மூலம் மாத்திரம் மொத்த கிரய மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததன் தாக்கம் 40 சதவீதத்தை விட அதிகமாக இருந்தமையும் அவதானிக்கப்பட்டது. இவ்வாறு தேவைகளில் 68 சதவீதத்தினால் மிகைக் எண்ணிக்கைகளின் நியாய தன்மையை மீண்டும் மதிப்பீட்டுக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பெறுகைகளின் போது கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட பிரகாரம் விலை மதிப்பீட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| | கணிப்பீடு செய்யப்பட்டமையால் கேள்விதாரரிடமிருந்து பெறவேண்டிய செயலாற்றல் பிணைமுறியின் பெறுமதி உள்ளபடியான சமைக்கதா உணவுப்பொருட்களின் தேவையுடன் ஒப்பிடும் போது 25 சதவீதம் முதல் 152 சதவீதம் வரையிலான உயர்ந்த வீச்சில் காணப்பட்டதன் மூலம் இயலுமான வரை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு பெறுகைகளுக்காக நியாயமாக பங்குபற்றுதல் நம்பிக்கை இழந்திருந்தமையும் போட்டியாளர்களின் ஆகக்குறைந்த விலையின் கீழ் சமைக்காத உணவுப் பொருட்களை வழங்குவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆக குறைந்த கேள்விப் பெறுமதியினை விட ரூபா 51 மில்லியனால் அதிகரித்த கேள்விப் பெறுமதியில் சமைக்காத உணவுப் பொருட்கள் வழங்கும் நிலைமைக்கு உட்பட்டிருந்தது. | | |
| (இ) | கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பல்வேறு பிரிவுகளினால் லொன்றிகளுக்கு கையளிக்கப்படுகின்ற அழுக்கடைந்த ஆடைகள் கையேற்று வகைப்படுத்தப்பட்டு கழுவும் பிரிவிற்கு கையளித்தல் மற்றும் அயன் பிரிவிற்கு வழங்கப்படுகின்ற துணிகள் மீண்டும் வகைப்படுத்தப்பட்டு உரிய பிரிவுகளுக்கு அனுப்புதல் சுகாதார பிரிவு 17 சிற்றூழியர்களின் குழுவினால் மேற்கொள்ளப்படுவதுடன் அவ்வாறு வகைப்படுத்தப்படுகின்ற துணிகள் கழுவும் இயந்திரத்திற்கு அனுப்புதல், உலர்த்தும் இயந்திரத்திற்காக துணிகளை அனுப்புதல் மற்றும் துணி பிரிவுகளுக்காக துணி | பதிலளிக்கப்படவில்லை. | இது தொடர்பாக முழுமையான சுயாதீன விசாரணை ஒன்று மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த தரப்பினர் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அயன் செய்யும் பிரிவுகளுக்காக தேசிய போட்டியாளர் கேள்வி கோரும் முறை பின்பற்றி கூறு விலை கோரப்பட்டு இரண்டு வருடங்களுக்காக அதாவது 2022 பெப்ரவரி 01 ஆந் திகதி முதல் 2024 சனவரி 31 ஆந் திகதி வரை தனியார் நிறுவனத்துக்கு மாதாந்தம் ரூபா 796,000 வீதம் ரூபா 19,104,000 தொகையில் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே லொன்றிக்கு சொந்தமாகக் காணப்படுகின்ற 25 சேவைகள் மற்றும் பராமரிப்பிற்காக தனியார் நிறுவனம் ஒன்றுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் பணிப் பொறுப்பாக "எந்தவொரு தினத்திலும் கழுவுவதற்காக அந்தப் பிரிவுகளில் சமர்ப்பிக்கப்படுகின்ற துணிகள் அத்தினமே கழுவப்பட்டு வேலை பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்படல் வேண்டும்" என்ற விடயத்தில் உடன்படிக்கை உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களுக்கு கையளிக்கப்படுகின்ற பணிகள் என்ன என்பது தொடர்பாக குறிப்பாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தத்தின் பணிப்பொறுப்புக்களுக்காக ஏற்படுகின்ற செலவினம் தொடர்பான கிரய மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கையின் பிரகாரம் துணிகளைத் துவைத்தல் நடவடிக்கைகள் மேற்கொண்டு மின்சார சலவை இயந்திரத்தை பயன்படுத்திச் செல்வதற்காக 16 பேர்களை உடைய ஆகக் குறைந்த பதவியணியினர்

| | | | |
|---|---|---|---|
| | ஒன்று சேவையில் ஈடுபடுத்த வேண்டியிருந்த போதிலும் 2022 பெப்ரவரி 01 ஆம் திகதி முதல் 2023 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை 454 பேர்களில் 311 பேர் ஆகக்குறைந்த ஊழியர் எண்ணிக்கையில் 16 பேர்களுக்கு மேல் குறைவாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். கேள்வி ஆவணங்களின் மூலம் கோரப்பட்டிருந்த தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டமைக்கு வைத்தியசாலை சான்றிதழ் பத்திரம் சமர்ப்பித்து ஊழியர்களுக்காக தகைமை பூர்த்தி செய்திருந்தமை வைத்தியசாலைக்கு எழுத்து மூலம் உறுதிப்படுத்தப்படாத ஊழியர்கள் தெரிவு செய்யப்பட்ட காலப்பகுதி முழுவதும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | | |
| (ஈ) | 2021 யூன் 01 ஆந் திகதி முதல் 2023 மே 31 வரையான இரண்டு வருட காலத்திற்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மின்சார சலவைக்கூட இயந்திரங்கள் 18 இன் சேவை மற்றும் பராமரிப்பிற்காக ஒப்பந்தகாரர் தனியார் கம்பனிக்கு 2021 யூன் 06 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்தது. தனியார் கம்பனியின் உரிமையளாராக செயற்படுகின்ற நபர் மேலே காண்பிக்கப்பட்ட துணிகளை கழுவும் நடவடிக்கைகள் மேற்கொண்டு மின்சார சலவைக்கூடத்தை பேணிச் செல்லும் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு நிறுவனத்தின் தலைவரினாலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் ஆகக் குறைந்தது 16 ஊழியர்களை உடைய துணி துவைக்கும் பதவியணியினர் | இணங்குவதுடன் இந்த நிறுவனத்தின் உரிமையளர் உரிய ஆடைகளைக் கழுவுதல் நிறுவனத்தின் உரிமையாளராக இருந்ததுடன் அதன் முகாமையாளராகவும் கடமையாற்றுகின்மையால் 16 பேர்களையுடைய ஆகக் குறைந்த பதவியணியினரில் முகாமையாளரையும் உள்ளடக்க வேண்டியிருந்தமை உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தமையும் சலவைக் கடமைகளுக்காக போதியளவான ஊழியர் தரப்பு அறிக்கையிடப்படாத சந்தர்ப்பங்களின் போது உரிய நபர்களுக்காகவும் கடமைகளை | இது தொடர்பாக முழுமையாக சுயாதீனமான விசாரணை மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த தரப்பினர் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

சேவைக்காகவும் பெயர் குறிப்பிடப்பட்டு மாதாந்தம் கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே சலவை கூடத்தில் துணிகளை சுத்தம் செய்யும் சேவையில் ஈடுபட்டிருந்த ஊழியர்களினாலும் சில தினங்களில் சலவைக்கூட இயந்திரங்களில் மாதாந்த சேவை மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. கேள்வி ஆவணங்களின் பிரகாரம் இயந்திரம் தொடர்பாக மாதத்திற்கு ஒரு தடைவ சராசரி சேவை பணிகள் 09 (Routine Services) மேற்கொள்ள வேண்டியிருந்தமை குறிப்பிடப்பட்ட போதிலும் அந்த நிபந்தனை ஒப்பந்தகாரருடன் 2021 யூலை 07 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையில் அல்லது கேள்வி நிபந்தனை உடன்படிக்கையின் ஒரு பகுதியாக இருந்தமை பிரிவு அல்லது உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மாதாந்த கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்வதற்காக சேவை பணிகள் 15 இற்கு அண்ணளவான அளவு மேற்கொள்ளப்பட்டமை சேவை மற்றும் பராமரிப்பு அறிக்கை மூலம் காண்பிக்கப்பட்ட போதிலும் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்த்தல்கள் தெளிவாக பரிசோதனை செய்த போது சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிழையாக இருந்தமை உறுதி செய்யப்பட்டது. இரண்டு வருடகாலப் பகுதியில் சலவைக்கூடத்தின் இயந்திரங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது 07 சந்தர்ப்பங்களின் போது மேற்கொண்டு தன்னையும் உள்ளடக்கி உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக முறையான விசாரணைகள் மேற்கொண்டு கணக்காய்வுக்கு அறிக்கை இடப்படும்.

மேற்கொள்ளப்பட்ட பழுது பார்த்தல் நடவடிக்கைகளுக்காக வைத்தியசாலையினால் 181 சதவீதம் முதல் 1067 சதவீதம் வரையிலான வீச்சில் பிரகாரம் இணங்கப்பட்ட விலையினை விட அதிகரித்த விலை, அந்த விலை அதிகரிப்பு மூல ஆவணங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படாமல் ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்ட இலக்கம் 26 என்ற பிளட் அயன் இயந்திரம் (3200mm) உரிய செயற்படுநிலையில் காணப்படாதிருந்த நிலைமையால் ஸ்தாபிக்கப்பட்ட தினத்திலிருந்து சலவைக்கூடத்தில் பயன்படுத்தப்படாதிருந்த இந்த இயந்திரமும் சேவை மற்றும் பராமரிப்பு உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டு உரிய காலப்பகுதிக்காக மாத்திரம் ரூபா 310,000 கொடுப்பனவு ஒன்று ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(உ) 2022 மார்ச் 01 ஆந் திகதி முதல் 2023 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்காக மகரகம அப்பேட்சா வைத்திசாலைக்காக பாதுகாப்பு சேவை வழங்குதல் தொடர்பான ஒப்பந்தம் தனியார் கம்பனி ஒன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அந்த ஒப்பந்த காலம் 2023 மார்ச் 31 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2023 ஏப்ரல் 01 முதல் 2024 மார்ச் 31 வரையான காலப்பகுதிக்காக கேள்வி கோராமல் இந்த தனியார் நிறுவனத்தில் மாதாந்தம் ரூபா 2,897,113 தொகையில் பாதுகாப்பு சேவை

வருகை மற்றும் வெளிச்செல்கை பதிவேட்டில் கையொப்பம் இடுகின்ற நபர்களினால் தமது கையினால் சேவை இலக்கம் தமது பெயர் மற்றும் பதவி ஏட்டில் குறிப்பிடுவதற்கு அறிவுறுத்தப்பட்டமை, இதன் மூலம் போலியாக கையொப்பம் மற்றும் பெயர் உள்ளடக்குதலைத் தடுத்தல் மற்றும் மேற்பார்வை இலகுபடுத்துதல் இந்த தொடர் இலக்கம் குறிப்பிடப்பட்டுள்ள DUTY ROSTER என்ற

இது தொடர்பாக முழுமையான சுயாதீன விசாரணைகள் மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த தரப்பினர் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

பெற்றுக்கொள்வதற்கு தீர்மாணிக்கப்பட்டிருந்தது. 2024 பெப்ரவரி 05 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது உடன்படிக்கையின் பிரகாரம் இரவு பாதுகாப்பு சேவையில் ஈடுபடவேண்டிய பாதுகாப்பு ஊழியர்கள் 32 இனை விட 10 ஊழியர்கள் குறைவாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையும் அதில் 19 பேர்கள் 2024 பெப்ரவரி 04 பகல் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களாக இருந்தமையால் அந்த உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு முரணாக இருந்தமையும் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட 23 உத்தியோகத்தர்களில் 15 உத்தியோகத்தர்கள் மாத்திரம் வைத்தியசாலை நிர்வாகத்திற்கு தொடர்புபடுகின்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்களில் பகல் மற்றும் இரவு சேவை பாதுகாப்பிற்காக வருகை மற்றும் வெளிச்செல்கை கையொப்பமிடுகின்ற பதிவேட்டில் கையொப்பம் இட்டிருந்தமையும் 12 பேர் போலியாக பெயர் இட்டு கையொப்பம் இட்டிருந்தமையும் 02 பேர்களுக்குச் சொந்தமான அடையாள அட்டை காணப்படாமையின் காரணமாக அவர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்த முடியாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. பகல் இரவு கடமைகளில் அடையாளமிடும் பதிவேட்டின் பிரகாரம் 2023 சனவரி மாதத்தில் 21 ஊழியர்களுக்கு 12 மணித்தியாலங்களை விஞ்சி 24 மணித்தியாலம் முதல் 732 மணித்தியாலம் வரையான வீச்சின் பிரகாரம் தொடர்ச்சியாக பாதுகாப்பு சேவையில் பதிவேடு பாதுகாப்புப் பிரிவின் மூலம் தனிப்பட்ட ரீதியில் பேணிச் செல்லப்படுகின்ற பதிவேடாக இருந்ததுடன் அது தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகத்திற்கு அறிவிக்கப்படாமையினால் அது தொடர்பாக தகவல்கள் பாதுகாப்புப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளல், வைத்தியசாலையில் இதுவரை கொடுப்பனவு செய்யப்படுகின்ற பாதுகாப்புப் பிரிவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற பகல் இரவு வருகைப் பதிவேட்டின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்படுகின்றது.

மேலே குறிப்பிடப்பட்ட களவுகள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதுடன் இதன் பின்னர் 2023 ஆம் ஆண்டுக்குரிய பட்டியல்களில் ஏற்படுகின்ற நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ஈடுபடுத்தப்பட்டிருந்தமையும் இந்த நிலைமை 2023 ஆம் ஆண்டு முழுவதும் காணப்பட்டமையும் அதற்காக வைத்தியசாலையால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | களுத்துறை போதனா வைத்தியசாலையில் 2022/2023 ஆம் ஆண்டுக்காக சுத்திகரிப்பு சேவை பெற்றுக்கொள்ளும் சேவைக்குரிய கேள்வி நிபந்தனையகளின் பிரகாரம் சுத்திகரிப்பு சேவைகளுக்குரிய ஒவ்வொரு பிரிவையும் சுத்தப்படுத்துவதற்காக 141 தொழிலாளர்கள் ஈடுபடுத்த வேண்டியிருந்ததுடன் அந்த அளவில் ஆகக்குறைந்தது 20 சதவீதம் ஆண் தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படல் வேண்டும். எனினம் ஈடுபடுத்தப்பட்ட ஒட்டுமொத்த தொழிலயாளர்களின் எண்ணிக்கை 116 மாத்திரமாக இருந்ததுடன் அதில் ஆண் தொழிலாளர்களின் எண்ணிக்கை 13 அதாவது 11 சதவீதம் மாத்திரம் ஆகும். உடன்படிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு செய்யும் போது ஒப்பந்தகாரரால் சம்பளம் மற்றும் மேலதிக நேர உடன்படிக்கை செய்யப்பட்ட முறையில் தமது ஊழியர்களுக்கு செலுத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் 2022 யூலை முதல் 2023 மார்ச் வரை 08 மாதகாலப்பகுதியில் தொழிலாளர்களுக்காக சாதாரண வார நாட்களில் வழங்கப்பட்ட சேவைகளுக்காக வைத்தியசாலையினால் செலுத்தப்பட்ட தொகையில் | உடன்படிக்கையின் பிரகாரம் தொழிலாளர் சேவையில் ஈடுபடுத்த வேண்டியிருந்தமைக்கு உரிய நிறுவனம் அறிவித்திருந்ததுடன் தற்போது ஆண் ஊழியர்கள் சரியாக சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இந்த விடயங்கள் தொடர்பாக உடன்படிக்கையின் 5.11 ஆம் பிரிவின் பிரகாரம் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளம் மற்றும் மேலதிக நேரம் ஊழியர்களுக்கு செலுத்துமாறு ஒப்பந்தகாரர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் வகையில் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (வழங்கல்) மற்றும் மேலதிக செயலாளர் (பெறுகைகள்) அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இரசாயணப் பொருட்கள் குறித்துரைத்த நியமம் இன்றி அறிந்த பின்னர் அதற்காக கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டு நியமத்தினுடனான இரசாயணப் பொருட்கள் நேரடியாக | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் சேவைகளை வழங்குவதற்கு பெற்றுக்கொள்வதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து வைத்தியசாலையினால் மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள சம்பளத்தை மீள அறவிடல் வேண்டும். அவ்வாறே நியமம் இன்றி இரசாயணப் பொருட்களை பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பம் அளித்த பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டி இருந்ததுடன் ஒப்பந்தகாரர் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை |

ரூபா 13,539,392 இணை விட அதிகரித்த தொகையும் ஊழியர்களின் பொதுவான மேலதிக நேரமாக வைத்தியசாலையினால் செலுத்தப்படுகின்ற தொகையில் ரூபா 2,933,542 தொகையும் வேலை பரிசோதகரினால் பொதுவான மேலதிக நேரத்துக்காக செலுத்தப்பட்ட 254,677 தொகையும் வேலைப்பரிசோதகர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் விசேட மேலதிக நேரமாக செலுத்தப்பட்ட ரூபா 125,550 தொகையும் ஒப்பந்தகாரரால் அசாதாரண இலாபமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

வழங்கப்பட்ட சுத்திகரித்தல் இரசாயன பொருட்கள் அடங்கிய உறைகள் இலங்கை நியம சான்றிதழ் பெற்று திறப்படாதிருந்த சந்தைகளில் உறையிடப்படாதிருந்ததுடன் இரசாயணப் பொருட்கள் வழங்கியதன் பின்னர் எஞ்சுகின்ற கொள்கலன்கள் மூலம் தொடர்ச்சியாக மீள ஒப்பந்தகாரர்களினால் எடுத்துச் செல்லப்பட்டு மீண்டும் அந்த கொள்கலன்களில் நிரப்பப்பட்ட இரசாயணப் பொருட்கள் வழங்குவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. 2023 ஆகஸ்ட் 15 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட 06 மாதிரிகளுக்கு உரிய பரிசோதனையின் போது அந்த 06 மாதிரிகளும் குறித்துரைத்த நியமத்தில் இல்லாதிருந்தமை ITI நிறுவனம் உறுதிப்படுத்தியிருந்தது.

குறித்துரைத்த நியமம் இன்றி வழங்கப்பட்ட இரசாயண பொருட்களுக்காக வழங்குனருக்கு 2022 யூலை முதல் 2023 மார்ச் வரை செலுத்தப்பட்ட ரூபா 3,023,405 தொகை கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட பின்னர் ஒப்பந்தகாரரிடமிருந்து

வைத்தியசாலையினால் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | அறவிடப்பட்டிருந்த போதிலும் இந்த காலப்பகுதியில் சுகாதார பாதுகாப்பான சுத்தப்படுத்தல் சேவைகள் வைத்தியசாலைகளில் கிடைக்காதிருந்தமை இதன் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது. | | |
| (எ) | உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைப் பிரிவின் கீழ் காணப்படுகின்ற இலத்திரணியல் பிரிவிற்கு Patient Monitors இற்காக பெறுமதி ரூபா 24,520,000 ஆன SP02 Sensors விடயம் 4,000 மேலதிக உதிரிப்பாகங்களின் பெறுகைகளின் போது கேள்வி நிபந்தனை 3.7 இன் பிரகாரம் கேள்வி தாரர் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு சான்றுதழ் பெறவேண்டியிருந்த போதிலும் அவ்வாறு பதிவுச் சான்றிதழ் இன்றிய மூன்று கேள்விதாரர்களின் மாதிரிகள் கோரப்பட்டு கேள்வி மதிப்பீடு செய்யப்பட்டு பதிவு சான்றிதழ் இன்றிய கேள்வி தாரருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. கேள்வி மதிப்பீட்டின் போது பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.7.7, 7.8.6 மற்றும் 7.11 இணங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்யும் போது உரிய மருத்துவ உபகரணங்களுக்காக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு சான்றிதழ் காணப்பட்ட போதும் மேலதிக பாகங்கள் மற்றும் துணைப்பாகங்களுக்காக தனிப்பட்ட ரீதியில் சான்றிதழ் பெறப்படாதிருந்தமை, அதனால் உரிய மதிப்பீட்டின் போது கேள்விதாரரால் மேலதிக பாகங்கள் மற்றும் துணைப்பாகங்களுக்கு உரித்தான சான்றிதழ் சமர்ப்பிக்கப்படாதிருந்தமையால் மதிப்பீட்டு நடவடிக்கைகளின் போது அவை கவனத்தில் கொள்ளாது உரிய துணைப்பாகங்கள் மதிப்பீடு செய்யப்பட்டமையும் பட்டது. அவ்வாறே மேலதிக உதிரிப்பாகங்கள் மற்றும் துணைப்பாகங்களின் பயன்பாடு தொடர்பாக எந்தவொரு பிரச்சனையும் எழுந்திருக்கவில்லை. | இது தொடர்பாக விசாரணை செய்து பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைப் பிரிவினால் பெறுமதி ரூபா | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | 7,300,000 ஆன NIBP Cuffs 4000 பெறுகைகளின் போது கேள்வி கோரும் ஆவணத்தில் நிபந்தனை இலக்கம் 3.7 இன் பிரகாரம் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவுச் சான்றிதழ் (NMRA) தேவை காண்பிக்கப்பட்டிருந்ததுடன் 11 கேள்விகளிலும் 04 கேள்விகளில் NMRA பதிவு வழங்குனர்களிடம் காணப்பட்டது. கேள்வி மதிப்பீட்டுக்காக ஒரு NMRA சான்றிதழ் உள்ள வழங்குநருடன் 05 பேர்களின் மாதிரிகள் கோரப்பட்டிருந்தது. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.7 இற்கும் 7.9.1 இற்கும் இணங்காத வகையில் கேள்வி மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவுச் சான்றிதழ் இன்றி கேள்விதாரருக்கு ஒப்பந்தம் அளிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஐ) | உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைப் பிரிவினால் பெறுமதி ரூபா 1,450,000 ஆன Infusion Pumps இற்காக மேலதிக பாகங்கள், துணைப்பாகங்களின் பெறுகைகளின் போது தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் சட்டத்தின் 82 ஆம் பிரிவின் பிரகாரம் NMRA சான்றிதழ் பெறாதிருந்ததுடன் கேள்வி மதிப்பீட்டின் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.7.7, 7.8.6 மற்றும் 7.11 இற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் சட்டத்தின் 82 ஆம் பிரிவின் பிரகாரம் மருத்துவ உபகரணங்களுக்காக மேலதிக துணைப் பாகங்கள், உதிரிப்பாகங்கள் இறக்குமதி செய்வதற்கு அனுமதிப் பத்திரம் பெறவேண்டியிருந்த போதும் உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைப் பிரிவின் இலத்திரணியல் பிரிவிற்கு பெறுமதி ரூபா 3,702,675 ஆன Patient Monitors இற்கான Nibp Pumps பெறுகைகளின் போது மற்றும் பெறுமதி ரூபா 21,300,000 ஆன Patient Monitors இற்காக Etoc2 Sensor 120 அலகுகள் கொள்வனவு செய்யும் போது NMRA பதிவுச்சான்றிதழ் பெறப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைப் பிரிவின் இலத்திரணியல் பிரிவிற்கு தேவையான மேலதிக பாகங்கள், துணைப் பாகங்களின் பெறுகைகளின் போது பெறுகைகள் வழிகாட்டியின் 2.8.5 இன் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு ஒன்று நியமிக்கப்படாமல் 12 சந்தர்ப்பங்களுக்கு உரியதாக பெறுமதி ரூபா 44,365,447 மேலதிக பாகங்கள் , துணைப்பாகங்கள் பெறுகைகளுக்காக சட்ட உத்தியோகத்தரின் விருப்பத்தின் பிரகாரம் வழங்கப்பட்ட பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டு பெறுகைக் குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்யும் போது உரிய மருத்துவ உபகரணங்களுக்காக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவுச்சான்றிதழ் காணப்பட்ட போது மேலதிக பாகங்கள் மற்றும் துணைப் பாகங்களுக்கான தனியான சான்றிதழ் பெறப்படாதிருந்தது. அதனால் உரிய மதிப்பீட்டின் போது கேள்விதாரரால் மேலதிக பாகங்கள் மற்றும் துணைப் பாகங்களுக்குரித்தான சான்றிதழ் சமர்ப்பிக்கப்படாதிருந்தமையால் மதிப்பீட்டு நடவடிக்கைகளின் போது அதனைக் கவனத்தில் கொள்ளாது உரிய துணைப்பாகங்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டது. அவ்வாறே மேலதிக பாகங்கள் துணைப்பாகங்களின் பயன்பாடு தொடர்பாக எந்தவொரு பிரச்சனையும் எழுந்திருக்கவில்லை. கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட விடயங்களுடன் இணங்குவதுடன் தற்போது சகல மதிப்பீட்டு நடவடிக்கைகளும் முறையான பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் ஊடாக மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | | எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஓ) | 2023 ஆம் ஆண்டுக்காக மகரகம அபேக்ஷா வைத்தியசாலைக்காக சுத்திகரிப்பு சேவையினை வழங்கும் போது முழுமையாக வைத்தியசாலைக்காக சுத்திகரிக்கும் சேவை வழங்குதல் ஒரு ஒப்பந்தமாக கொண்டு பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் போது இரசாயண மருத்துவத் தொகுதி தவிர அபேக்ஷா வைத்தியசாலை ரசாவி மருத்துவ தொகுதியாக ஒப்பந்தம் இரண்டாக பிரித்து தனித்தனியாக பெறுகை நடவடிக்கைகள் மேற்கொண்டு ஒப்பந்தங்கள் இரண்டும் ஒரே சுத்திகரிக்கும் சேவை வழங்குனருக்கு வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறு நடவடிக்கை எடுத்தமையால் இரண்டு ஒப்பந்தங்களுக்காக தனித்தனியாக பொது மேந்தலைக் கிரயத்தை செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தது. ரசாவி மருத்துவ கட்டிட தொகுதி தவிர அபேக்ஷா வைத்தியசாலையின் சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்காக 2021/2022 கேள்வியின் மூலம் இனங்காணப்பட்ட மொத்த ஊழியக்கிரயத்தில் 15 சதமான பொது மேற்தலைக் கிரய எல்லை முறையாக பகுப்பாய்வு செய்யப்படாமல் 25 சதவீதம் வரை உயர்த்தப்பட்டதன் காரணமாக ஒப்பந்தகாரரால் பொது மேந்தலைக் கிரயத்தின் கீழ் ஊழியர் பராமரிப்பு மாதாந்த/ வருடாந்த வழங்க வேண்டிய உபகரணங்களுக்காக முன்னைய ஆண்டின் கிரயத்தை விட முறையே 280 | இதன் பின்னர் 02 அலகுகளும் ஒரு ஒப்பந்தகாரரின் கீழ் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. சில கிரயக்கூறுகள் கணக்காய்விற்காக காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் மூலத்திலிருந்து முறைப்படுத்த வேண்டியிருந்தமையால் அநேகமாக பொது மேந்தலைக் கிரயக்கூறுகள் அவ்வாறு மூலத்தின் மூலம் உறுதிப்படுத்த முடியாதிருந்தமையால் ஒட்டுமொத்த பொது மேந்தலைக் கிரய மூலங்களின் மூலம் உறுதிப்படுத்துவதைக் காண்பித்தல் நடைமுறை ரீதியில் முடியாதிருந்தது. எனினும் கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக கவனம் செலுத்தி மூலத்திலிருந்து உறுதிப்படுத்த முடியுமான பொது மேந்தலைக் கூறுகளை அவ்வாறு உறுதிப்படுத்திய பின்னர் மாத்திரம் கொடுப்பனவு மேற்கொள்ளபடும் என்ற நிபந்தனை எதிர்காலத்தில் ஒப்பந்த உடன்படிக்கைகளை உள்ளடக்கப்படும். சுத்திகரிப்பு சேவைகளை வழங்குவதற்காக கேள்விதாரரால் சமர்ப்பிக்கப்படுகின்ற இரசாயணப் பொருட்களை உள்ளடக்கிய பல்வேறு பொருட்களுக்காக | இது தொடர்பாக விசாரணைகள் மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

சதவீதம் மற்றும் 146 சதவீத கிரய அதிகரிப்புடன் தனித்தனியாக குறிப்பிடப்படாமல் ஏனைய பொது மேந்தலைக் கிரயத்திற்காக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 1027 சதவீத கிரய அதிகரிப்புடன் விலை சமர்ப்பிப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. கேள்வி நிபந்தனைகளின் பிரகாரம் சுத்திகரிக்கும் சேவைகளுக்காக தேவையான இரசாயணப் பொருட்கள் உரிய நியமத்துடன் உள்ளமை உறுதி சான்றிதழ் ஒன்று ஏற்றுக்கொள்ளக்கூடிய நிறுவனத்தில் இருந்து பெற்று சமர்ப்பிக்கப்பட வேண்டி இருந்த போதிலும் ஒப்பந்தகாரரால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருக்கும் போது மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுகூட அறிக்கையின் பிரகாரம் வழங்குவதற்கு இணங்கப்பட்ட இரசாயணப் பொருள் வகைகள் 4 இல் 3 உரிய நியமம் இன்றி இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் போது இந்த ஒப்பந்தகாரருக்கு நியாயமான ரீதியில் நியாயமான கேள்விதாரராக தெரிவு செய்யப்பட்டிருந்தார். ஒப்பந்தகாரர் வழங்கியிருந்த இரசாயணப் பொருட்களில் 9 வகைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகூடப் பரிசோதனையின் பிரகாரம் அதில் இரசாயணப் பொருட்களில் 6 வகைகளும் நியம அளவிடைப்பெறுமதிகளுக்கு இணங்காதிருந்ததுடன் மிகுதி இரசாயணப் பொருட்களில் 3 வகைகள் தொடர்பாக பெறப்பட்ட ஆய்வுகூட அறிக்கைகளில் நியம பெறுமதி காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. ரசாவி மருத்துவ கட்டிட தனித்தனியான நியமங்களை பரீட்சிப்பதற்காக உரிய இரசாயண அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் நியமத்திற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற சான்றிதழ்களின் சரியான தன்மையினைப் பரீட்சித்தல் காலம் எடுக்கின்றமை, சிக்கலான மற்றும் வசதியீனமான நடவடிக்கைகள் காணப்பட்டமை அதன் பிரகாரம் எதிர்கால பெறுகை நடவடிக்கைகளின் போது வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற பொருட்கள் யாவும் 2003 இன் 09 ஆம் இலக்க நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை சட்டத்தின் கீழ் அதிகார சபையினால் குறித்துரைக்கப்படுகின்ற மாதிரிகளுக்கு இணங்கிய நியம தரத்துடன் உரிய பொருட்களை மாத்திரம் வழங்கவேண்டுமென ஒப்பந்த நிபந்தனைகளில் உள்ளடக்கப்படும். இது தொடர்பாக கண்டறிந்து தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக தொடர்புடைய தரப்பினருக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். வருடாந்தம் உபகரணங்களுக்காக கேள்வி ஆவணங்களில் கூறுவிலை சமர்ப்பிக்காதிருந்ததுடன் அதற்காக வைத்தியசாலையினால் பணம் செலுத்தப்படுவது இல்லை. கேள்வி ஆவணங்களில் பொது மேந்தலைக் கிரயத்தின்

| | | | |
|---|---|---|---|
| | தொகுதி தவிர அபேக்ஷா வைத்தியசாலையின் சுத்திகரிப்பிற்காக மாதாந்தம் வழங்க வேண்டிய உபகரண விடயங்கள் 17 இற்குரிய 66 உபகரணங்களும் ரசாவி மருத்துவ கட்டிட தொகுதியின் சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்காக 05 உபகரண விடயங்களுக்கும் உரிய 14 உபகரணங்கள் குறைவாகவும் ஒப்பந்தகாரரால் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருந்தது. 2024 பெப்ரவரி 05 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் பிரகாரம் இந்த இரண்டு ஒப்பந்தங்களுக்கும் உரிய பகல் சேவை பாதுகாப்பிற்காக சேவையில் ஈடுபடுத்த வேண்டிய தொழிலாளர்கள் மற்றும் வேலை பரிசோதகர்கள் 15 பேர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | கீழ் ‘‘மாதாந்த/ வருடாந்தம் வழங்க வேண்டிய உபகரணங்களுக்கான கிரயம்’’ எனவே காண்பிக்கப்பட்டுள்ளது. எனினும் கூறுவிலை சமர்ப்பிக்கும் போது தனித்தனியான விடயங்கள் காண்பிக்கப்படாதிருந்ததுடன் மாதாந்தம் வழங்க வேண்டிய உபகரணங்களின் கிரயம் மாத்திரமே காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் உரிய உபகரணங்கள் வைத்தியசாலைத் தேவையின் பிரகாரம் வழங்கவேண்டியிருந்தமை கேள்வி ஆவணங்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வு உத்தியோகத்தரால் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட திகதியில் உள்ளவாறு உரியவாறு இருக்காத ஊழியர்களுக்காக சேவை உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடுவதற்கு நவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஔ) | 2022 ஆம் ஆண்டின் போது மருத்துவ வழங்கல் பிரிவினால் சுகாதார முறைமையினை விருத்தி செய்யும் செயற்திட்டம் (HSEP) ஊடாக ரூபா 268,500,000 பெறுமதியான சத்திரசிகிச்சை குழாய்கள் மீற்றர் 03 மில்லியன் இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. PRONTO முறைமையில் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் வைத்தியசாலைகள் வருடாந்தம் கோஸ் தேவை | Pronto கணனி முறைமையின் பிரகாரம் வருடாந்த சத்திரசிகிச்சை கோஸ் தேவை அண்ணளவாக 53 மில்லியன் மீற்றர் ஆக இருந்ததுடன் அது நிறுவனத்திலிருந்து அனுப்பப்பட்ட எதிர்வு கூறப்பட்ட வருடாந்த மதிப்பீடாக இருந்தது. அவ்வாறே அந்த 30 மில்லியனில் 04 காலாண்டுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட | இது தொடர்பாக விசாரணைகள் மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அண்ணளவாக 53 மில்லியன் மீற்றராக இருந்ததுடன் மருந்து வழங்கல் பிரிவினால் வருடாந்தம் 30 மில்லியன் மீற்றர் அளவில் மதிப்பீடு செய்யப்பட்டு கட்டளையிடப்பட்ட போதிலும் அமைச்சினால் காலாண்டிற்கு 06 மில்லியன் மீற்றர் வீதம் 24 மில்லியன் மீற்றருக்காக மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக போலியான பற்றாக்குறையொன்று காண்பித்து அவசரக் கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டின் போது வருத்துவ வழங்கல் பிரிவில் பதிவு சத்திரசிகிச்சை கோஸ் வழங்குனர்கள் 302 பேர்களில் 36 பேர்களினால் 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடியின் காரணமாக காணப்பட்ட விலைகளின் கீழ் தமது பங்கிற்குரிய – வழங்க முடியாதிருந்ததை அறிவித்திருந்தமையும் மொத்த வருடாந்த தேவைகளை சரியாக மதிப்பீடு செய்து தேவையினை பூர்த்தி செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக வைத்தியசாலைகளால் - பற்றாக்குறை ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்து. அதன் பிரகாரம் 03 மாதகாலம் பாதுகாப்பு இருப்பொன்றை பேணிச் செல்வதற்காக 03 மில்லியன் கோஸ் மீற்றர் பெற்றுக்கொள்வதற்கும் ரூபா 500 மில்லியனை விஞ்சிய பெறுகை செயற்திட்டம் பெறுகைக் குழுவிற்கு மேற்கொள்ள முடியாமையின் அடிப்படையில் கட்டளை 03 மில்லியன் மீற்றர் வரை குறைத்து கேள்வி கோஸ் ஆக கருதி வழங்குனர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது . எனினும் இந்த ஒதுக்கீட்டு அளவில் ஒதுக்கீடு கிடைத்த வழங்குனர்களில் சில வழங்குனர்கள் தமது ஒதுக்கீட்டு அளவை முழுமையாக வழங்காதிருந்தமையால் இந்த 06 மில்லியன் குறைபாடு ஏற்பட்டிருந்தது. அதனால் இவ்வாறு புறப்படுகின்ற சத்திரசிகிச்சை கோஸ் பற்றாக்குறை வருடாந்த தேவை மதிப்பீடு செய்யும் பிரச்சனையினால் ஏற்பட்டிருந்ததுடன் ஒதுக்கீட்டினால் இல்லாதிருந்ததாக வழங்குனர்களிடமிருந்து பெறப்பட்ட ஒதுக்கீட்டு முறையாக கிடைக்காதிருந்தது. அந்நிய செலாவணி பற்றாக்குறையின் காரணமாக கோஸ் இற்காக தேவையான பிரதான மூலப்பொருள் இறக்குமதி இடையூறாக இருந்தது. இந்த சத்திரசிகிச்சை கோஸ் பற்றாக்குறை தொடர்பாக கௌரவ அமைச்சர் தலைமை நடைபெற்ற கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் சத்திரசிகிச்சை கோஸ் 12 மில்லியன் சுகாதார முறைமை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் (HSEP) ஊடாக பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது. காணப்படுகின்ற களஞ்சிய இடவசதிகள்

கோருவதற்கும் பதிற்கடமை மருத்துவ வழங்கல் பணிப்பாளரின் பங்குபற்றலில் 2022 நவம்பர் 21 ஆந் திகதி நடைபெற்ற செயற்திட்ட பெறுகைக் குழுவின் போது மருத்து வழங்கல் பிரிவின் அவசர தேவையாகக் காண்பித்து கேள்வி சமர்ப்பித்து ஒரே கேள்விதாரருக்கு கோஸ் 03 மில்லியன் மீற்றர் கட்டளை கையளிப்பதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அது வரையில் மருத்துவ வழங்கல் பிரிவில் அதிக விலையில் கோஸ் மீற்றர் கொள்வனவு செய்யும் அவசர தேவை காணப்படாதிருந்தமையும் கட்டளை கையளிக்கப்பட்ட சந்தர்ப்பம் வரை தேசிய வழங்குனர்களினால் 3,635,700 மீற்றர் கோஸ் அளவு மருத்துவ வழங்கல் பிரிவுக்கு வழங்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. இந்த வழங்குனர் மருத்துவ வழங்கல் பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட முறைமையின் கீழ் ரூபா 74.96 வீதம் கோஸ் வழங்கியிருந்த உள்நாட்டு வழங்குனர் ஆகும். இந்தக்கட்டளையின் போது மீற்றர் ஒன்று ரூபா 89.50 வீதம் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்து வழங்குவதற்கு கேள்வி சமர்ப்பித்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது. எனினும் இந்த இருப்பு இந்தியாவிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டு பெறப்பட்ட இருப்பாக இல்லையாயின் உள்நாட்டு உற்பத்தி இருப்பா என மருத்துவ வழங்கல் பிரிவினால் உறுதிப்படுத்தப்படவில்லை. இதன் காரணமாக உள்நாட்டு ரீதியில் இருப்பு காணப்படும் போது கோஸ் இறக்குமதி செய்யப்பட்டமையினால் மீற்றர் ஒன்றுக்காக மேலதிகமாக ரூபா 14.54 மில்லியன் வீதம் 03 மில்லியன் மீற்றர் கொள்வனவு வரையறையாக இருந்தமையால் அந்த அளவு கோஸ 12 மில்லியன் மீற்றர் முதல் 03 மில்லியன் கோஸ் மீற்றர் வரை குறைத்து கேள்வி கோருவதற்கும் பெறப்பட்ட கூட்டம் மற்றும் உரிய தொழில்நுட்ப மதிப்பீடு மற்றும் கேள்வி சபை ஊடாக மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கேள்வி கோஸ் மீற்றர் ரூபா 89.50 (VAT இன்றி விலை) வகையிலும் மற்றும் 268,500,000 மொத்த பெறுமதியில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் கையளிக்கப்பட்டிருந்தது. ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB-HSEP) செயற்திட்டம் ஊடாக கையளிக்கப்பட்ட சத்திரசிகிச்சை கோஸ் கட்டளை மீற்றர் ஒன்று ரூபா 89.50 வீதம் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்து வழங்குவதற்கு உரிய தீர்மானம் அந்த செயற்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. இறக்குமதி செய்யப்பட்ட இருப்பான சத்திரசிகிச்சை கோஸ் 03 மில்லியன் மீற்றர் அளவு பாதுகாப்பு இருப்பாக வைத்துக்கொள்ளுமாறு கௌரவ சுகாதர அமைச்சரின் தலைமையில் மருத்துவ வழங்கல் பிரிவு பெறுகைக் குழு பெறுகை தொடர்பான 2022.08.19 ஆந் திகதி நடைபெற்ற

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டமையால் ரூபா 43.6 மில்லியன் நட்டம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்தமையும் ரூபா 43.6 மில்லியன் நட்டம் எதிர்பார்க்கப்பட்ட இருப்பை பேணிச் செல்வதற்கான தேவை காணப்படாதிருந்தமையும், மொத்த வருடாந்த தேவை உரிய பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்டு உள்நாட்டு வழங்குனர்களின் ஒதுக்கீட்டை உயர்த்தும் நோக்கில் உள்நாட்டு கைத்தொழில்களைப் பாதுகாக்கம் வகையில் உரிய வழங்கல்களை பெற்றுக்கொள்வதற்கு உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்காதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | கூட்டத்தின் போது சத்திரசிகிச்சை கோஸ்களில் 03 மாத இருப்பு இறக்குமதி செய்யப்பட்ட கட்டளையில் வைத்துக்கொள்ளுமாறு தீர்மானிக்கப்பட்டமையால் இந்த அளவு சத்திரசிகிச்சை கோஸ் அளவு மருத்துவ வழங்கல் பிரிவிற்காக காணப்பட்ட போதும் இந்த இருப்பு பெற்றுக்கொள்ள கூடியதாக இருந்தது. இது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

### 3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கண்டி தேசிய வைத்தியசாலையில் சேவையில் ஈடுபட்டிருந்த சுகாதார சாரதி ஒருவர் 2018 ஆம் ஆண்டு முதல் 2023 யூலை 31 ஆந் திகதி வரை எந்தவொரு கடமையும் நிறைவேற்றியிருக்கவில்லை. அவருக்கு அந்த காலப்பகுதியில் வைத்தியசாலையின் அதிகார தரப்பினரால் எந்தவொரு கடமையும் கையளிக்கப்படாததுடன் அந்த காலப்பகுதிக்குரிய சம்பளமாக ரூபா 2,732,944 செலுத்தப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் அந்த சாரதியால் பெறப்பட்ட சம்பளம் மற்றும் விடுமுறைகளைக் கணிப்பிட்டு 57 நாட்களுக்காக ரூபா 90,380 தொகை 2023 இன் மூன்று மாத சம்பளத்திலிருந்து அறவிடப்பட்டு அரசாங்கக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறே 2023 திசெம்பர் மற்றும் 2024 சனவரி மாத சம்பளம் அற்ற மாத சம்பளத்தில் சம்பளமற்ற விடுமுறைகள் தினங்கள் 47 இற்காக ரூபா 75,811 தொகை அறவிடப்பட்டுள்ளது. மிகுதி கால | இது தொடர்பாக முழுமையாக சுயாதீன விசாரணை மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த தரப்பினர் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எல்லைக்காக சம்பளமற்ற விடுமுறை கணிப்பிடப்படுவதுடன் அந்தக் கணிப்பீட்டை மேற்கொண்டு அறவிடல் அறிக்கையிடப்படும். மேலும் இது தொடர்பாக ஆரம்ப விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் ஆரம்ப விசாரணை சபையின் பரிந்துரையின் பிரகாரம் தேவையாயின் முறையான பரிசேதனை ஒன்று நடாத்துவதற்காக தேவையான பரிந்துரையுடன் சுகாதார அமைச்சிற்கு அனுப்பப்படும். | |
| (ஆ) | மாதாந்தம் வழங்கப்படுகின்ற ஊழியர்களின் உணவுகளுக்காக 1979 மே மாதம் 25 ஆம் திகதிய இலக்கம் SDA/04/79 என்ற சுகாதார பொது சுற்றறிக்கையின் பிரகாரம் ஊழியரின் சம்பளத்தில் மாதாந்தம் ரூபா 10 என்ற சிறு தொகை அறவிடப்பட்டிருந்தது. 1979 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது உணவுகளின் விலை பல மடங்கு அதிகரித்துச் சென்றதுடன் சம்பளத்தில் மிகவும் குறைந்த பெறுமதி அதிகரிக்கப்பட்டிருந்தது. 44 வருடங்கள் முதல் மாற்றமின்றிக் காணப்படுகின்ற கட்டிடத்தை அறவிடலின் காரணமாக அரசாங்கத்துக்கு கணிசமான கிரயம் ஒன்றைச் செலவிட வேண்டி ஏற்பட்டதுடன் ஊழியர்களுக்கு உணவு வழங்குவதாயின் அந்த அரசாங்கத்திற்கு செலவினப் பொறுப்பாக இல்லாத வகையில் கிரயங்களை மேவுகை செய்யும் | பதிலளிக்கப்படவில்லை. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | வகையில் முறைமை ஒன்றைத் தயாரிப்பதற்கு சுகாதார அமைச்சு இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்ட இலக்கம; PB-6544 என்ற கெப் வண்டி எந்தவொரு முறையான அங்கீகாரமுமின்றி 2016 பெப்ரவரி 15 ஆம் திகதி கடுவல பிரதேசத்தில் அமைந்துள்ள தனியார் வாகன பழுது பார்க்கின்ற நிறுவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அந்த பழுதுபார்த்தல் மேற்கொண்டு மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் அந்த நிறுவனத்திலேயே கைவிடப்பட்டிருந்தமை 2023 ஒக்தோபர் 04 ஆந் திகதி அந்த நிறுவனத்திற்கு சென்று மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | இது தொடர்பாக முழுமையாக சுயாதீன விசாரணை மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த தரப்பினர் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கராப்பிட்டி போதனா வைத்தியசாலையில் மருத்துவ ஆய்வுகூடப் பரிசோதனைக்காக 2017 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 16,897,350 ஆன மருத்துவ ஆய்வுகூட பரிசோதனை 03 உபகரணங்கள் 07 வருடகாலமாக எந்தவொரு ஆய்வுகூடப் | இணங்குவதுடன் இந்த உபகரணங்களை கொள்வனவு செய்யும் தீர்மானம் முதல் கொள்வனவு செய்வது வரையான ஒட்டுமொத்த செயற்பாடுகள் புலனாய்வு விசாரணை ஒன்றை மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சிலிருந்து கோரிக்கை விடப்பட்டுள்ளமையும் | இது தொடர்பாக முழுமையான சுயாதீன விசாரணை மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த தரப்பினர் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் உரிய இயந்திரங்கள் உபகரணங்களை பயன்படுத்துவதற்காக விரைவாக நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | பரிசோதனைக்காகவும் பயன்படுத்தப்படாமல் பயனற்றுக் காணப்பட்டமையும் அதில் கூட்டுமொத்தமாக ரூபா 11,602,350 ஆன 02 இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து பயன்பாட்டிற்கு எடுக்காமல் விளைவற்றுக் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | அவ்வாறு இல்லையாயின் விசாரணைகள் கராப்பிட்டி வைத்தியசாலை மூலம் மேற்கொள்ளுமாறு 2024.02.22 ஆம் திகதிய கடிதத்தில் அறிவிக்கப்பட்டிருந்தமையும் எனது 2024.03.15 ஆந் திகதிய கடிதத்தில் திடீர் சுத்திவளைப்பு பிரிவின் மூலம் அல்லது சுயாதீன விசாரணை மேற்கொள்ளுமாறு மீண்டும் கோரப்பட்டுள்ளதுடன் அந்த விசாரணைத் தீர்மானத்தின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | எடுத்தல் வேண்டும். |
| (இ) | அரசாங்கத்தின் காணி தொடர்பான பணிக்கோவையின் 224 ஆவது பிரிவின் பிரகாரம் அரசாங்கத் திணைக்களத்திற்குரிய காணிகளை அளவிட்டு முறையான பிரகாரம் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் பேராதனை போதனா வைத்தியசாலைக்குரிய ஹெக்ரேயர் 7.754 அளவான காணி அவ்வாறு கையேற்கப்பட்டிருக்க வில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | அரசாங்கத்தின் காணிகள் தொடர்பான பணிக்கோவை 224 ஆவது பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கண்டி தேசிய வைத்தியசாலை காணிகள் 1946 திசெம்பர் 20 ஆம் திகதிய இலக்கம் 9642 என்ற வர்த்தமானிப் பத்திரத்தின் 3457 இல் குறிப்பிடப்பட்ட பிரகாரம் கூறு இலக்கம் 04 தவிர கூறு இலக்கம் 01 முதல் 23 | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் வர்த்தமானியின் மூலம் கையேற்கப்படாத பகுதிகளை உரிய பிரகாரம் அரசாங்கத்திற்கு கைப்பற்றுவதற்காக சுகாதார அமைச்சு சட்ட பிரிவுடன் சுகாதார | வைத்தியசாலைக்கு சொந்தமான காணிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரையான 22 கூறுகளின் 28 ஏக்கர் 17 றூட் 313.2 பேர்ச் அளவு ஒன்று வைத்தியசாலைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. 1989 ஆம் ஆண்டில் நிலஅளவையாளர் திணைக்களத்தின் நிலஅளவையாளரினால் ஆரம்ப வரைபடம் 3405 இன் பிரகாரம் கூறு இலக்கம் 01 முதல் 24 வரை 24 கூறுகளாக இருந்தமையும் அதன் பிரகாரம் 1946 ஆம் ஆண்டில் ஹெக்ரேயர் 14.248 ஆக இருந்த போதும் 1989 ஆம் ஆண்டில் வரைபடத்தின் பிரகாரம் 23.637 ஹெக்ரேயர் ஆக இருந்தது. அதன் பிரகாரம் ஹெக்ரேயர் 9.389 (3712.14 பேர்ச்) நிலஅளவில் வேறுபாடு காணப்பட்டது. | அமைச்சின் செயலாளர் மூலம் காணி அமைச்சிற்கு உரிய கையளித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (உ) | 2018 ஏப்ரல் 26 ஆந் திகதி இலக்கம் KDS/KGK/4/5/5/42/03 என்ற கண்டி நகர பட்டினமும் சூழலம் மற்றும் கங்கவெட்டகோரளைவெவி பிரதேச செயலாளரின் கடிதத்தின் மூலம் வைத்தியசாலையின் காணி அனுமதியற்ற 169 குடியிருப்பாளர்களில் 27 பேர் வழக்கு தொடர்ந்திருந்ததுடன் அதனால் இறுதியாக தீர்ப்பு வழங்கப்பட்ட வழங்குகளில் 06 கோவைகளுக்கு விடுவித்தல் கட்டளை வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் கட்டளை அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் கட்டளை வழங்கப்பட்டுள்ள 05 பேர்களின் விபரங்கள் பிரதேச செயலகத்திலிருந்து பெறப்பட்டு அனுமதியற்ற குடியிருப்பாளர்களின் 2024 ஆம் ஆண்டில் உள்ளடக்காமையினால் 04 வழக்கு கோவைகளை அச்சிடல் வழுக்கள் காணப்பட்டதன் காரணமாக நீதிமன்ற கட்டளைகளை அமுல்படுத்த முடியாதிருத்தது. அந்தக் கோவைகளை கையேற்றல் தொடர்பாக சட்டத்தரணிகளின் உதவி விரைவாக வழங்குமாறு சுகாதார அமைச்சின் சட்டப்பிரிவிற்கு | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | | கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது. உரிய இலக்கம் 21654/19 இல் கட்டளை அமுல்படுத்துதல் 2024.05.06 ஆந் திகதியில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |
| (ஊ) | கண்டி வைத்தியசாலையால் வழக்கு தொடரப்பட்டுள்ள அனுமதியற்ற குடியிருப்பாளர்களிடமிருந்து ஆரம்ப வரைபட இலக்கம் 01 பகுதியில் குடியிருப்பாளர்களினால் அவர்களின் கட்டளைகளுக்கு எதிராக வழக்கு இலக்கம் CA 65/2019 இன் கீழ் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. அந்த வழக்கின் தீர்ப்பு 2021 யூலை 27 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்ததுடன் 1958 இன் 98 ஆம் இலக்க வர்த்தமானியை அடிப்படையாகக் கொண்டு இந்த கூறுஇலக்கம் 01 பகுதி வைத்தியசாலைக்கு கையளிக்கபடாதிருந்தமைக்கு இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் வைத்தியசாலையினால் வழக்கு தொடர்வதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட ஆரம்ப வரைபடம் 3405 காணிக் கூறின் சகல வைத்தியசாலைகளுக்கும் சட்டரீதியாக கையேற்கப்படாதிருத்தமை தீர்ப்பின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் எனினும் கூறு இலக்கம் 01 பகுதி ஆரம்ப வரைபடம் 3405, வரலாற்றுத்தாள் கையளித்தல் சான்றிதழின் பிரகாரம் வைத்தியசாலைக்கு உரித்து கூறப்படுகின்றமையால் வழக்கை தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. கூறுஇலக்கம் 01 பகுதி தீர்த்து வைக்கும் நடவடிக்கைகள் சுகாதார அமைச்சின் சட்ட பிரிவு ஊடாக காணி அமைச்சினால் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | -மேற்படி- |
| (எ) | கண்டி பொது வைத்தியசாலைக்குரிய | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் கண்டி | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | தெய்யென்னவெல கிராமத்தில் ஆரம்ப வரைபடம் 803 என்ற 03 றூட் 21.8 பேர்ச் காணி நகர கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டத்தின் கழிவுநீர் பம்பிக்கூடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இந்த கழிவுநீர் பம்பிக்கூடம் தற்போது செயற்படு நிலையில் காணப்படாதிருந்ததுடன் இந்தப் பகுதியில் வைத்தியசாலையின் கனிஸ்ட ஊழியர்களின் 02 உத்தியோகபூர்வ விடுதிகள் காணப்படுகின்றமையும் காணியின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஈடுபட்டமையும் மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. இந்தக் காணி உயர் பொருளாதார பெறுமதியுடைய பிரதேசமாக இருக்கின்றமையால் அதனை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | தெய்யென்னவெல கிராமத்தில் ஆரம்ப வரைபடம் 803 என்ற காணிப்பகுதியில் இலங்கை மின்சார சபையினால் ஆரம்ப மின்சார கூடம் ஒன்று நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் நாள்தோறும் மேற்கூறப்பட்ட வைத்தியசாலைக்குத் தேவையான மின்சாரம் கோரப்பட்டு பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. | |
| (ஏ) | 2020 மார்ச் 31 ஆந் திகதி கண்டி தேசிய வைத்தியசாலையில் இருதயநோய்ப் பிரிவில் ஸ்தாபிக்கப்பட்ட Philips Volcano IVUS & FFR இயந்திரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் இந்த இயந்திரம் உரிய நுகர்வு பொருள் வழங்குகின்ற பலசந்தர்ப்பத்தின் போது அந்த இயந்திரம் வழங்குதல் உள்நாட்டு முகவர் நிறுவனத்திற்கும், உயிரியல் மருத்துவ பொறியியலாளர் பிரிவிற்கும் ஏழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | இது தொடர்பாக முழுமையான சுயாதீன விசாரணை நடாத்தி பொறுப்பு வாய்ந்த தரப்பினர் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | சீன உதவியின் கீழ் வைத்தியசாலைகளில் | இந்த இயந்திரம் 2022.03.29 ஆம் திகதி | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலம் |

| | | | |
|---|---|---|---|
| | சுகாதார முறைமையை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் மூலம் நாவலப்பிட்டி மாவட்ட வைத்தியசாலைக்கு 2022 மார்ச் 29 ஆந் திகதி வழங்கப்பட்ட பெறுமதி ரூபா 20,940,561 (USD73,734.37*284) தொகையான GE Health Care/ Model/Optima XR 646 என்ற Digital Static X – Ray இயந்திரம் ஸ்தாபிப்பதற்காக ரூபா 19,970,008 கிரயம் ஒன்று செலவிடப்பட்டிருந்த போதிலும் இயந்திரம் நோயாளிகளின் சிகிச்சைக்காக 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | வைத்தியசாலைக்கு கிடைத்திருந்ததுடன் இந்த இயந்திரம் வைத்தியசாலையில் ஸ்தாபிப்பதற்காக மேலும் மேற்கொள்ள வேண்டிய உரிய நிறுவனம் வருகை தந்து இயந்திரம் பொருத்தப்பட வேண்டியிருந்தது. இதற்காக உரிய நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டதுடன் தற்போது UPS இயந்திரம் மாத்திரம் 2024.05.03 ஆந் திகதி பொருத்தப்பட்டுள்ளது. | விளைவற்றுக் காணப்படுகின்ற முறையில் உபகரணங்களை வைத்திருத்தல் தொடர்பாக சுயாதீன விசாரணை நடாத்தப்படல் வேண்டும். |
| (ஒ) | பேராதனை பல் வைத்திய பிரிவிற்கு மேற்கூறப்பட்ட தொழில்நுட்பத்தை உடைய Re – Karl Storz Silaendoscopy and visual System இயந்திரம் ஒன்று 2020 மே 04 ஆந் திகதி ரூபா 9,779,724 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டு 2022 ஆம் ஆண்டில் 05 நோயாளிகளின் சிகிச்சை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2022 ஏப்ரல் 25 ஆந் திகதி வரையில் இயந்திரம் செயலிழந்து போயிருந்தது. இயந்திரத்தில் பௌதீக பாதிப்பொன்று ஏற்பட்டிருந்ததாகவும் அது கம்பனியின் பொறுப்பின் கீழ் இல்லாதிருந்ததாகவும் குறிப்பிட்டு அதனால் இலவசமாக உரிய உபகரணங்களை பழுதுபார்க்க | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் அவ்வாறு இயந்திரம் பௌதீக பாதிப்புக்கு உட்பட்டமையால் இதற்கு பொறுப்பு வாய்ந்த நபரை இனங்கண்டு கொள்வதற்காக விசாரணை ஒன்று நடாத்தப்படுகின்றது. ஆது நோயாளர்களின் செயற்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்வதற்கு அவதானிக்கப்பட்டமையால் வைத்தியசாலை செலவினத்தில் பழுது பார்த்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான தாமதங்களை தடுப்பதற்காக இயந்திரம் ஒன்றை செயலிழந்த நிலையில் அல்லாமல் செயலிழந்த உடன் | இது தொடர்பாக விசாரணை நடாத்தி பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததா என இனங்காண வேண்டியிருந்ததுடன் இயந்திரத்தை விரைவாக ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. 2023 சனவரி 22 ஆந் திகதி புதிய Telescope அலகு ஒன்று வழங்குவதற்காக 1 வருட உத்தரவாத காலத்துடன் ரூபா 2,255,896 இற்கு கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய உபகரணங்களை பழுது பார்ப்பதற்கு 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடனடியாக அறிக்கையிடுவதற்காக கணனி மயப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இயந்திரத்தை பரிசோதனை ரீதியில் பயன்படுத்துமாறு உரிய சகல உத்தியோகத்தர்களுக்கும் அறிவிப்பதற்கும் அதற்கான ஆலோசனை மற்றும் பயிற்சி வழங்குவதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஓ) | பேராதனை பல் வைத்தியசாலைக்காக ரூபா 6,250,000 பெறுமதியான Digital Dental Panoramic X – Ray Machine With Cephalostat இயந்திரம் 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த இந்த இயந்திரம் மூலம் முழுமையான பற்களையும் மேவுகை செய்யும் வகையில் X நிழல்படத்தை பெற்றுக்கொள்ளும் இயலுமை காணப்பட்டதுடன் மாதாந்தம் 500 நோயாளர்கள் அளவில் இதன் மூலம் சிகிச்சையளிக்கப்படுகின்றனர். இந்த இயந்திரத்திற்குரிய 2021 திசெம்பர் 09 ஆம் திகதியில் ஆரம்பித்து 04 ஆம் ஆண்டு சேவை மற்றும் பராமரிப்பு உடன்படிக்கை புதுப்பிப்பதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2023 ஆகஸ்ட் மாதம் 09 ஆந் திகதி இந்த இயந்திரம் செயலிழந்திருந்ததுடன் 2023 | இந்த இயந்திரத்தை பழுதுபார்ப்பதற்கான செலவின மதிப்பீடு ஒன்று வழங்குமாறு முகவர் நிறுவனத்திற்கு 2023.12.13 ஆந் திகதி அனுமதிக்கப்பட்டதுடன் அந்த முகவர் நிறுவனத்திலிருந்து 2021.01.08 ஆந் திகதிய கடிதம் மூலம் மேலும் அந்த இயந்திரத்தில் உள்நாட்டு முகவர் அல்லாதிருந்தமையும் அந்த நிறுவனத்தின் மிகுதி நடவடிக்கைகள் வேறாரு நிறுவனத்திற்கு மாற்றப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் அந்த இயந்திரத்தின் பழுது பார்தலுக்காக செலவின மதிப்பீடு ஒன்று வழங்குமாறு 2024.01.08 ஆந் திகதி புதிய முகவர் நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டதுடன் 2024.04.04 ஆந் திகதிய மீள் நினைவூட்டலும் அனுப்பப்பட்டுள்ளது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 31 வரையிலும் பழுது பார்க்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஔ) | இணைந்த சுகாதார விஞ்ஞான பீடத்தினால் பேராதனை போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட C- Arm X-Ray இயந்திரம் 2019 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் பிரதான சத்திரசிகிச்சை கூடத்தில் எலும்பியல் சத்திரசிகிச்சைப் பிரிவில் சத்திரசிகிக்சை மேற்கொள்வதற்காக அனுப்பபட்டுள்ளதுடன் அந்த இயந்திரம் 2022 ஒக்தோபர் 10 ஆந் திகதி செயலிழந்து போயிருந்தது. இது தொடர்பாக வைத்திசாலையின் பிரதிப் பணிப்பாளரால் 2022 ஒக்தோபர் 14 ஆந் திகதி உரிய வழங்குனர் நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் 2022 நவம்பர் 24 ஆந் திகதி உரிய கம்பனியால் இயந்திரம் பரீட்சிக்கப்பட்டிருந்தது. அது மேலும் பரீட்சிப்பதற்கான உபகரணங்களை எடுத்து வர வேண்டியதாக அறிவித்திருந்தது. எனினும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் இயந்திரத்தின் பழுது பார்த்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | -மேற்படி- |
| (க) | கண்டி தேசிய வைத்தியசாலை நுண்ணுயிர் விஞ்ஞான ஆய்வு கூட பரிசோதனையினை மேற்கொள்ளும் போது | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் இந்த இயந்திரம் கடந்த காலத்தில் அரசாங்கத்தினால் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | பக்றீரியா ஊடகம் உற்பத்தி செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட பெறுமதி ரூபா 9,690,248 ஆன Media Preparation & pouring System இயந்திரம் 2018 செப்தெம்பர் 26 ஆந் திகதி நுண்ணுயிரியல் விஞ்ஞான ஆய்வுகூடத்திற்கு கிடைத்திருந்ததுடன் அது Preventive Consumable Maintenance kit என்ற பெயருடையதாக இருந்ததன் காரணமாக 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாட்டின் காரணமாக தேவையான துணைப்பாகங்களை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தமை, தற்போது கூறுவிலை மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக பிரதி பணிப்பாளர் நாயகம் (உயிரியல் மருத்துவ பொறியியல்) பிரிவில் இருந்து அங்கீகாரம் கோரி அனுப்பப்பட்டுள்ளதுடன் அங்கீகாரம் மற்றும் நிதியேற்பாடு கிடைத்தவுடன் பெறுகைக் குழு தீர்மானத்தைப் பெற்று பழுது பார்த்தல் கட்டளை பெற்றுகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (கா) | கண்டி தேசிய வைத்தியசாலையில் நோயியல் ஆய்வுகூடத்தில் Biopsy மாதிரி பரீட்சிக்கும் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்ட பெறுமதி ரூபா 6,700,000 ஆன Automation Slide Strainer இயந்திரம் 2018 ஏப்ரல் 27 ஆந் திகதி நோயியல் ஆய்வுகூடத்திற்கு கிடைத்திருந்தது. அந்த இயந்திரத்தின் Touch Display 2020 யூலை 16 ஆந் திகதி செயலிழந்திருந்ததுடன் அதனை பழுது பார்ப்பதற்கு உரிய கோரிக்கைக் கடிதம் 2020 யூலை 16 ஆந் திகதி பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் மாதம் 01 ஆந் திகதி வரையிலும் பழுதுபார்த்தல் | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் கண்டி தேசிய வைத்தியசாலையின் நோயியல் ஆய்வுகூடத்தில் Biopsy மாதிரி பரீட்சிக்கும் செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்படுகின்ற இந்த இயந்திரத்தை பழுது பார்ப்பதற்கும் மேற்கூறப்பட்ட பிரகாரம் உதிரிப்பாகங்கள் இறக்குமதி வரையறையின் காரணமாக கூறுவிலை பெற்றுக்கொள்ளாமையின் அடிப்படையில் தாமதமடைந்திருந்ததுடன் தற்போது பழுதுபார்த்தலுக்கான மதிப்பீட்டைப் பெற்று பெறுகைக் குழு தீர்மானத்தைப் பெற்ற | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பின்னர் பழுதுபார்த்தல் கட்டளை கையளித்து பழுதுபார்த்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | |
| (கி) | கண்டி தேசிய வைத்தியசாலையில் இரசாயண விஞ்ஞான ஆய்வுகூடத்தில் இரத்தப் பரிசோதனை (Routine Test) மேற்கொள்வதற்காக பயன்படுத்தப்படுகின்ற கிரயம் ரூபா 1,200,000 பெறுமதியான Point Of Care Analyzer இயந்திரம் 2020 ஏப்ரல் 20 ஆந் திகதி கிடைத்திருந்ததுடன் இறுதி தடவையாக 2021 ஆம் ஆண்டின் போதே பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் வரையிலும் இந்த பகுப்பாய்வு இயந்திரம் செயற்படு நிலையில் காணப்படுகின்ற போதும் பரிசோதனைகளில் சரியான தன்மை குறைந்ததன் அடிப்படையில் அதற்காக மீள் செயற்படு கட்டளை (Regent) இல்லாதிருந்தமையும் 2023 திசெம்பர் 01 ஆந் திகதி வரையில் அதை சிறந்த நிலைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் இந்த இயந்திரம் Covid – 19 தொற்றுநோய் நிலைமை ஒரே தடவையில் கணிசமான பரிசோதனை எண்ணிக்கையினை மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்பட்டதுடன் அந்த காலப்பகுதியில் மிகவும் கணிசமான சேவையொன்று இந்த இயந்திரம் மூலம் நிறைவேற்றப்பட்டது. பரிசோதனை குறைவான எண்ணிக்கையில் மேற்கொள்ளம் போது பரிசோதனைகளின் சரியான தன்மை தொடர்பான பிரச்சனைகள் எழுகின்றமை மற்றும் Covid – 19 தொற்றுநோய்க் காலத்தின் போது பெறப்பட்ட மேலும் ஒரு இயந்திரம் மேலும் சில இயந்திரங்கள் காணப்பட்டமை மற்றும் மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனை அளவுகளின் எண்ணிக்கைகள் குறைவடைகின்றமை போன்ற விடயங்களின் அடிப்படையில் இந்த இயந்திரங்ளை பயன்படுத்தல் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. | இது தொடர்பாக விசாரணை நடாத்தி பொறுப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் இயந்திரத்தை விரைவாக ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கீ) | கம்பளை போதனா வைத்தியசாலையில் நோயியல் பிரிவிற்கு | பதிலளிக்கப்படவில்லை. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | Cytological Samples Performing பணிகளுக்காக பயன்படுத்தப்பட்ட ரூபா 1,300,000 பெறுமதியான Sakura Cyto centrifuge (Model cyto tec 2500) இயந்திரம் 2017 மார்ச் 31 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டு முதல் தொழில்நுட்ப கோளாறினால் செயலிழந்த நிலையில் காணப்பட்டதுடன் 2024 சனவரி 22 ஆந் திகதி வரையிலும் பழுது பார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | |
| (கு) | மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பிரசவ மற்றும் நரம்பியல் நிபுனத்துவ விசேட வைத்தியரின் கோரிக்கையின் அடிப்படையில் 2019 திசெம்பர் மாதத்தின் போது ரூபா 63,855,000 செலவினத்தில் இரட்டை 200W டயோட லேசர் இயந்திரம் (200W Dual Diode Laser Machine) கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. பொறுப்புக்களின் மேவுகை மற்றும் மேலதிக பாகங்களை பெற்றுக்கொள்ளும் கேள்வி நிபந்தனைகள் காணப்படும் போது இயந்திரத்தின் உத்தரவாத காலத்தில் அதனைப் பயன்படுத்துவதற்கு முன்னர் காலாவதியாகி இருந்ததுடன் மேலதிக பாகங்களை பெற்றுக்கொள்ளம் உறுதிப்பாடும் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக | இணங்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்காதிருக்குமாயின் அதற்கான காரணம் காண்பிக்க வேண்டியிருந்ததுடன் இது தொடர்பாக பூரணமாக சுயாதீன விசாரணை மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த தரப்பினர் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

இயந்திரம் ஸ்தாபிக்கப்படாமல் வைத்தியசாலை பதவியணியினருக்காக உரிய விரிவான பயிற்சியும் வழங்கப்படாதிருக்கும் போது கேள்வி நிபந்தனைகளுக்கு முரணாக முழுமையான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பல்வேறு மருத்துவ நிலைமைகளுக்கு சிகிச்சை அளிக்கும் இயலுமை உள்ளதாகக் கருதப்பட வேண்டிய முதலீடு ஒன்றுடன் இந்த இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்ட பின்னர் நான்கு வருடங்கள் அதாவது 2024 மார்ச் வரையிலும் வைத்தியரினால் குறித்துரைக்கப்பட்ட சிகிச்சை முறைமைக்காக பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதன் காரணமாக போதனா வைத்தியசாலையில் அதன் மருத்துவ நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு தவறியிருந்தது.

### 3.7 நட்டம் மற்றும் இழப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வைத்தியசாலை மற்றும் 19 நிறுனங்களினால் தயாரிக்கப்பட்டிருந்த கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 118,369,992 ஆன 143 சந்தர்ப்பங்களுக்குரிய பெறுமதிகள் அமைச்சினால் தயாரிக்கப்பட்ட கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் அமைச்சின் கீழ் அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கோரப்பட்ட தகவல்கள் மாத்திரம் உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட ஒன்றாகும். ஆதன் பிரகாரம் மேலும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய இழப்பு மற்றும் நட்டங்களுக்கு தனித்தனியான | வைத்தியசாலை மற்றும் சுகாதார நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற தரவுகள் மற்றும் அமைச்சினால் அந்த நிறுவனங்களுக்குரியதாக சமர்ப்பிக்கப்படுகின்ற தரவுகள் ஒன்றுக்கொன்று சமனாக இருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பதிவேட்டில் இருந்து சமர்ப்பிக்கப்படும். | |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நட்டம் ஒன்று அல்லது இழப்பொன்று ஏற்பட்டவுடன் அதன் அளவு மற்றும் காரணம் குறித்த உரைத்தரீதியில் இனங்காண்பதற்கும் அதற்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினரை குறித்துரைப்பதற்காக பரிசோதனைகள் ஆரம்பிக்க வேண்டியிருந்த போதிலும் ரூபா 22.91 மில்லியன் மருந்து பற்றாக்குறை, ரூபா 218.04 மில்லியன் ஆன மருந்துகள் காலாவதியாகி இருந்தமை, ரூபா 199.26 மில்லியன் மருந்து பாதிப்படைந்தமை தொடர்பாக 03 வருடங்கள் முதல் 14 வருடங்களுக்கிடையிலான காலம் கடந்திருந்த போதும் கணக்காய்வுத் திகதியான 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் இது தொடர்பாக போதியளவான பதவியணியினர் இல்லாமை மற்றும் உரிய பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து விளக்கங்கள் பெற்றுக்கொள்ளும் போது காணப்படுகின்ற பிரச்சனையான நிலைமையான நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் இது தொடர்பாக நடவடிக்கை டிடுத்தல் தாமதமடைந்தமை, எனினும் இந்த நிலைமையினை இனங்கண்டு எதிர்காலத்தில் உரிய தரப்பினரிடமிருந்து விளக்கங்களைப் பெற்று தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு செயல் முன்னேற்றம் விரைவாக அறிவிக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட மருந்து காலாவதியாகியமை, தரம் கெட்டமை மற்றும் மருந்துப் பற்றாக்குறையை இணங்கண்டு நிதிப்பிரமாணம் 110(2) இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் நட்டம் மற்றும் கைவிடல் தொடர்பான கூற்றில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்கவதுடன் இது தொடர்பான தேவையான நடவடிக்கைகள் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மருத்துவ வழங்கல் பிரிவிற்குரியதாக காணப்பட்ட கொட்டிகாவத்த இலக்கம் 53 களஞ்சியம் 2016 மே 18 ஆந் திகதி வெள்ளநீருக்கு உட்பட்ட பின்னர் ஏற்பட்டிருந்த இழப்பு ரூபா 405.57 மில்லியன் ஆக கணிப்பிடப்பட்டதுடன் அதில் ரூபா 206.31 மில்லியன் மாத்திரம் உரிய காப்புறுதி நிறுவனத்திலிருந்து 2017 சனவரி 30 மற்றும் 2017 செப்தெம்பர் 21 என்ற இரு தினங்களின் போதும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேலும் அறவிட வேண்டிய தொகை ரூபா 199.26 மில்லியன் ஆக இருந்ததுடன் 07 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் இது தொடர்பாக நிதிப்பிரமாணம் 101 முதல் 113 வரையான பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திலிருந்து ஏதோவொரு அளவு அல்லது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் அல்லது அவ்வாறு இல்லையாயின் மீண்டும் பொதுத்திறைசேரியின் அரநிதி பணிப்பாளர் நாயகத்திடமிருந்து நிதிப்பிரமாணம் 103 – 113 இன் பிரகாரம் இழப்பு, நட்டம் தொடர்பாக நடவடிக்கை எடுத்து பதிவழிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மீண்டும் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | இது தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.8 நிதி மோசடி வடிவிலான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 பெப்ரவரி 04 ஆந் திகதி முதல் 2023 பெப்ரவரி 03 வரை இரண்டு வருடங்களில் சம்பளத்துடன் வெளிநாட்டு விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்த வைத்தியர் ஒருவருக்கு 2021 பெப்ரவரி 04 ஆந் திகதி வெளிநாடு சென்று மீண்டும் 2021 யூலை 07 ஆந் திகதி இலங்கைக்கு வருகை | மருத்துவர் தொடர்பாக மேற்கொள்ளபட்ட ஆரம்ப விசாரணையின் பிரகாரம் அந்த மருத்துவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல் பொருத்தமானதாக இருந்ததாக பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. | பூரணமாக முறையான விசாரணை பரிசோதனை மேற்கொண்டு உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தந்திருந்ததுடன் அவர் வெளிநாட்டு பிரயாணம் தொடர்பாக குடிவரவு குடியகழ்வு திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது. எனினும் அவர் இலங்கைக்கு வருகை தந்த பின்னர் அமைச்சிற்கு அது தொடர்பாக அறிவிக்காதிருந்ததுடன் உரிய பயிற்சிப் படிகள் மற்றும் மாதாந்த சம்பளம் வழங்கப்பட்டிருந்தது. இந்த முறையில் 2021 யூலை 08 ஆந் திகதி முதல் 2021 செப்தெம்பர் 02 ஆந் திகதி வரை குறித்துரைத்த பிரகாரம் சேவைக்கு அறிக்கையிடாமல் சம்பளம் மற்றும் வெளிநாட்டு பயிற்சிப் படிகள் வழங்கப்பட்டிருந்தது. 2021 செப்தெம்பர் 03 ஆந் திகதி மருத்துவர் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் கடமைகளை பொறுப்பேற்றிருந்தார். இந்த காலப்பகுதிக்குரிய பயிற்சிப் படிகள் பின்னர் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் முறையான அதிகாரப் பலம் இன்றி செலுத்தப்பட்ட சம்பளம் மற்றும் படிகளை மீண்டும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட 2023.12.28 ஆந் திகதிய இலக்கம் CF/DPO/2023/50 என்ற குற்றப்பத்திரத்தின் வரைவு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுகாதார சேவைக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | |
| (ஆ) | மருத்துவ உத்தியோகத்தர் தாம் வெளிநாட்டு பயிற்சிக் காலத்தில் 2020 பெப்ரவரி 11 ஆந் திகதி இலங்கைக்கு மீண்டும் வருகை தந்து அவரின் வெளிநாட்டு பிரயாணம் தொடர்பாக குடிவரவு குடியகழ்வு திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது. எனினும் அவரால் அந்த மருத்துவர் மீண்டும் இலங்கைக்கு வருகை தந்த | பதிலளிக்கப்படவில்லை . | இது தொடர்பாக முழுமையான முறையான பரிசோதனை மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதி 2020 மார்ச் 30 ஆக இருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மருத்துவர் 2020 பெப்ரவரி 11 முதல் 2020 மே 15 ஆம் திகதி வரை சேவைக்கு அறிக்கையிடாதிருந்தமைக்கான காரணம் கணக்காய்வில் தெளிவு படுத்தப்படவில்லை. அவ்வாறே இந்தக் காலப்பகுதியில் உரியதாக செலுத்தப்பட்ட சம்பளம் படிகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் சம்பளம் மற்றும் படிகள் செலுத்துதல் அடிப்படையில் மற்றும் பெறப்பட்ட அங்கீகாரம் இவ்வாறானது என்பது தொடர்பாகவும் கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படவில்லை. அவ்வாறே 2020 மார்ச் 30 ஆந் திகதி முதல் 2021 நவம்பர் 27 ஆந் திகதி வரை வைத்தியர் கடமையாற்றியதாக காண்பிக்கப்பட்ட போதிலும் 2020 மார்ச் 30 ஆந் திகதி முதல் 2020 மே 15 ஆந் திகதி வரை கடமையாற்றியது எந்த நிறுவனத்தில் எனவும் நிறைவேற்றப்பட்ட கடமைகள் என்ன என்பதுவும் உறுதிப்படுத்துகின்ற எழுத்து மூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (இ) | களுத்துறை தேசிய சுகாதார கல்வி கல்லூரியில் மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்ப நிபுணத்துவ பயிற்சி பாடநெறியின் 2017 – 2019 இற்காக மாணவர்களை சேர்ப்பதற்குரிய 2017 ஏப்ரல் 21 ஆந் திகதிய இலக்கம் TA/REC/PSM/17/2016 என்ற பிரதி பணிப்பாளர் நாயகம் | இது தொடர்பாக ஆரம்ப விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது டன் அந்த ஆரம்ப விசாரணைக்கு அங்கீகாரம் கிடைத்த பின்னர் ஒழுக்காற்று நடவடிக்கைக்காக அனுப்பப்படும். | இது தொடர்பாக முழுமையான முறையான விசாரணை மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த நபர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | (நிருவாகம் III) இன் கடிதத்துடன் அனுப்பப்பட்ட பெயர்ப்பட்டியலில் தமது பெயர் உள்ளடக்கப்படாதிருந்தவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைத்தல், சமர்ப்பிக்கப்பட்ட போலியான உயர் தர பரீட்சை சான்றிதழ் சரியாக பரீட்சிக்கப்படாமை, அவர்களின் பிணை முறி பொறுப்பாளராக களுத்துறை தேசிய சுகாதார கல்வி கல்லூரியின் அதிபர் கையொப்பம் இட்டமை, அந்த பிணையின் சாட்சியாளராக அந்த நிறுவனத்தின் உத்தியோகத்தர் கையொப்பம் இடல் போன்ற விடங்களின் பிரகாரம் இந்த நபர் தெரிந்திருந்தும் மோசடியாக பயிற்சிக்காக சேர்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டது. | | |
| (ஈ) | கணக்காய்வினால் கராப்பிட்டி போதனா வைத்தியசாலைக்குரியதாக பெறப்பட்ட அவசர அழைப்பு ஆய்வுகூட கணனி பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் வைத்தியசாலையில் மருத்துவ உத்தியோகத்தர்களின் பரிந்துரையின்றி மற்றும் ஆய்வுகூடப் பரிசோதனை சிட்டை விநியோகிக்கப்படாத இரத்த மாதிரிகள் கணிசமான அளவு ஆய்வு கூடப்பரிசோதனைக்கு அழைக்கப்பட்ட காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தரவுகள் மற்றும் தகவல்கள், உரிய ஆய்வுகூட பரிசோதனையில் கணனிகளில் அளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அவ்வாறு அழிக்கப்பட்ட (Delete) வைத்தியசாலைக்கு புறம்பான பரிசோதனைகள் 2,884 தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது | கராப்பிட்டி வைத்தியசாலையினால் ஆரம்ப பரிசோதனை நடாத்தப்பட்டுள்ளதுடன் இந்த அறிக்கையின் பரிசோதனையின் பிரகாரம் சுகாதார அமைச்சின் மேலதிக விசாரணைகள் நடத்துமாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சுகாதார அமைச்சினால் முறையான விசாரணைகள் இப்போது மேற்கொள்ளப்படுகின்றது. அந்த விசாரணையின் பரிந்துரையின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | -மேற்படி- |

அவதானிக்கப்பட்டதுடன் அதற்காக வைத்தியசாலையால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 647,214 பெறுமதியான மீள்செயற்பாடுகள் (Reagent) பயன்படுத்தப்பட்டமையால் இந்த பரிசோதனைகள் மேற்கொண்ட மற்றும் உரிய தினங்களில் சேவையில் ஈடுபட்டிருந்த ஒவ்வொரு ஆய்வுகூட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களினால் அரசாங்கத்தின் வளங்கள் மற்றும் ஆதனங்கள் பிழையாக பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையின் மூலம் மின்பிறப்பாக்கி இயந்திரங்கள் இரண்டிற்காக 2021 மார்ச் 13 முதல் 2022 யூன் 15 ஆந் திகதி வரை 15 மாத காலத்தில் ரூபா 1,562,900 ஆன எரிபொருள் லீற்றர் 11,350 கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் இயந்திரத்திற்காக எரிபொருளை பயன்படுத்துதல் தொடர்பாக முறையான பதிவேடு ஒன்று பேணிச்செல்லப்பட்டிருக்க வில்லை. இரண்டு இயந்திரங்களுக்காக எரிபொருள் ஈடுபடுத்துதல் தொடர்பாக தனித்தனியாக இனங்காணக்கூடிய வகையில் பதிவேடு பேணிச்செல்லப்பட்டிருந்த 2022 யூன் 15 முதல் 2023 மார்ச் 28 வரை 09 மாத காலத்தில் எரிபொருள் பயன்பாடு, ஓடப்பட்ட மணித்தியாலங்களின் எண்ணிக்கை மற்றும் மின் பிறப்பாக்கி இயந்திரங்களின் உள்ளக மற்றும் வெளியக எரிபொருள் களஞ்சியத் தாங்களின் இயலளவு போன்ற தரவுகளின் பிரகாரம் 150 kVA

அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் வைத்தியசாலையினால் உரிய பதிவேட்டின் பிரகாரம் 2023 யூலை மாதம் முதல் 2023 திசெம்பர் வரையான காலம் வரை இயந்திரங்களுக்கு பயன்படுத்தப்பட்ட எரிபொருள் அளவு மற்றும் இயந்திரம் செயற்பட்டிருந்த மணித்தியால எண்ணிக்கையின் பிரகாரம் கணிப்பிடும் போது CUMMINS மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்காக மணியாலம் ஒன்றின் சராசரி எரிபொருள் எரிவு 42 லீற்றர் மற்றும் VOLVO மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்காக 13 லீற்றர் செலவாகின்றமை அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக வைத்தியசாலை மட்டத்தில் நடாத்தப்பட்ட

-மேற்படி-

| | | |
|---|---|---|
| | Volvo (TWD 610 G) மற்றும் 638 kVA cummins (AS 703 C) என்ற இரண்டு இயந்திரங்களினதும் மணித்தியாலத்துக்கு சமமான எரிபொருள் எரிவு முறையே 14 லீற்றர் மற்றும் 31 லீற்றர் ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டமையால் முறையாக பதிவேடு பேணிச் செல்லப்படாத 15 மாத காலப்பகுதியில் பயன்படுத்த வேண்டிய எரிபொருள் அளவு 6,730 லீற்றர் ஆக இருந்த போதிலும் எரிபொருள் 9,454 லீற்றர் அதாவது மின்பிறப்பாக்கி இயந்திரம் செயற்பட்ட மணித்தியாலங்களின் பிரகாரம் தேவையாக இருக்கக்கூடிய அளவினை விட ரூபா 374,268 (காலப்பகுதிக்குரிய எரிபொருள் விலையின் சராசரி விவை ரூபா 137.70 ஆக எடுக்கும் போது) எரிபொருள் லீற்றர் 2,718 முறையற்ற வகையில் பயன்படுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது இரண்டு சந்தர்ப்பங்களின் போதும் மற்றும் மாகாண கணக்காய்வு குழுக் கூட்டத்தின் போதும் கலந்துரையாடப்பட்டது டன் அதன் போது இது மிகவும் சிக்கலான பிரச்சனையாக இருந்தமையால் அதனை வைத்தியசாலை மட்டத்தில் தீர்க்க முடியாதிருந்ததாகவும் அதற்காக சுகாதார அமைச்சு மட்டத்தில் முறையான பரிசோதனையொன்று நடத்தவேண்டியிருந்தை மயும் கணக்காய்வினால் வெளிப்படுத்தப்பட்டிருந் தது. அதன் பிரகாரம் இது தொடர்பாக சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட நிதிப்பிரமாணம் 104(4) பரிசோதனை அறிக்கை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஊ) | 2009 ஆம் ஆண்டு முதல் 2023 வரை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கதிர்வீச்சு விசேட வைத்திய நிபுணரினால் மேற்கொள்ளப்பட்டிருந்த 29 வெளிநாட்டு பிரயாணங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | |

| | | |
|---|---|---|
| i. இந்த உத்தியோகத்தருக்காக கதிர்வீச்சு பயிற்சி ஒன்றுக்காக 2018 மார்ச் 01 முதல் 2018 ஆகஸ்ட் 31 வரை 06 மாத கால சம்பளத்துடனான வெளிநாட்டு விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் போது இந்த பயிற்சி 03 மாதகாலம் ஐக்கிய அமெரிக்க நாட்டில் பல்கலைக்கழம் ஒன்றினால் மற்றும் 03 காலம் இந்தியாவில் Medanta neuro, vascular Center இலும் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் அங்கீகரிக்கப்பட்ட காலத்தில் வெளிநாட்டு பயிற்சிக்கு பங்குபற்றாதிருந்ததுடன் அதற்காக ரூபா 289,400 விமானப் பயணச்சீட்டுக் கட்டணம் மற்றும் 03 மாத காலத்தில் வாழ்க்கைச் செலவுப் படியாக ஐக்கிய அமெரிக்க டொலர் 5,781 (ரூபா பெறுமதி 1,849,920) மற்றும் வெப்ப உடை படியாக பிரித்தானிய ஸ்ட்ரேலிங் பவுண் 75 (ரூபா பெறுமதி 30,525) தொகை அந்த உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்டிருந்தது. எனினும் குடிவரவு குடியகழ்வு திணைக்கத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் இந்த உத்தியோகத்தர் 2018 யூன் 30 ஆந் திகதி வெளிநாடு சென்று 2018 யூலை 31 ஆந் திகதி மீண்டும் நாட்டுக்கு வருகை தந்திருந்தார். அதன் பிரகாரம் 32 நாட்கள் அளவில் வெளிநாட்டில் தங்கியிருந்தமையும் அங்கீகரிக்கப்பட்ட சம்பளத்துடன் வெளிநாட்டு விடுமுறை 2018 யூலை 09 ஆந் திகதி பூர்த்தி செய்ததன் காரணமாக 2018 யூலை 10 ஆந் திகதி முதல் மீண்டும் இலங்கை வருகை தந்து 2018 | பதிலளிக்கப்பட வில்லை. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | யூலை 31 ஆந் திகதி வரை 22 நாள் காலத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு விடுமுறை நீடித்துக் கொள்ளப்படாமல் இருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | | |
| ii. | அவ்வாறே மேற்குறிப்பிடப்பட்ட 06 மாத கால பயிற்சி இந்தியாவில் Medanta neuro, vascular Center நிறுவனத்தில் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்ட 03 மாத பயிற்சிக்காக விமான பயணச்சீட்டு கட்டணமாக ரூபா 119,200 மற்றும் வாழ்க்கைச் செலவு படியாக இந்தியா ரூபா 211,143 (இலங்கை ரூபாயில் பெறுமதி 812,900) செலுத்தப்பட்டிருந்தது. எனினும் குடிவரவு குடியகல்வு திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் இந்த உத்தியோகத்தர் 06 நாட்கள் மாத்திரம் வெளிநாட்டில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| iii. | குடிவரவு குடியகல்வு திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் இந்த உத்தியோகத்தர் 2009 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை 29 சந்தர்பங்களின் போது வெளிநாடு சென்றிருந்ததுடன் அதில் விசேட சந்தர்ப்பமாக 20 சந்தர்ப்பங்களுக்கு உரியதாக உத்தியோகத்தரால் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 23:1 இன் பிரகாரம் முறையான பிரகாரம் வெளிநாட்டு | இணங்குவதுடன் 03 மாதத்திற்கு முன்னர் வெளிநாட்டு பிரயாண விண்ணப்பப்பத்திரம் மற்றும் விடுமுறை கோரும் பத்திரம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சகல மருத்துவர்களுக்கும் விசேட மருத்துவர்களுக்கும் ஆலோசனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

விடுமுறை விண்ணப்ப கடிதம் சமர்ப்பித்து வெளிநாட்டு விடுமுறை அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் தாபனவிதிக் கோவைக்கு முரணாக அரசாங்க சேவையில் இருக்கும் போது வெளிநாட்டு விடுமுறை அங்கீகரித்துக் கொள்ளாமல் வெளிநாடு சென்றமை தொடர்பாக இந்த உத்தியோகத்தருக்கு எதிராக தேவையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தலின் தேவையினையும் அவ்வாறு வெளிநாட்டில் இருந்த காலப்பகுதிக்காக செலுத்தப்பட்ட சம்பளம் படிகளை கணிப்பிட்டு மீள அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மகரகம அபேக்ஷா வைத்தியசாலையில் சேவையாற்றுகின்ற மருத்துவர் ஒருவர் சேவையை விட்டுச் சென்றதாகக் கருதி நடவடிக்கை எடுத்தமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. மருத்துவ உத்தியோகத்தரால் சேவைக்கு வருகைதரல் மற்றும் வெளிச்செல்கை மற்றும் நிறைவேற்றல் பணி தொடர்பாக சுகாதாரம் 99 படிவத்தில் தினப்பதிவேட்டில் குறிப்பிட்டு அதிகாரம் அளிக்கப்பட்ட உயர் உத்தியோகத்தரின் அங்கீகாரத்துடன் மாதாந்தம் வழங்க வேண்டியிருந்த போதிலும் இந்த உத்தியோகத்தரால் உரிய தின குறிப்பேடுகள் குறித்துரைத்த பிரகாரம் கையளிக்கப்படாதிருந்தமை

தினக்குறிப்பேடு கையளிக்காமை தொடர்பாக பல தடைவை அந்த மருத்துவ உத்தியோகத்தருக்கு வாய் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அவர் தினக் குறிப்பேட்டை தனிப்பட்ட ரீதியில் முன்னாலிருந்த பணிப்பாளருக்கு சமர்ப்பித்திருந்ததாக வாய் மூலம் அறிவித்திருந்த

இது தொடர்பாக முழுமையாக முறையாக பரிசோதனை மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. | போதிலும் தொடர்ச்சியாக கடமைகள் தினக்குறிப்பேடுகளில் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படாதிருந்த மையால் விடுமுறை விடய எழுதுவினைஞர் வேலை பதிற்கடமை பணிப்பாளருக்கு (பிரதிப் பணிப்பாளர்) அது தொடர்பாக அறிவித்து குறிப்பொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த குறிப்பில் குறிப்பிடப்பட்ட ஆலோசனையின் அடிப்படையில் 2022.06.13 ஆந் திகதி உடனடியாக சேவைக்கு அறிக்கையிடுமாறு அறிவித்து டெலிமெயில் உத்தரவு விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அதிலிருந்து சம்பளம் நிறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | |
| ii. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 1.2 மற்றும் 1.3 பிரிவுகளின் பிரகாரம் உத்தியோகத்தரின் சகல உள்நாட்டு விடுமுறைகளும் 125 பொது படிவத்தில் விடுமுறை கோரும் பத்திரம் மூலம் விண்ணப்பித்து முன் அங்கீகாரம் பெற வேண்டிய போதிலும் இந்த உத்தியோகத்தர் 2020 சனவரி முதல் 2022 திசெம்பர் 14 வரை எந்தவொரு உள்நாட்டு விடுமுறை, விடுமுறை விண்ணப்பப்பத்திரம் சமர்ப்பித்து | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| iii. | இந்த மருத்துவர் 2023 சனவரி முதல் மார்ச் வரை குறித்துரைத்த பிரகாரம் சேவைக்கு அறிக்கை இடப்பட்டமை உறுதிப்படுத்தும் கடிதம் ஒன்று மகரகம அபேக்ஷா வைத்தியசாலையில் சுகாதார கல்வி பிரிவின் பிரதான தாதி உத்தியோகத்தரால் வழங்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| iv. | உத்தியோகத்தர் வெளிநாடு சென்றமை தொடர்பாக குடிவரவு குடியகழ்வு திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட உறுப்படுத்தலின் பிரகாரம் அவர் 2019 பெப்ரவரி 25 முதல் 2019 மார்ச் 01 ஆந் திகதி வரை வெளிநாடு சென்றிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது. எனினும் உத்தியோகத்தரின் ஆளணிக் கோவையின் அந்த வெளிநாட்டு விடுமுறை அங்கீகரிக்கப்பட்டமைக்கான சான்றுகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஏ) | மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்கு படுத்தல் இராஜாங்க அமைச்சு (தற்போது கவைக்கப்பட்டுள்ளது) பேணிச்செல்லப்பட்ட HQ Colombo கட்டிடத்தின் முதலாவது மாடியின் Rare wring பகுதி மற்றும் ஐந்தாவது மாடியில் வாடகைக்கு வழங்கும் அடிப்படையில் பெறப்பட்டிருந்த போதும் பாதுகாப்பு வைப்பு மற்றும் | HQ கட்டிடத்தின் 01 ஆம் மாடியின் Rare wring பகுதி மற்றும் 05 ஆவது மாடிக்காக மீண்டும் கொடுப்பனவு செலுத்தும் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு வைப்புப் பணம் மற்றும் மின்சாரத்திற்கான வைப்புப் பணம் உடன்படிக்கையின் பிரகாரம் | -மேற்படி- |

| | |
|---|---|
| மின்சார வைப்பாக தனியார் கம்பனி ஒன்றுக்கு செலுத்தப்பட்ட ரூபா 7,570,493 தொகை உடன்படிக்கை பூர்த்தி செய்வதற்கு முன் மாதாந்த வாடகைக்காக ஈடுசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2024 ஏப்ரல் 01 ஆந் திகதியில் உடன்படிக்கைக் காலம் முடிவடைந்து 01 வருடம் 05 மாத காலங்கள் கடந்திருந்த போதும் அந்த வைப்புப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2016 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 250/2016(i) இன் பிரகாரம் இந்த ரூபா 7,570,493 வைப்புப் பணம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமையால் எழுத்து மூலம் HQ கட்டிடத்தின் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எவ்வளவு தூரம் மேற்கொள்ளப்பட்ட எவ்வளவு தூரம் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட அந்த நிறுவனத்தால் கொடுப்பனவுகள் புறக்கனிக்கப்பட்டுள்ள துடன் இது தொடர்பாக சுகாதார அமைச்சின் பிரதான சட்ட உத்தியோகத்தருக்கு அறிவித்து கடிதம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சட்டப்பிரிவின் மூலம் வைப்புப் பணத்தை அறவிடுவதற்கு தேவையான சட்டரீதியான ஆலோசனை வழங்குமாறு கோரிக்கையொன்று 2023.08.29 ஆந் திகதி சட்டமாதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அவ்வாறே இந்த சட்டப்பிரச்சனைகள் தொடர்பாக சட்டமாதிபர் திணைக்களத்தின் சட்ட ரீதியான கலந்துரையாடல் நடாத்தப்பட்டுள்ளது. |

### 3.9 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) கண்டி தேசிய வைத்தியசாலையில் இருதய நோய் பிரிவில் பயன்படுத்தப்படுகின்ற இருதய சிகிச்சை 02 இயந்திரங்கள் மூலம் நாளாந்தம் 30 நோயாளர்களுக்கு அண்ணளவான அனவு இருதய நோய் பரீட்சித்தல் மற்றும் சிகிச்சையளித்தல் மேற்கொள்ளப்படுவதுடன் 17 வருடங்கள் பழைய Siemens Axiom Artis DFC Cath Lab (Machine – SN3542602626) இயந்திரம் 2023 மே 01 ஆந் திகதி முதல் செயலிழந்த நிலைக்கு உட்பட்டிருந்தது. அதனை பழுது பார்த்தல் ஆக்கபூர்வமானதாக இல்லாமையின் காரணமாக அதற்குப் பதிலாக புதிய இயந்திரம் ஒன்றை ஸ்தாபிக்காமையின் அடிப்படையில் நாளாந்தம் இருதய நோய் பரிசோதனை 50 சதவீத அளவினால் குறைவடைந்திருந்தது. 2019 ஆம் ஆண்டு முதல் 2023 மே 29 ஆம் திகதி வரை சிகிச்சைகளுக்காக 8024 நோயாளர்கள் பதிவு செய்திருந்தமை காத்திருத்தல் பட்டியலில் இருப்பதுடன் இயந்திரம் செயலிழந்ததன் காரணமாக காத்திருத்தல் பட்டியல் மேலும் நீடிக்கின்றமை அவதாகிப்பட்டது. | புதிய இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்தவற்காக நிதியேற்பாடு வழங்குதலின் பிரச்சனையின் காரணமாக தற்போது செயலிழந்துள்ள 17 வருடங்களை விட பழைய Siemens Axiom Artis DFC Cath Lab இயந்திரம் பழுது பார்ப்பதற்காக உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அந்த பிரிவினால் 2024.04.08 ஆந் திகதிய டிமோ தனியார் நிறுவனத்திற்கு கட்டளை வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் உரிய துணைப்பாகங்கள் இறக்குமதி செய்வதற்காக தேவையான அனுமதி வழங்குமாறு 2024.04.22 ஆந் திகதிய கடிதத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் உரிய பழுதுபார்த்தலின் பின்னர் நோயாளர் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த முடியும். | புதிய இயந்திரம் ஒன்றை ஸ்தாபிப்பதற்குகோ அல்லது காணப்படுகின்ற இயந்திரத்தை பழுது பார்ப்பதற்கோ விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) சிறிமாவோ பண்டார நாயக்க சிறுவர் வைத்தியசாலையில் சேவையாற்றிய கதிர்வீச்சு | அவதானிப்புக்களுடன் இணங்காதிருப்பதுடன் கதிர்வீச்சு தொழில்நுட்ப மேலாளரிடமிருந்து | இது தொடர்பாக முழுமையாக முறையாக பரிசோதனை மேற்கொண்டு பொறுப்பு |

தொழில் நுட்பவியலாளர் ஜனரால் சிறிமத்ஜோன் கொத்தலாவ பல்கலைக்கழத்தின் மூலம் நடாத்தப்படுகின்ற பட்டப்பாடநெறி ஒன்றிற்காக 2014 நவம்பர் 24 முதல் 2017 திசெம்பர் 31 வரை மூன்று வருடத்திற்காக சம்பளத்துடன் கற்கை விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. தாபன விதிக்கோவையின் XV அத்தியாத்தின் 4.12 இன் பிரகாரம் 15 ஆவது அத்தியாயத்தின் பிரகாரம் இந்த உத்தியோகத்தரால் முழுமையான சம்பளத்துடன் கற்கை விடுமுறை வழங்கப்படுகின்ற உத்தியோகத்தர்கள் கையொப்பமிட வேண்டிய பிணை முறியும் 8 ஆவது அத்தியாயத்தின் பிரகாரம் உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் கற்கை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் 10 வருடங்களுக்கு குறையாத காலம் சேவையாற்ற வேண்டியிருந்த போதிலும் சேவைக்காலத்தை பூர்த்தி செய்யாமல் சேவைக்கு அறிக்கையிடாமையின் காரணமாக கற்கை விடுமுறை காலத்தில் உத்தியோகத்தருக்காக செலுத்தப்பட்ட ரூபா 1,641,282 சம்பளம் மற்றும் 15 ஆவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட பிணைப்பணமான ரூபா 600,000 தொகையும் அந்த புலமைப்பரிசிலுக்காக செலவிடப்பட்ட ஏனைய செலவினங்களையும் உள்ளடக்கி அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய தொகை 2023 திசெம்பர் 31 ஆந் திகதி

அறிவிடப்பட்டுள்ள பணம் தொடர்பாக சுகாதார அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அறவிடல் நடவடிக்கைகள் சுகாதார அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2017 ஏப்ரல் 19 ஆம் திகதிய இலக்கம் 03/2017 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் சகல அரசாங்கத்தின் நிறுவனங்களும் கைவிரல் அடையாள இடும் இயந்திரம் பயன்படுத்துவதன் மூலம் உத்தியோகத்தர்கள் அலுவலகத்திற்கு வருகை மற்றும் வெளிச்செல்கை உறுதிப்படுத்துதல் தொடரபாக அறிக்கை வைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் 2017 மே 12 ஆம் திகதிய இலக்கம் DMS/0016 என்ற திறைசேரி செயலாளரால் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு விநியோகிக்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் சுகாதார பதவியணியினரின் வருகை மற்றும் வெளிச்செல்கை உறுதிப்படுத்த கூடிய வகையில் கைவிரல் அடையாள இயந்திரம் 2017 யூலை 01 ஆந் திகதி முதல் அமுல்படுத்தப்படாதிருக்குமாயின் தற்போதைய சம்பளத்தின் பிரகாரம் மேலதிக படி செலுத்தாதிருப்பததை கண்காணித்தல் வேண்டும். எனினும் அமைச்சினால் அமைச்சுக்கு, அதற்குரிய வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்காக ரூபா 31.08 மில்லியன் செலவில் ஸ்தாபிக்கப்பட்ட 213 கைவிரல் அடையாள இயந்திரங்கள் பயன்பாட்டிற்கு | அரச நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்த வேண்டியமைக்கான ஆலோசனை வழங்கப்பட்டிருக்கும் போது உள்ளக சுற்றறிக்கை மற்றும் பொது கடிதம் விநியோகிக்கப்பட்டிருந்த போதும் காணப்பட்ட தொழில் சங்கங்களின் எதிர்ப்பின் காரணமாக இதுவரை அதை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. உத்தியோத்தர்களின் வருகை மற்றும் வெளிச்செல்கை கடமை நேரங்களை உள்ளடக்கி வெளிச்செல்லல் தொடர்பாக அமுல்படுத்தப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான சகல பிரிவு தலைவர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே உள்ளகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்தும் வகையில் உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச்செல்கை மற்றும் கடமை நேரங்களில் வெளிச்செல்லல் போன்ற மேற்பார்வைகள் தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கும் தாபன தலைவருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச்செல்கை தொடர்பாக அறிக்கை வைத்துக்கொள்வதற்கும் அதற்கு இணங்கும் வகையில் உத்தியோகத்தர்களின் மேலதிக கடமைப்படிகளை செலுத்தல் தொடர்பாக தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டு திட்டத்தை பேணிச்செல்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டதுடன் தற்போதயை சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போதும் சம்பளத்திற்காக ரூபா 44,590.70 மில்லியன் தொகையும், மேலதிக மற்றும் விடுமுறை தின சம்பளத்திற்காக ரூபா 38,236.83 மில்லியனும் ஆக மொத்தமாக ரூபா 82,827.53 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தின சம்பளத்திற்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை சம்பளக் கிரயத்தில் 72 சதவீதமாக காணப்பட்டது.

(ஈ) கொடக்கம – மாலபே பிரதான வீதி மற்றும் வல்கம – அத்துருகிரிய வீதியின் எல்லையில் அமைந்துள்ள 02 ஏக்கர் 02 றூட் 29.70 பேர்ச் பரப்பளவை உடைய (ஏக்கர் $2\frac{1}{2}$ அளவில்) காணி 1998 ஏப்ரல் 01 ஆம் திகதிய இலக்கம் 4205 என்ற இறுதி விருப்பப் பத்திரத்தின் மூலம் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு நன்கொடையளிக்கப்பட்டிருந் ததுடன் அதன் பெறுமதி அண்ணளவாக ரூபா 1,074 மில்லியன் ஆகும். இந்தக் காணியின் சட்டரீதியான உரிமையாளர் 2022 பெப்ரவரி 17 ஆம் திகதி மரணமடைந்திருந்ததுடன் அது தொடர்பாக 2022 பெப்ரவரி 21 ஆந் திகதி எழுத்து மூலம் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| | இந்த காணியின் சட்டரீதியான உரித்தை கையேற்றல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| i. | சிவில் வழக்கு ஏற்பாடுகள் கோவையின் 516 ஆம் பிரிவின் பிரகாரம் இறுதி விருப்பப்பத்திரம் மரணமடைந்த இடத்திற்குரிய மாவட்ட நீதிமன்றத்திற்கு மூன்று மாதங்களுக்குள் (03) அதன் இறுதி விருப்பப்பத்திரத்தின் மூலப்பிரதி சமர்ப்பித்து அவர் மரணமடைந்தவரின் இறுதி விருப்பப்பத்திரமாக சிவில் வழக்கு ஏற்பாட்டுக் கோவையின் 524 ஆம் பிரிவின் பிரகாரம் எதிர்ப்புகள் இன்றி ஒப்புக்கொள்ள வேண்டியிருந்த போதிலும் காணியின் சட்டரீதியான உரிமையாளர் 2022 பெப்பரவரி 17 ஆம் திகதி மரணமடைந்து சென்றதன் பின்னர் 2024 மார்ச் 31 ஆந் திகதியில் 25 மாத காலம் கடந்திருந்த போதிலும் இலக்கம் 4205 என்ற இறுதி விருப்பப்பத்திரம் மரணமடைந்தவரின் இறுதி விருப்பப்பத்திரமாக எதிர்ப்பு இன்றி ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | இது தொடர்பாக முழுமையாக முறையாக பரிசோதனை மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. | இவ்வாறு இறுதி விருப்பப்பத்திரம் எதிர்ப்பு இன்றி ஒப்புக்கொள்ளலில் தாமதம் ஏற்பட்டமைக்காக இலக்கம் 4205 என்ற இறுதி விருப்பப்பத்திரத்தில் மூலப்பிரதி மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கோ | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | அல்லது சுகாதார அமைச்சிற்கோ கையளிக்கப்படாதிருந்தமையை இனங்காண்பதற்கு காணியின் சட்டரீதியான உரிமையாளர் மரணமடைந்து 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் தாமதமடைந்தமைக்கும் உத்தியோகத்தர் நடவடிக்கை எடுத்தமை தாமதத்திற்கான காரணமாக இருந்தது. | | |
| iii. | இந்தக் காணியின் சட்டரீதியான உரிமையாளர் மரணமடைவதற்கு முன்னர் சுகாதார அமைச்சினால் பராமரிக்கப்பட்ட இலக்கம் LO/192/2025 என்ற கோவை மற்றும் காணியின் சட்டரீதியான உரிமையளர் மரணமடைந்த பின்னர் திறக்கப்பட்ட LO/113/22 என்ற கோவை தொலைந்து போயிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | 2023 இன் முதலாம் அரையாண்டில் அநுராதபுர பிரதேச சுகாதார சேவை அதிகாரப் பிரதேசத்தில் நலனாளிகளுக்கு பகிர்தளிப்பதற்காக இலங்கை திரிபோஷா கம்பனியில் இருந்து கிடைக்கப்பெற்ற பெறுமதி ரூபா 26,065,432 ஆன திரிபோஷா இருப்புக்கள் கிடைத்திருந்தது. திரிபோஷா பகிர்தளிக்கும் செயற்பாடுகளில் காணப்பட்ட நலிவின் அடிப்படையில் கூட்டுப்பெறுமதி ரூபா 1,094,657 ஆன 30 திரிபோஷா பைக்கற்றுக்கள் | திரிபோஷா பகிர்தளிப்பதற்குரிய போதியளவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை காணப்படாதிருந்தமையும் உரிய விடயப் பொறுப்பு உத்தியோகத்தரால் உரிய பணிகள் உரிய பிரகாரம் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் தற்போது வரை சரியான புரிந்துணர்வுடன் முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தருக்கு இந்தப்பணிகள் முறையாகப் பகிர்தளிக்கப்பட்டுள்ளது. போலியான பதிவேடு தொடர்பாக | நாடு முழுவதும் திரிபோஷா பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளை முறைப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அடங்கிய 77 உறைகள் தொலைந்து போயிருந்தமை அல்லது மோசடியாக்கப்பட்டமை ரூபா 23,497,597 ஆன 30 பைக்கற்றுக்கள் அடங்கிய 1750 உறைகள் 02 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் விடுவிக்கப்படாமல் அநுராதபுர புகையிரபெட்டியில் வைப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. புகையிரத பெட்டியில் திரிபோஷா காணப்பட்ட காலத்தில் காணப்பட்ட செல்சியஸ் 45 ஆன வெப்பநிலையில் திரிபோஷாக்களின் தரத்தன்மை குறைவடைவதற்கான ஆபத்து காணப்பட்டது. குறித்துரைத்த காலத்தில் புகையிரப்பெட்டிகளில் திரிபோஷா இருப்புக்களை அகற்றாமையனால் தாமதக் கட்டணமாக ரூபா 1,080,000 தொகை புகையிரத திணைக்களத்திற்கு செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அது பூர்த்தி செய்யப்பட்டு அறிக்கை வழங்கப்பட்ட பின்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும். சில காலமாக திரிபோஷா பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளை வெற்றிகரமான மேற்கொள்ளாதிருந்தமைக் கு கணக்காய்வினால் வழங்கப்பட்ட அவதானிப்புக்களுக்கு நன்றி தெரிவிப்பதுடன் திரிபோஷா பகிர்தளித்தலை முறைமைப்படுத்துவதற்கா க தேவையான நடவடிக்கை தற்போது கட்டியெழுப்பப்பட்டுள்ளது. | |
| (ஊ) | சுகாதார அமைச்சுக்குரிய மருத்துவ வழங்கல் பிரிவினால் கொழும்புக் கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து அநுராதபுரம் புகையிரத நிலையம் வரைக்கும் 2023 பெப்பரவரி முதல் யூன் வரையான காலப்பகுதியில் பல்வேறு சந்தர்ப்பங்களின் போது வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக அனுப்பப்படுகின்ற மருந்து இருப்புக்கள் அநுராதபுரம் புகையிரத நிலையத்தில் புகையிரதக் கட்டணம் | புகையிரத பெட்டிகளின் மூலம் மருத்துவ வழங்கல்கள் சத்திரசிகிச்சை இருப்புக்கள் பகிர்ந்தளிப்பதை விட பிரயோக ரீதியில் அல்லாதிருந்தமை கூறப்பட்ட போதிலும் அரசாங்கத்திற்கு மிகவும் நலன் வாய்ந்த மற்றும் இலகுவான முறையாக இது இருந்ததுடன் உரிய இருப்புக்களை பகிர்ந்தளிப்பதற்காக மருத்துவ வழங்கல் பிரிவின் லொறி வண்டி | நாடு முழுவதும் மருந்துவ வழங்கலை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளை முறைமைப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தி விடுவிக்கும் காலப்பகுதிக்குரியதாக பொறுப்பு வாய்ந்த சுகாதார நிறுவனத்தால் அகற்றப்படாமையினால் புகையிரத திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய தாமதக்கட்டணங்களின் கூட்டுப்பெறுமதி ரூபா 4,603,900 ஆகும். அவ்வாறே இந்த மருந்து இருப்புக்கள் 02 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் செல்சியஸ் 45 இற்கு அதிக வெப்பநிலையில் புகையிரத பெட்டிகளில் அகற்றப்படாமல் வைக்கப்பட்டதன் காரணமாக இந்த மருந்துகளின் தரத்தன்மை குறைவடையும் ஆபத்துக்களும் அவதானிக்கப்பட்டது. | போதியளவில் இல்லாதிருந்தமை உரிய நிறுவனங்களின் வருடாந்த மதிப்பீட்டுக்கு உரிய இருப்பு எடுத்துச் செல்லாமையின் காரணமாக களஞ்சியப் பிரிவுகளில் கணிசமான இருப்பு ஒன்று சேர்கின்றமை, கிடைக்கின்ற இருப்புக்கள் களஞ்சியப்படுத்துவதற்கு இடவசதிகள் போதியளவிற்கு இல்லாமை இருப்புக்கள் புகையிரதப் பெட்டிகளின் மூலம் உரிய நிறுவனங்களுக்கு அனுப்பபடுகின்றமை எனினும் காணப்படுகின்ற பிரச்சனைகளை மாற்றியமைக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவ வழங்கல் மற்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (எ) | உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் மருத்துவ உபகரணங்களுக்காக முறையான உயிரியல் தரவுகளுடன் சேவை உடன்படிக்கை பேணிச்செல்லப்பட்டிருக்கவில்லை. மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்த பின்னர் வழங்குனருக்கு வழங்கப்பட்டுள்ள உத்தரவாத காலம் முடிவடைந்த பின்னர் | மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்தல் உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைப் பிரிவின் மூலம் வைத்தியசாலைகளினாலும் மேற்கொள்ளப்படுவதுடன் மருத்துவ உபகரணங்களுக்குரிய கொள்வனவு உரிய கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பத்தின் போது உரிய கேள்வி | சகல சுகாதார நிறுவனங்களுக்காகவும் சகல மூலங்களின் மூலமும் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் நன்கொடையாகக் கிடைக்கின்ற மருத்துவ உபகரணங்கள் தொடர்பாக சகல தகவல்களையும் உள்ளடக்கிய முறையான தரவு முறைமையொன்றை பேணிச்செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் |

பராமரிப்பு சேவை உடன்படிக்கைகளை ஆரம்பிப்பதற்கு உரிய மருத்துவ உபகரண ஆவணப்படுத்தப்பட்ட தரவுகள் காணப்படாமையினால் சகல மருத்துவ உபகரணங்களுக்காகவும் பராமரிப்பு மற்றும் சேவை உடன்படிக்கை அமுல்படுத்துவதற்குரிய கணனி மயப்படுத்தப்பட்ட தரவு முறைமையொன்றின் தேவை இனங்காணப்பட்டு ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்ததுடன் உயிரியர் மருத்துவ பொறியியல் சேவை பிரிவு 42 வைத்தியசாலைகளுக்காக 2023 ஆம் ஆண்டில் புதுப்பிக்க வேண்டியிருந்த போதிலும் பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் சேவை உடன்படிக்கையின் கீழ் கைச்சாத்திடுவதற்காக தேவையான நிதியேற்பாடு ரூபா 1,647.3 மில்லியன் வழங்கப்பட்ட போதும் அந்த நிதியேற்பாட்டின் அடிப்படையில் கைச்சாத்திடப்பட்ட பராமரிப்பு மற்றும் சேவை உடன்படிக்கை தொடர்பான தகவல்கள் உயிரியல் மருத்துவ பொறியில் பிரிவிடம் காணப்படவில்லை. உயிரியல் மருத்துவ பொறியில் சேவைப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டிற்கான பராமரிப்பு மற்றும் சேவை உடன்படிக்கை Excel sheet தரவின் பிரகாரம் 548 சேவை உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படாதிருந்த மருத்துவ உபகரணங்கள் எண்ணிக்கை 234 அதாவது மொத்த எண்ணிக்கையில் ஆவணங்களில் சேவை மற்றும் பராமரிப்பு விலைகள் உள்ளடக்கப்பட்ட அந்த விலையின் அடிப்படையில் எதிர்வரும் ஆண்டுகளில் சேவை மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உதவிகளினாலும் மருத்துவ உபகரணங்கள் வைத்தியசாலைகளுக்கு கையளிக்கப்படுகின்றது. அந்த உதவிகளாக கிடைக்கின்ற மருத்துவ உபகரணங்களுக்காக அவ்வாறு சேவை மற்றும் பராமரிப்பு கூறு விலைகள் காணப்படாமையினால் எஞ்சியிருந்த சேவை மற்றும் பராமரிப்பு மிகுதி சேவை மற்றும் பராமரிப்புகள் செய்து கொள்ளும் போது பிரச்சனைகள் எழுந்திருந்தது. எனினும் காணப்படுகின்ற தகவல்களின் அடிப்படையாகக் கொண்டு சேவை மற்றும் பராமரிப்பு உடன்படிக்கை வைத்தியசாலை மட்டத்திலும் எமது பிரிவினாலும் முறையான பிரகாரம் பேணிச் செல்லப்படுவதுடன் எதிர்காலத்தில் தகவல்தரவு முறையொன்றை வடிவமைப்பதற்கு பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டமையால் சகல தகவல்களையும் உள்ளடக்கிய தரவு முறைமையொன்றை பேணிச் செல்லக்கூடியதாக வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | 43 சதவீதமாக இருந்தது. | இருக்கும். | |
| (ஏ) | மகரகம அபேக்ஷா வைத்தியசாலையால் 2020 ஆம் ஆண்டில் சனவரி மாதம் தயாரிக்கப்பட்டிருந்த அளவிடைத் திட்டம் (Survey Plan) இன் பிரகாரம் அபேக்ஷா வைத்தியசாலையின் கட்டிடம் அமைந்து காணப்படுகின்ற காணி 14 ஏக்கர் 03 றூட் 2.70 பேர்ச் பரப்பளவை உடையதாக இருந்தது. எனினும் இந்த அளவிடல் தயாரிக்கும் வரையிலும் இந்த காணிக்குரிய உரித்துறுதி வைத்தியசாலைக்கு சொந்தமாகக் காணப்படாதிருந்தமையால் அளவிடைத் திட்டத்தின் மூலம் இனங்காணப்பட்ட காணியின் பரப்பளவு சரியானதா என உறுதிப்படுத்தப்படவில்லை. அவ்வாறு வைத்தியசாலைக்கு நன்கொடை உரிதுறுதியின் மூலம் கிடைத்த 02 றூட் அளவான பெலன்கஹகும்புர என்ற பெயருடைய காணிக்குரிய உரித்துறுதியும் தொலைந்து போயிருந்ததுடன் இந்த காணியின் எல்லையும் தீர்த்து வைக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. | இந்த வைத்தியசாலையின் உரித்துறுதி தற்போது தொலைந்து போய் உள்ளமையால் உரித்துறுதியின் பிரதியொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் சட்ட உத்தியோகத்தருக்கு தேவையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. தேவையான மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்காக மகரகம பிரதேச பிரதேச செயலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக வைத்தியசாலைக்கு நன்கொடை மூலம் வழங்கப்பட்டுள்ள காணிக்கூறுகளின் உரித்து மற்றும் அதன் எல்லைகளை தீர்த்து வைப்பதற்காக சட்ட உத்தியோகத்தருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. அதனால் வைத்திசாலையின் பிரதான உரித்துறுதி தயாரிக்கும் பணிகள் மற்றும் வைத்தியசாலைக்கு நன்கொடை மூலம் வழங்கப்பட்டுள்ள பெலன்கஹகும்புர பெயருடைய காணிக்குரிய உரித்துறுதியின் பிரதிகளை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | இது தொடர்பான முறையான முழுமையான விசாரணை மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் இந்தக் காணியினை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | மகரகம அபேக்ஷா | உரிய குளிரூட்டல் | இது தொடர்பான |

வைத்தியசாலையினால் மருந்துளை களஞ்சியப்படுத்துவதற்காக குளிரூட்டி கொள்கலன் ஒன்று ரூபா 5,439,108 கிரயம் ஒன்றைச் செய்து 2018 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வைத்தியசாலை வளவில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த குளிரூட்டல் கொள்கலன் வைத்தியசாலையின் தேவைகளுக்கு இணங்க தயாரிக்கப்படாதிருந்ததாக குறிப்பிடப்பட்டு மருந்தாளர்களினால் தொடரச்சியாக அந்த மருந்துகளை களஞ்சியப்படுத்தல் நிராகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மருந்தாளர்களின் தேவையினை கவனத்தில் கொண்டு மேலும் ரூபா 2,679,794 கிரயம் ஒன்றைச் செய்து நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகள் 2022 நவம்பர் 28 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பான தொழில்நுட்ப அறிக்கையொன்றை பெற்றுக்கொள்ளல் 16 மாதம் அளவில் தாமதிக்கப்பட்டு 2024 மார்ச் 25 ஆந் திகதி பெறப்பட்டிருந்தது. எனினும் 2024 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை வைத்தியசாலையினால் அந்த மருந்துகளைக் களஞ்சியப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதனால் ரூபா 8,118,902 கிரயம் ஒன்றைச் செய்து ஸ்தாபிக்கப்பட்ட இந்த குளிரூட்டல் கொள்கலன் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் கொள்கலன் ஆரம்பத்தில் ஸ்தாபிக்கப்பட்ட போது மருந்துகளை களஞ்சியப்படுத்துவதற்கு இன்னும் மாற்ற வேண்டிய சில தேவைகள் இருந்ததாக மருந்தாளர்களினால் அறிவிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக நடவடிக்கைகள் கேள்வி கோரி கையளிப்பதற்கு 15 மாதகாலம் கடந்திருந்தது. அதன் பிரகாரம் சேவைப் பராமரிப்பு உடன்படிக்கை பிரதான மிகை குளிரூட்டி இயந்திரம் மற்றும் மேலதிக மிகைக் குளிரூட்டி இயந்திரம் பரிமாற்றல் போன்ற விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் இந்த குளிரூட்டல் கொள்கலன் கையேற்பதற்கு மருந்தாளர்கள் விருப்பம் தெரிவித்திருந்தனர்.

குறைபாடுகளை சரிசெய்த பின்னர் இந்தக் குளிரூட்டி கொள்கலனில் மருந்துகளைக் களஞ்சியப்படுத்துவதற்காக மருந்தாளர்களுக்கு கையளிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

முறையான முழுமையான விசாரணை மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் இவ்வாறான நிலைமையை தடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

காணப்பட்டது. 2024 பெப்ரவரி வரையிலும் அதனை பயன்படுத்துவதற்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | களுத்துறை போதனா வைத்தியசாலைக்கு சார்ந்ததாக ஸ்தாபிக்கப்பட்ட கிணறுகளில் பொருத்தப்பட்டிருந்த நீர்ப்பம்பி செயலிழந்து நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகால் அமைப்பு சபையின் நீர் ஊடாக நீரினைப் பெற்றுக்கொள்வதற்கு வைத்தியசாலை பணிப்பாளர்கள் எடுத்த தீர்மானத்தின் காரணமாக 2023 சனவரி மாதம் முதல் 2023 ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதிக்குரிய மாதாந்த நீர்ப்பட்டியல் ரூபா நான் லட்சம் முதல் பத்து லட்சம் வரையான வீச்சில் அதிகரித்திருந்தது. இதன் காரணமான இந்தக் காலப்பகுதிக்குரியதாக அரசாங்கத்திற்கு ரூபா 30 இலட்சம் வரையிலான நட்டம் ஏற்பட்டிருந்தது. | 2023 பெப்ரவரி முதல் மே வரையான காலத்தில் நீர்ப்பட்டியல் அதிகரித்தமை தாக்கமளித்த போதும் பிரதான விடயமாக இந்த காலத்தில் மழை வீழ்ச்சி குறைவடைந்த காலப்பகுதியாக இருந்தமையால் கிணற்று நீர் விரைவாக குறைவடைந்திருந்தது. இதன் காரணமாக 2023.03.03 ஆந் திகதி நீர் பரிசோதிக்கப்பட்டது. இந்த நீர் குடிப்பதற்கு பொருத்தமற்ற நிலையில் காணப்படுவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. மீண்டும் 2023 மே மாதம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது இந்த நீர் பயன்படுத்துவதற்கு பொருத்தமானது என அறிக்கையிடப்பட்டிருந்தது. அதனால் 2023 சனவரி முதல் ஏப்ரல் மாத இறுதி வரையான காலத்தில் கிணற்று நீர் பயன்படுத்தல் நிறுத்தப்பட்டு குழாய் நீர் பயன்படுத்தப்பட்டிருந்தது. நிலக்கீழ் நீர்க்கசிவு மற்றும் இந்தக் காலத்தில் மழை வீழ்ச்சி குறைவடைந்தமையால் வைத்தியசாலை வளவில் உள்ள பூமரங்களுக்காகவும் நீர் பாய்ச்ச வேண்டி ஏற்பட்டிருந்தது. | இது தொடர்பாக முழுமையாக முறையாக பரிசோதனை மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளல்**

**4.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுதலின் செயல்முன்னேற்றம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுகாதார அமைச்சுக்குரிய நிலைபேறான அபிவிருத்திக் குறிகாட்டிகள் 31 இனங்காணப்பட்டிருந்ததுடன் அதில் 13 குறிகாட்டிகளுக்காக மீளாய்வாண்டுக்குரிய செயல் முன்னேற்றம் அறிக்கையிடப்படவில்லை. செயல்முன்னேற்ற அறிக்கையிடப்பட்ட 12 குறிகாட்டிகளுக்குத் தேவையான செயலாற்றல் மட்டத்தில் அடையப்பட்டிருக்கவில்லை | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளில் சில பெறுமதிகள் நிலையான பெறுமதிகளாக இருந்ததுடன் இதற்காக மீளாய்வு கூட்டம் சில தடவைகளில் உரிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுடன் நடாத்தப்பட்டிருந்தது. அதன் போது சில காரணங்கள் நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைந்து கொள்வதற்காகவும் ஏனைய இலக்குகளை பூர்த்தி செய்கின்ற நிறுவனம் உதாரணமாக (சுகாதார அமைச்சு அல்லாத) இது மற்றும் இது தொடர்பாக மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கும் கலந்துரையாடப்பட்டது. இதற்காக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே நிகழ்ச்சித் திட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்காக சவாலாக மனித வள பற்றாக்குறை காணப்பட்டது. அவ்வாறே Covid- 19 மற்றும் நாட்டின் பொருளாதார நிலைமையும் தாக்கமளித்திருந்தது. | 2030 ஆம் ஆண்டு வரையில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்காக வருடாந்தம் பின்தொடர் நடவடிக்கைகளைச் செய்து தேவையான செயல்முன்னேற்றத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**5. மனிதவள முகாமைத்துவம்**

### 5.1 நியமிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படுகின்ற சகல வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்கள் மற்றும் மாகாண சுகாதார சேவைக்குரிய வைத்தியசாலைகள் மற்றும் சகல ஏனைய சுகாதார நிறுவனங்களுக்கும் உரிய இறுதித்தடவையாக தயாரிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2023 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு சம்பள படிநிலையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட ஒட்டுமொத்த பதவியணியினர் 95,948 மற்றும் அத்திகதியில் உள்ளபடியான பதவியணியினர் 81,915 ஆகும். ஆதன் பிரகாரம் ஒட்டுமொத்த பதவியணியினரில் 14,033 வெற்றிடம் காணப்பட்டது. எனினும் வைத்தியசாலை, நிறுவனம் மற்றும் பிரிவுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட பதவியணியினர் தவகல்களின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 95,950 வும் உள்ளபடியான பதவியணியினர் 81,904 ஆக இருந்ததுடன் வெற்றிடங்கள் 14,046 ஆகும். டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக 2017 ஆம் ஆண்டின் போது ஒப்பந்த அடிப்படையின் கீழ் முறையற்ற வகையில் சேர்க்கப்பட்ட கள நுளம்பு ஒழிப்பு உதவியாளர்கள் 1,103 பேர்கள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் பதவியணியினர்கள் தகவல்களில் 05 பதவிகள் மாத்திரமே உள்ளடக்கப்பட்டிருந்தது. | ஒவ்வொரு நிறுவனத்திலும் காணப்படுகின்ற வெற்றிடங்கள் மற்றும் மிகைகள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுத்து உரிய பிரிவுகளின் தலைவர்கள் மற்றும் நிறுவனத் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கைகளை செயற்திறனாக நடாத்திச் செல்வதற்காக அத்தியாசியமான பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் அந்த வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியை விஞ்சாத வகையில் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களை நியமித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாதாந்தம் ரூபா 27,000 அளவிலான படியொன்றின் கீழ் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட இந்தப் பதவிகளின் எண்ணிக்கைக்காக முறையான அங்கீகாரம் 2024 மார்ச் வரை பெறப்பட்டிருக்கவில்லை.<br>கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 49 பதவிகளுக்குரிய 14,307 உத்தியோகத்தர்களின் வெற்றிடம் காணப்படும் போது 2,942 உத்தியோத்தர்கள் மிகையாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மிகை மற்றும் வெற்றிடம் காணப்பட்ட பதவிகளுக்கு மேலதிகமாக மேலும் 201 பதவிகளுக்குரிய 2,932 உத்தியோகத்தர் பதவியணியில் வெற்றிடம் காணப்பட்டது. அவ்வாறே மிகை மற்றும் வெற்றிடமாக காணப்பட்ட பதவிகளுக்கு மேலதிகமாக மேலும் 26 பதவிகளுக்குரிய 283 உத்தியோகத்தர் பதவியணியில் மிகை காணப்பட்டது.<br>முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் 2017 நவம்பர் 07 ஆந் திகதி அமைச்சிற்கு பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்) பெயரில் இலங்கை திட்டமிடல் சேவையின் தரத்தில் ஒருபதவியொன்றுக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் அந்தப் பதவியை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண சபைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் சில பதவிகளில் ஊழியர்களின் வெற்றிடம் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. இந்த வெற்றிடம் காணப்படுகின்ற பதவிகளுக்கிடையே 22 பதவிகளுக்குரிய 13,868 | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | பதவியணியினர் வெற்றிடங்கள் காணப்பட்டது. சுகாதார சேவையில் தரமான சேவையை பாதுகாப்பதன் மூலம் பொதுமக்களுக்கு மிகவும் சிறந்த சேவையினை வழங்குவதை உறுதிப்படுத்தும் வகையில் இந்த பதவிகளில் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கான தேவை வெளிப்படுத்தப்பட்டது. | | |
| (இ) | சுகாதார சேவைகள் திணைக்களத்தின் விசேட வைத்திய நிபுணர்களின் எண்ணிக்கையை மீள்திருத்துதல் (உத்தேசிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 2015 வரை) தொடர்பாக சுகாதார பாதுகாப்பு மற்றும் போசனை அமைச்சரினால் 2019 ஆகஸ்ட் 21 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை குறிப்பிற்கு 2010 சனவரி 10 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இந்த அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்ட முறையில் நாட்டில் விசேட வைத்திய நிபுணர்களை பயிற்றுவித்தல், சேவையில் ஈடுபடுத்துதல் மற்றும் 2020 ஆம் ஆண்டின் முன்னர் புதிய நிலைமைக்கு ஈடுகொடுக்கின்ற வகையில் தேவையான திருத்தங்களுக்காக அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. | 2024.01.03 ஆந் திகதிய CA/AQ/FCC05/INFO/ 2023/42 என்ற பதில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் எதிர்கால தேவைக்கு ஈடுகொடுக்கின்ற வகையில் விசேட நிபுனத்துவ வைத்தியர்களை பயிற்சி அளிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | ஒட்டுமொத்த சுகாதார சேவைகளுக்காகவும் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள விசேட வைத்திய நிபுனர்கள் தொடர்பான தகவல்களுடன் மேற்கொள்ளப்பட்ட | | |

பரிசோதனையின் போது அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் 58 விசேட துறைகளுக்குரிய அங்கீகரிக்கப்பட் விசேட நிபுணத்துவ வைத்தியர்களின் எண்ணிக்கை 2837 ஆக இருந்த போதும் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 50 விசேட துறைகளுக்குரிய அந்த எண்ணிக்கை 2740 ஆக இருந்தது. விசேட வைத்திய நிபுணர்களில் 08 துறைகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட 66 பதவிகளுக்காக எந்தவொரு வைத்தியரும் நீக்கப்படாதிருந்தமையும் இரண்டு விசேட துறைகளுக்குரிய அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்த பதவிகளின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்ட பதவிகளின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கைக்கு இடையே 31 பதவிகளில் வேறுபாடு காணப்பட்டமையும், அமைச்சரவை அங்கீகரித்த பதவிகளின் எண்ணிக்கையடன் ஒப்பிடும் போது 2023 ஆம் ஆண்டின் நவம்பர் வரையும் 35 விசேட துறைகளுக்குரிய விசேட வைத்திய நிபுணர்கள் 972 பேர்கள் பற்றாக்குறை காணப்பட்டமையும் 35 விசேட துறைகளுக்குரிய விசேட வைத்திய நிபுணர்கள் 972 பற்றாக்குறை காணப்படும் போது 12 விசேட துறைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் பதவிகளின் எண்ணிக்கையை விட விசேட நிபுணத்துவ வைத்தியர்கள் 113 பேர் மிகையாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.
அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்த சந்தர்ப்பத்தின் போது இனங்காணப்படாதிருந்த மற்றும் பின்னர் அந்த விசேட துறைகளுக்காக விசேட நிபுணத்துவ வைத்தியர்களின்

சேவை ஈடுபடுத்துவதற்காக முறையான அங்கீகாரமேனும் பெறப்படாமல் 12 விசேட துறைகளில் 141 விசேட வைத்திய நிபுணர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுத்தப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. ஆவ்வாறே அமைச்சின் திட்டமிடல் பிரிவினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 2023 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தகவல்களின் பிரகாரம் மத்திய அரசாங்கத்தின் வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிலையங்களின் கீழ் 2023 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட விசேட வைத்திய நிபுணர்களின் எண்ணிக்கை 2018 ஆகவும் உள்ளபடியான எண்ணிக்கை 1915 ஆகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் மூன்றாம் நிலை சிகிச்சைப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2023 நவம்பர் வரையில் மத்திய அரசாங்கத்தின் வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற விசேட வைத்திய நிபுணர்களின் எண்ணிக்கை 1618 ஆக இருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. திட்டமிடல் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2023 யூன் 30 இல் உள்ளவாறு வைத்தியசாலைகள் / 50 நிறுவனங்களின் விசேட வைத்திய நிபுணர்கள் 226 பேர் பற்றாக்குறையாக காணப்பட்டனர். இவ்வாறே விசேட வைத்திய நிபுணர்கள் 226 பேரின் பற்றாக்குறை காணப்படும் போது வைத்தியசாலைகள் / 23 நிறுவனங்களின் 123 விசேட வைத்திய நிபுணர்களின் மிகை காணப்பட்டது. அமைச்சரவை

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பின் பிரகாரம் அத்திகதில் அங்கீகரிக்கப்பட்ட 971 விசேட வைத்திய நிபுணர்களின் எண்ணிக்கை 2837 வரை 2015 ஆம் ஆண்டு வரையில் அதிகரித்துக்கொள்வற்கு அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததுடன் இந்த விசேட வைத்திய நிபுணர்களின் எண்ணிக்கை விசேட துறைகளின் பிரகாரம் மற்றும் வைத்தியசாலைகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட இணைப்பாக அமைச்சரவை குறிப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தது. எனினும் அமைச்சினால் இந்த 2837 ஆன விசேட வைத்திய நிபுணர்களின் எண்ணிக்கை பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையாகக் கருதி விசேட துறைகளாக கருதாமல் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | | |
| (உ) | அமைச்சு திட்டமிடல் பிரிவினால் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் குறைநிரப்பு மற்றும் துணை மருத்துவ சேவைக்குரிய சேவைகளில் 14 சேவைகளுக்குரிய 2023 யூன் 30 இல் உள்ளவாறு மாகாண சபையின் கீழும் மத்திய அரசாங்கத்தின் கீழும் சேவையாற்றுவதாக காண்பிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 17,238 ஆக இருந்ததுடன் பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம் 3) இனால் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அந்த ஊழியர்களுக்குரிய 2023 யூன் 30 இல் உள்ளவாறு மாகாண சபையின் கீழும் மத்திய அரசாங்கத்தின் கீழும் சேவையாற்றுகின்றதாக காண்பிக்கின்ற ஊழியர்களின் | பிரதிப் பணிப்பாளர் திட்டமிடல் பிரிவினால் 06 மாதங்களுக்கு ஒருதடவை ஒட்டுமொத்த பதவியணியினர் தகவல்கள் நாளது வரையாக்கப்பட்டுள்ளது. துணை மருத்துவ சேவைக்குரிய நாளதுவரையாக்கப்படுகின்ற பதவியணியினர் தகவல்கள் கிளைகளின் தேவையின் அடிப்படையில் மாத்திரம் மேற்கொள்ளப்படுவதுடன் சேவையை விட்டுச்செல்வதாக கோருதல், ஓய்வு பெற்றுச் செல்லுதல் இடம் மாற்றம் போன்ற சந்தர்ப்பங்கள் | அமைச்சின் கீழ் காணப்படுகின்ற சகல சேவைகளுக்கும் உரிய முறையான மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட தகவல் முறைமையொன்று பேணிச் செல்லப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எண்ணிக்கை 6,418 ஆகும். அதன் பிரகாரம் இரண்டு பிரிவுகளினாலும் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் ஒன்றுக்கொன்று பரஸ்பர வேறுபாடாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | காரணமாக ஊழியர் எண்ணிக்கைத் தகவல்கள் பிரதிப்பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்) பிரிவின் தகவலுடன் இணக்கம் செய்யும் போது வேறுபாடு ஏற்பட முடியும். | |
| (ஊ) | கடந்த சில ஆண்டுகளில் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட புதிய பிரிவுகள் மற்றும் காணப்படுகின்ற பிரிவுகளின் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கு இணையாக போதனா வைத்தியசாலைகளில் தரத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள களுத்துறை போதனா வைத்தியசாலைக்கு தேவையான பதவியணியினரை அதிகரித்துக் கொள்வதற்கு பல சந்தர்ப்பங்களின் போது கோரப்பட்டிருந்தது. 2018 செப்தெம்பர் 25 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகாரம் வழங்கப்பட்ட பதவியணியினரின் அளவினை அதிகரித்துக்கொள்வதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டின் பின்னர் பல சந்தர்ப்பங்களின் போது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை அதிகரித்துத் தருமாறு கோரி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அதிகமான கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதும் இது வரை பதவியணியினர் திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய தேவைகளை அமுல்படுத்துதல் வேண்டும். |